பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2035 மார்கழி 08 வியாழக்கிழமை (23.12.2004) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் 27

## நேற்று இரண்டாவது மனித சங்கிலிப் போராட்டம்

## கைதடியில் ஒன்று திரண்ட மக்கள் வான் அதிர உரிமைக் கோஷம்!

-உதயன் கைதடிச் செய்தியாளர்-

சமாதான முயற்சிகளைத் துரிதப்படுத்துமாறு கோரியும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை விடுதலைப் புலிகளிடம் வழங்குமாறும் கேட்டும் அரசு மேற்கொண்டு வரும் யுத்த ஆயத்தங்களைக் கண்டித்தும் நேற்றுக் கைதடியில் மாபெரும் மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்று இரண்டாவது தடவையாக இந்தச் சங்கிலிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தென்மராட்சிப் பொது அமைப்புகளின் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மனித சங்கிலிப் போராட்டம் நேற்றுக் காலை 10 மணிக்கு கைதடிச் சந்தியில் உள்ள எரிபொருள் நிலையத்திற்கு அண்மையில் ஆரம்பமாகியது.

கைதடி ,நாவற்குளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சனமூக நிலையங்களின் உறுப்பினர்கள், பொதுமக்கள், வர்த்தகர்கள், கூட்டுறவு ஊழியர்கள், பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்கள் உட்பட பல நூற்றுக் கணக்கானோர் அந்நேரம் ஒன்று கூடி வீதியின் இருமருங்கும் கை கோர்த்த வண்ணம் நின்று "எமது நிலம் எமக்கு வேண்டும்" "எங்கள் தலைவன் பிரபாகரனே" என்ற கோஷங்கள் முழங்கின.

இவர்களோடு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் மக்களோடுமக்களாக கைகோர்த்து நின்றனர். சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் கடும் வெயிலையும் பொருட்படுத்தாது ஒரு மணிநேரம் இந்த மனிதச் சங்கிலிப் போராட்டம் நடந்தது.

(16 ஆம் பக்கம் பார்க்க)




ஒன்று திரண்டு உரிமைக் கோஷமிடும் மக்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும்...

படங்கள் - அலுவலகப் படப்பிடிப்பாளர்

# அரசு முன்வைத்த நிகழ்ச்சிநிரலை

# புலிகள் அமைப்பு நிராகரிக்கிறது!

## அதுபற்றிய விவரம் விரைவில் பாலசிங்கம் மூலம் அரசுக்கு

கிளிநொச்சி,டிசெம்பர்23

**அமைதிப்பேச்சுக்களை மீளத் தொடங்குவதற்காக இலங்கை அரசு ஆகப்பிந்தி முன்வைத்த நிகழ்ச்சி நிரல் யோசனையில் திட்டவட்ட ஏற்பாடுகளோ, தெளிவோ இல்லை. அதனால், அந்த நிகழ்ச்சி நிரல் யோசனையை புலிகள் ஏற்பதற்கான வாய்ப்புகளும் இல்லை. அந்த யோசனைகளை நிராகரிக்கும் புலிகளின் பதில் ஓரிரு தினங்களில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் மூலம் நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக அரசுத் தரப்புக்கு அனுப்பிவைக்கப்படும் எனத் தெரிகிறது.**

கடந்த திங்களன்று லண்டனில் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கத்தைச் சந்தித்த நோர்வே அனுசரணைக் குழுவின் பிரதிநிதிகளான எரிக் சொல்ஹெய்மும், நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு இலங்கை அரசுத் தரப்பு முன்வைத்த நிகழ்ச்சிநிரல் யோசனையொன்றை அவர் முன் சமர்ப்பித்திருந்தனர்.

அதனை மதியுரைஞர் பாலசிங்கம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பரிசீலனைக்கு உடன் அனுப்பியிருந்தார்.

பேச்சை ஆரம்பிப்பதற்கான அடிப்படை விடயங்கள் சம்பந்தமாக அந்த நிகழ்ச்சி நிரலில் திட்டவட்டமான ஏற்பாடுகளோ, ஒழுங்கோ, தெளிவோ இல்லை என்று புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகள் வலியுறுத்தி வருகின்றனர். கடந்த பொதுத் தேர்தல் ஊடாக தமிழ்மக்கள் ஏக மனதாக வழங்கிய ஆணையும் அதுவே.

ஆனால், அரசு தற்போது சமர்ப்பித்துள்ள நிகழ்ச்சி நிரல் யோசனையில் இந்த விடயம் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தப்படவில்லை. இடைக்கால ஏற்பாடு பற்றிய பேச்சுக் குறித்தே அந் நிகழ்ச்சிநிரலில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

இடைக்கால ஏற்பாடுகள் தொடர்பாக

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் நேற்றும் இளைஞர் சுட்டுக்கொலை!

காத்தான்குடி, டிசெ.23

மட்டக்களப்பு நகரப் பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் அந்த இடத்திலேயே பலியானார்.

இச்சம்பவம் பிற்பகல் 1.15 மணியளவில் இடம்பெற்றது என மட்டக்களப்பு மாவட்டத் தலைமையகப் பொலீஸ் அத்தியட்சகர் ஹரிச்சந்திர பண்டார தெரிவித்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி நேற்று லண்டன் பயணம்

தனிப்பட்ட பயணமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க நேற்று லண்டன் பய[illegible]மானார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வருட இறுதி விடுமுறையைக் கழிப்பதற்காக லண்டன் செல்லும் ஜனாதிபதி அங்கு தமது பிள்ளைகளுடன் ஒருவாரகாலம் தங்கி

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அமெரிக்கா சரியாக அணுக வேண்டும்

### தமிழ் பேசும் மக்களின் அமையம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ.23

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை அமெரிக்கா சரியான முறையில் அணுக வேண்டும்.

இவ்வாறு மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான தமிழ் பேசும் மக்களின் அமையத்தின் இணைப்பாளர் சி.வீ.கே. சிவஞானம் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவருக்கு அனுப்பியுள்ள மகஜரில் வலியுறுத்தியுள்ளார்.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கடந்த 05.08.2004 ஆம் திகதி அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் பிராந்தியக் கட்டளைத் தளபதியின் யாழ்.குடாநாட்டு விஜயம் பற்றிக் குறிப்பிட்டு, அது பற்றி எமது கவலையைத் தெரிவித்திருந்தோம்.

எனினும், கடந்தவாரமும் அமெரிக்க இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்திருப்பது பற்றியும், அவர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## சுதுமலையில் கத்திக்குத்து; இளைஞர் ஒருவர் உயிரிழப்பு!

### மோட்டார் சைக்கிளில் வந்தோர் கைவரிசை

யாழ்ப்பாணம்,டிசெ.23

மானிப்பாய் - சுதுமலை அம்மன் கோவிலடியில் நேற்றுமாலை இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

கொக்குவில் உயரப்புலம் பகுதியைச் சேர்ந்த சீவரட்ணம் லவன் (வயது - 22) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவர்.

நண்பர்களுடன் கதைத்துக்கொண்டு நின்றவேளை, திடீரென அப்பகுதிக்கு மோட்டார் சைக்கிள்களில் வந்த இருவர் 'கிறிஸ்' கத்தி கொண்டு குறித்த இளைஞன் மீது பலமாகக் குத்தினர் என்று கூறப்பட்டது.

இதனால், நெஞ்சுப்பகுதியில் பலத்த காயத்துக்கு [illegible]ான

(16 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அமெரிக்க பாதுகாப்பு ஆய்வாளர்களின் குடாநாட்டு வருகைக்கு பலரும் கண்டனம்

யாழ்ப்பாணம்,டிசெ.23

அமெரிக்க அரசின் இராணுவ, அரசியல் ஆய்வாளர்கள் குடாநாட்டுக்கு இரகசிய விஜயம் மேற்கொண்டதைக் கண்டித்து குடாநாட்டிலுள்ள பொது அமைப்புக்கள் பலவும் கண்டன அறிக்கைகளை விடுத்துள்ளன.

அந்த அறிக்கைகள் வருமாறு:-

**பொது அமைப்புக்களின் ஒன்றியம்**

அமெரிக்கப் பாதுகாப்பு ஆய்வாளர்கள் யாழப்பாணக் குடாநாட்டுக்கு விஜயம் செய்து இங்குள்ள பாதுகாப்பு நிலைமைகுறித்து ஆராய்ந்துள்ளமையிட்டு யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாக கண்டனத்தை தெரிவிப்பதுடன், இது சார்பாக அறிககையையும், அமெரிக்க மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு அனுப்பிவைத்துள்ளது.

தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட போருக்கு முடிவுகட்டி நல்லெண்ண சூழ்நிலையில் மக்களின் இயல்பு நிலையில் இன நெருக்கடிக்கான பேச்சுக்கள் மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவே யுத்த நிறுத்தமும், புரிந்துணர்வு ஒப்பந்தமும் சிறிலங்கா அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மேற்கொள்ளப் பட்டது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டதற்கிணங்க அனைத்து காவல் அரண்களும், மக்கள் குடியிருப்பிலுள்ள இராணுவ அத்துமீறல்களும் படிப்படியாக அகற்றப்பட வேண்டும் என்பதே ஆகும். அதனால், எதிர்வு கூறப்பட்ட எதுவும் நடைபெறவில்லை. இது விடயமாக பாதிக்கப்பட்ட மக்களும் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுகின்ற பொது அமைப்புக்களும் பல போராட்டங்களை நடத்தி வருகின்ற இந்த வேளைகளில் யுத்தத்திற்கான முஸ்தீபு வேலைத்திட்டங்களை இலங்கை அரசின் அனுசரணையுடன் அமெரிக்க அரசின் இராணுவ அரசியல் ஆய்வாளர்கள் எமது தாயகப் பிரதேசத்திலுள்ள இராணுவ முகாம்களையும் காவல் அரண்களையும் பார்வையிட்ட நடவடிக்கையானது போர் மோகம்கொண்ட செயற்பாடாகவே கருதுகின்றோம்.

போர்நிறுத்த ஒப்பந்தம் சமாதான உடன்படிக்கையும் செத்துவிடுமோ என்ற அங்கலாய்ப்பில் எம்மக்களும் சர்வதேசமும் ஏங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அமெரிக்க வல்லாதிக்க அரசின் இராணுவ ஆய்வாளரின் இரகசிய விஜயம் சமாதானத்தின் மீதான நம்பிக்கையை இழப்பதுடன் மீண்டும் போர் ஏக்கம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுவருகிறது.

உலக நாடுகளின் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் அவர்களது ஜனநாயக உரிமைக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளும் அமெரிக்கா, தமிழீழ மக்களின் வாழ்வுரிமைக்கான போரில் சிறிலங்கா அரசுக்கு துணைபோவதையோ அல்லது ஆலோசனை வழங்குவதையோ உலகின் மனச்சாட்சிகள் இடங்கொடுக்கமாட்டாது என்பதை அமெரிக்க அரசு புரிந்துகொண்டு தமது நிலைப்பாட்டில் நல்ல முடிவை தோற்றுவிக்கவேண்டும். இதுவே இலங்கையில் நிரந்தர சமாதானத்தை தோற்றுவிக்கும். இதையே தமிழ் மக்களும் வேண்டிநிற்கிறார்கள்.

**பல்கலைக்கழக ஊழியர் சங்கம்**

போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடையும் தருணத்தில் போருமற்ற, சமாதானமுமற்ற காலப் பகுதியில் மக்களின் சுமூகநிலை தோன்றாத சூழலில் -

மீண்டும் போர் மூளாமல், சமாதானத்தை வலியுறுத்தி எமது மக்கள் ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக சாத்வீகமான முறையில் வெகுஜனப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும்வேளையில் -

உலக நாடுகள் பேச்சு மூலம் சமாதானத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருவது அனைவரும் அறிந்ததே.

இவ்வேளையில், அமெரிக்கப் பாதுகாப்பு ஆய்வாளர்கள் குடாநாட்டுக்கு இரகசியமாக வருகை தந்து இராணுவ முன்னரங்குகளுக்கு விஜயம் செய்து, பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்வது என்ற பெயரில் ஸ்ரீ லங்காவின் போர் நடவடிக்கைகளுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளிக்கும் வகையில் அவர்கள் ஈடுபட்டுள்ளதை, பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தவர்களாகிய நாம் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன், அதிருப்தியையும் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது.

**தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம்**

இலங்கை வாழ் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள், அன்றாடப் பிரச்சினைகள் பற்றி உலக நாடுகள் தெளிவாக அறிந்துள்ள போதிலும் அந்நாடுகளின் அறிக்கைகளிற்கும், செயற்பாடுகளுக்கும் இடையே பாரிய இடைவெளி காணப்படும் போக்கானது மீண்டும் ஒரு யுத்தத்திற்கு வழிவகுக்கும் என்பதனை நாம் தெளிவாக்க விரும்புகின்றோம்.

தமிழ் மக்களின் விடுதலைக்காக அவர்கள் அனுபவிக்க ஆசைப்படும் சுதந்திரத்திற்கான ஜனநாயகப் போராட்டங்கள் தோல்வியடைந்த நிலையில் ஆரம்பிக்கப்பட்ட ஆயுத ரீதியான விடுதலை போராட்டமானது, இன்று இரண்டு தசாப்தங்களைக் கடந்து மிகவும் பலமான நிலையில் ஒரு சமாதான சூழலைத் தோற்றுவித்துள்ளது. ஆனாலும், கூட பலகட்ட பேச்சுக்கள் முடிவடைந்த நிலையிலும் இலங்கைப் பெரும்பான்மைக் கட்சிகளின் ஆட்சி அதிகாரப் போட்டியாலும், தமிழ் மக்களை அழித்தொழிக்கவேண்டும் என்ற சிங்கள பேரினவாதத்தின் அடிப்படை கொள்கையினாலும் இனப்பிரச்சினைக்கு எந்தவித முடிவுமின்றி, தீர்வுமின்றி இன்று போரும் அற்ற, சமாதானமும் அற்ற சூழல் மக்கள் மத்தியில் போர்ப் பீதியை உருவாக்கிவிட்டுள்ளது.

குடாநாடெங்கும் சமாதானத்தை வலியுறுத்தி மக்கள் மனித சங்கிலிப் போராட்டங்களை நடத்துகின்ற இவ்வேளையில் சமாதானத்தையும் மக்களின் எதிர்பார்ப்புக்களையும் சிதறடிப்பதாகவே அமெரிக்கப்படை அதிகாரிகளின் வருகையும், முகமாலை முன்னணிக் காவல் நிலைகளைச் சென்று பார்வையிட்டமையும், சிறிலங்கா இராணுவத்திற்கான ஆலோசனைகளும் அமைகின்றன. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எனவே, அமெரிக்க அரசானது இவ்வகையான சமாதானத்தைப் பாதிக்கும் செயற்பாடுகளைக் கைவிட்டு உடனடியாக தமிழீழத் தேசிய தலைவர் தனது 2004 ஆம் ஆண்டு மாவீரர் நாள் உரையில் குறிப்பிட்டது போல இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க உண்மையான அழுத்தத்தினை சிறிலங்கா அரசிற்குக் கொடுக்க வேண்டும். இல்லையேல் தமிழ் மக்கள் தமது விடுதலைக்கான அவர்களது தன்மானத்தை நிலைநாட்டுவதற்காகத் தமிழீழத் தேசியத் தலைவரின் வழியிலே சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டியது தவிர்க்க முடியாமல் போய்விடும் - என்றுள்ளது.

(எ)

## திறந்த நிலையில் உணவு விற்பனை அதிகாரிகள் கைப்பற்றி அழித்தனர்

தென்மராட்சி,டிசெ.23

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் திறந்த நிலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்கள் சுகாதாரப் பகுதியினரால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

சுகாதாரப் பகுதியினர் சாவகச்சேரி நகர் மற்றும் நுணாவில் பகுதி வர்த்தக நிலையங்கள் மீது கடந்த மூன்றுதினங்களாக திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு வைககப்பட்டிருந்த திகதி காலவதியான பொருளகளும் கைப்பற்றி அழிக்கப்பட்டன.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான ம.கர்ணன், எஸ்.மணிவர்ணம் ஆகியோர் திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

(ப-117)

## முறைசாராக்கல்வி பரீட்சை முன் அறிவித்தபடியே நடைபெறும்

யாழ்ப்பாணம்,டிசெ.23

முறைசாராக்கல்வி- 2004 இற்கான இறுதிப் பரீட்சை ஏற்கனவே வழங்கப்பட்ட நேரசூசிகை அறிவுறுத்தலின் படி நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 4.30 மணிவரை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார். (ப-12)



யாழ். பல்கலைக்கழ ஊழியர் சங்கத்தின் 'சங்கநாதம்' நூல் வெளியீட்டு வீழா பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று நடைபெற்றது. இதில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸிடமிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் முதற் பிரதியை பெறுவதைப் படத்தில் காணலாம். (படம்: அலுவலகப்படப்பிடிப்பாளர்)

# அடுத்த வருட பொங்குதமிழுக்கு எழுச்சியுடன் முன்னெடுப்புகள்

## பல்கலை மாணவர் ஒன்றியத் தலைவர் உதயனுக்குத் தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.23

குடாநாட்டில் அடுத்த ஆண்டும் பொங்கு தமிழ் நிகழ்வினை எழுச்சியுடன் நடத்துவதற்கு யாழ்.பல்கலைக்கழகச் சமூகம் முன்னேற்பாடுகளைச் செய்துவருகின்றது என, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.செல்வக்குமார் 'உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

அடுத்த ஆண்டும் பொங்கு தமிழ் நிகழவை குடாநாட்டில் எழுச்சியுடன் கொண்டாடுவதற்கான முன்னேற்பாடுகள் தற்போது பல்கலைக்கழக சமூகத்தினால் என்றுமில்லாதவாறு இம்முறை மும்முரமான செயற்பாடுகளில் பல்கலை சமூகத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

"இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையினை விடுதலைப் புலிகளிடம் அரசு கையளிக்கவேண்டும்" என்னும் தொனிப்பொருளில் இம்முறை பொங்குதமிழ் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

பெரும்பாலும் அடுத்த ஆண்டு ஜனவரி மாத முற்பகுதியில் இது தொடர்பாக முக்கிய விடயங்களைத் தீர்மானிக்கும் ஆலோசனைக் கூட்டமொன்று நாளை வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் பிற்பகல் 3 மணியளவில் நடைபெறவுள்ளது - என்றார் அவர்.

(எ-13)

## கற்றல் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கக் கோரி

# சத்திரசிகிச்சை கற்கை மாணவர்கள் நேற்று துணைவேந்தர் அலுவலகத்தை முற்றுகை!

யாழ்ப்பாணம்,டிசெ.23

இடைநிறுத்தப்பட்டுள்ள சத்திர சிகிச்சை கறறல் செயற்பாடுகளை (Surgery Appointments) உடனடியாக ஆரம்பிக்கக்கோரி போராட்டம் நடத்தி வரும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் நேற்றுக் காலை துணைவேந்தரின் அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களின் சத்திர சிகிச்சை கல்விச் செயற்பாடுகள் கடந்த ஒருவார காலத்திற்கு மேலாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்றும் -

இதனைக் கண்டித்தே போராட்டத்தை நடத்திவருகின்றனர் என்றும் - சம்பந்தப்பட்ட மாணவர்கள் கூறினர்.

நேற்றுக்காலை துணைவேந்தரின் அலுவலகத்தை முற்றுகையிட்ட சுமார் முப்பதிற்கும் மேற்பட்ட மருத்துவ மாணவர்கள் தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வினைத் தருமாறு கோரினர்.

இதனையடுத்து யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் சத்திரசிகிச்சைக்கற்றல் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்கப்படும் என எழுத்து மூலம் உறுதிமொழி வழங்கினார் என்றும் - எனினும் மருத்துவ பீடாதிபதி இதுவிடயமான நிலைப்பாட்டை எழுத்து மூலம் வழங்க மறுத்துவிட்டார் என்றும் - போராடடத்தில் கலந்துகொண்ட மருத்துவபீட மாணவர்கள் தெரிவித்தனர்.-

தமக்குரிய தீர்வு கிடைக்கும்வரை போராட்டம் தொடரும் என்றும் - மாணவர்கள் கூறினர்.(எ-7)

# மாணவர் பேரவைப் பிரதிநிதிகள் இரண்டுபேர் நோர்வே பயணம்

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் பிரதிநிதிகள் இருவர் நேற்றுமுன்தினம் நோர்வே நாட்டுக்குப் பயணமாகியுள்ளனர். மூன்று மாதகால விஜயத்தை மேற்கொண்டு இவர்கள் நோர்வே சென்றுள்ளதாக மாணவர் பேரவையின் பொறுப்பாளர் ந.கண்ணன் தெரிவித்துள்ளார்.

நோர்வேயிலுள்ள தமிழீழ மாணவர் பேரவையின் பிரதிநிதிகளைச் சந்தித்துத் தாயகப் பகுதியின் எதிர்காலக் கல்விச்செயற்பாடுகள் மற்றும் மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் செயற்பாடுகள் ஆகியன தொடர்பாகவும் இவர்கள் கலந்துரையாடவுள்ளனர்.

இதேவேளை, நோர்வேயில் சுற்றுப்பயணத்தை முடித்த கையோடு புலம்பெயர்ந்து வெவ்வேறு நாடுகளில் இயங்கும் தமிழீழ மாணவர் அமைபபினரையும் சந்தித்து இவர்கள் கலந்துரையாடவுள்ளதாகவும் கண்ணன் மேலும் தெரிவித்தார். (ப-13)

# அனைத்து மக்களும் ஐக்கியப்படுவதன் மூலம் நிலையான சமாதானத்தை ஏற்படுத்தலாம்!

## அமெரிக்கப் பிரதித் தூதுவர் அட்வைஸி

கொழும்பு,டிசெ.23

அபிவிருத்திக்கு சமாதானம் அவசியம். சமாதானத்திற்கு பல்லின மக்களும் ஒத்துழைக்க வேண்டும். இத்தகைய ஒத்துழைப்பின் ஊடாக எதிர்பார்க்கும் சமாதானத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் கொழும்புக்கான அமெரிக்கப் பிரதித்தூதர் ஜேம்ஸ் அட்வைஸி.

தொழில்நுட்பக் கல்லூரிக்கான அடிக்கல் நட்டு விழாவில் குத்துவிளக்கேற்றும் அமெரிக்கத் தூதுவர்



திருமலையில் அமையவிருக்கும் தொழில் நுட்பக் கல்லூரிக்கு அமெரிக்க அரசு 40 ஆயிரம் அமெரிக்க டொலர் நிதி உதவியை வழங்கியுள்ளது. இத் தொழில் நுட்பக் கல்லூரிக்கான அடிக்கல் நாட்டு விழா நேற்றுமுன்தினம் திருமலையில் நடைபெற்றது. அதில் பங்குகொண்ட பிரதித்தூதர் மேலும் தெரிவித்ததாவது:- அபிவிருத்திக்கு சமாதானம் பிரதானம். அமெரிக்கா எப்போதும் சமாதானத்தை விரும்பு கறது. அதற்காக அது உழைத்து வருகின்றது.

இலங்கையிலும் சமாதானம் மலரவேண்டும். சமாதானப்பேச்சுக்கள் விரைவில் மீளவும் ஆரம்பிக்கப்படவேண்டும். இதற்குத் தேவையான ஒத்துழைப்பை அமெரிக்கா வழங்கும். இலங்கையில் அமெரிக்க உதவி வழங்குவது அங்கு சமாதானம் மலரவேண்டும் என்ற நோக்கத் திலாகும். பல்லின சமுதாய சூழலில் பன்மைத் துவம் நிலவும நாட்டில் மக்களுக்கிடையிலான ஐக்கியமும் சமாதான முயற்சியில் முக்கியமானது - என்றார். (க-8)

# ஈராக் மொசூல் நகரத் தாக்குதலில் 19 அமெரிக்கச் சிப்பாய்கள் பலி!

மொசூல்,டிசெ.23

ஈராக்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமெரிக்க இராணுவத்தளம் மீதான கிளர்ச்சித் தாக்குதலில் 19 அமெரிக்கச் சிப்பாய்களும், மூன்று பொதுமக்களும் கொல்லப்பட்டுள்ளனர். 72 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களில் அநேகர் அமெரிக்கப் படையினர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா தலைமையிலான படைகள், சதாம் ஹுசைனைப் பதவியில் இருந்து வெளியேற்றியதன் பின்னர் ஈராக்கில் அமெரிக்கப் படைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய தாக்குதல் இதுவாகும்.

ஈராக்கின் வடபகுதியான மொசூல் நகரத்தில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் ஏராளமான மோட்டார்க் குண்டுகள் பயன்படுத்தப்பட்டன என்று அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால், இந்தத் தாக்குதலின் பின்னணியில் தற்கொலைக் குண்டுதாரிகள் இருந்தனர் என்று கிளர்ச்சிக் குழுவொன்று தெரிவித்துள்ளது.

பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் மேற்கொண்ட ஈராக்கிற்கான முதலாவது வரலாற்று முக்கியத்துவம்மிக்க சுற்றுப்பயணத்தின்போதே இந்தக் கிளர்ச்சித் தாக்கதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

பிரதமர் ரொனி பிளேயர் ஈராக்கின் அதியுயர் பாதுகாப்புப் பிரதேசமான பச்சைவயல் பகுதியில் அமைந்துள்ள ஈராக் இடைக்கால அரசின நிர்வாக அலுவலகத்தில் அந்நாட்டுத் தலைவர்களோடு பேச்சுக்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயமே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டி ருக்கின்றது. இந்தத் தாக்குதலுக்கு இச்செய்தி எழுதும்வரை எந்தக் கிளர்ச்சி அமைப்புகளும் உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்கவில்லை.

காயமடைந்த அமெரிக்கச் சிப்பாய்கள் வெளிநாடுகளிலுள்ள அமெரிக்க இராணுவ வைத்தியசாலைகளுக்கு விசேட விமானங்கள் மூலம் எடுத்துச்செல்லப்பட்டுள்ளனர்.

சுனி முஸ்லிம்களின் சார்பில் இயங்கும் தீவிரவாத அமைப்பொன்றே இத்தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் எனச் சந்தகிக்கப்படுகின்றது.



தாக்குதலில் காயமடைந்த இராணுவ வீரர்கள் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லும்போது...

தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கும நிலையில் இப்பெரிய தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதை ஈராக்கில் பாதுகாப்புச் சூழ்நிலைகள் மேசமாக இருப்பதையே எடுத்துக்காட்டுகின்றன என்று செய்தியாளர்கள் தெரிவித்தனர். (க-8)

## லொறியைப் பல்லால் இழுத்து இந்திய வாலிபர் சாதனை!

சென்னை,டிசெ.23


20 தொன் எடையுள்ள பொருள்களைக் கொண்ட லொறியைப் பல்லால் இழுத்து இந்திய வாலிபர் ஒருவர் சாதனை படைத்துள்ளார். தமிழகம் உசிலம்பட்டி அருகேயுள்ள கும்பணம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மாயாண்டியன் என்ற 27 வயது வாலிபரே இச்சாதனையைப் புரிந்தவராவார்.

திருப்பூரில் தையல்தொழில் புரியுமவர், மினி லொறியொன்றில் 20 தொன் எடையுள்ள பொருள்களை ஏற்றி லொறியை கயிற்றால் கட்டி, பல்லால் இழுத்தார். அத்துடன், ஒரு மூட்டை நெல்லைப் பல்லால் கடித்துத் தூக்கினார். இச்சாதனையைப் பற்றி அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

"நான் அரைமணிநேரத்தில் 15 தேங்காய்களைப் பல்லால் கடித்து உரித்துவிடுவேன். காரைப் பல்லால் இழுத்துள்ளேன். இவ்வாறான சாதனைகளைச் செய்வதற்கு எனது யோகாசனப் பயிற்சியே காரணம்.

மேலும் 5 கார்களை என்மேல் ஏற்றிச் சாதனை புரிவேன். இதற்கு முன்னர் ரயில் ஒன்றினை ஒருவர் 20 அடிதூரம் பல்லால் இழுத்துச் சாதனை புரிந்தார். நான் 200 அடி தூரம் இழுத்துச் சாதனை புரிவதற்கான பயிற்சியில் ஈடுபட்டு வருகிறேன்" - என்றார். (க-8)

# ஈராக் இராணுவத்திடம் உள்நாட்டுப் பாதுகாப்பை வழங்குவது கடினமான காரியம் என்கிறார் புஷ்!



வாஷிங்ரன்,டிசெ.23

ஈராக்கின் பாதுகாப்பை அந்நாட்டுப் பொலீஸார் மற்றும் இராணுவத்திடம் ஒப்படைப்பது கடினமான காரியம என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

2004ஆம் ஆண்டு முடிவடைவதையொட்டி ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் வெள்ளைமாளிகையில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தினார். அங்கு கருத்து வெளியிடுகையிலேயே புஷ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் புஷ் அங்கு கருத்து வெளியிடுகையில் தெரிவித்ததாவது:-

ஈராக் போர் விவகாரத்தை அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்ட் மிகவும் திறமையாகக் கையாண்டார். இப்போரில் இறந்த அமெரிக்கச் சிப்பாய்களின் குடும்பத்தினருக்கு அமைச்சர் ரம்ஸ்பீல்ட் அனுதாபக் கடிதம்கூட அனுப்பவில்லை எனக் குற்றச்சாட்டுக் கூறப்படுகிறது.

உண்மையில் அவர் வெளித்தோற்றத்திற்கு சற்றுக் கடினமானவராக இருந்தாலும், மிகுந்த நாகரிகம் உள்ளவர். ஈராக்கியர்களின் விருப்பங்களைச் சீர்குலைக்கும் முயற்சியாகவே அங்கு தீவிரவாதிகள் கார்க்குண்டுத் தாக்குதல்களை நடத்திவருகின்றனர். தாக்குதல் நடவடிக்கைகளைத் தீவிரவாதிகள் ஒரு பிரசாரத்திற்கான கருவியாகவே பயன்படுத்திவருகின்றனர்.

சதாம் ஹுசைனின் ஆட்சியில் இருந்ததைவிட ஈராக்கில் தற்போது மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட்டுள்ளது. ஈராக்கியப் பொலீஸாருக்கும், இராணுவத்தினருக்கும் உரிய பயிற்சிகளை அளித்து அந்நாட்டுப் பாதுகாப்பை அவர்களிடமே அமெரிக்க இராணுவம் ஒப்படைப்பது கடினமான காரியம்.

கொள்கை விடயங்களில் மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும் ரஷ்யாவுடனான நட்புறவு மிகுந்த சக்தி படைத்ததொன்றாகவே இருக்கின்றது. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் எனக்குத் தனிப்பட்ட முறையில் நல்ல நண்பர். இந்த நட்புத் தொடர்ந்தும் இருக்கும்; பேணப்படும். அவரை எதிர்வரும் பெப்ரவரி மாதம் சந்தித்துப் பேசவுள்ளேன்.

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நாடாளுமன்றத்தில் தாக்கல்செய்யப்படும் வரவு - செலவுத்திட்டம் அமெரிக்காவின் உள்நாட்டு நிதி நிலைவரத்தை மேலும் வலுப்படுத்தும் நோக்கத்தோடு சற்றுக் கடினமானதாகவே இருக்கும் - என்று ஜோர்ஜ் புஷ் கூறினார்.

அதேவேளை-அல்-கெய்டா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஒஸாமா பின்லேடன் பற்றியும் புஷ்ஷிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் புஷ் "ஒஸாமா பின்லேடன் பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையில் பதுங்கியிருக்கலாம் எனப் பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் என்னிடம் தெரிவித்தார்.

நானும் அவ்வாறே எண்ணுகிறேன். எனது யூகம் சரியாக இருக்குமேயானால், பாகிஸதான் மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான மலைப்பகுதிகளில்தான் ஒஸாமா பின்லேடன் மறைந்திருக்கக்கூடும். அல்-கெய்டா மிகவும் ஆபத்தான தீவிரவாத அமைப்பு. அதில் சந்தேகம் இல்லை. எனவே, எங்கள் தேடுதல் வேட்டை தொடரும்" - என்று புஷ் மேலும் தெரிவித்தார். (க-8)

## பழைமைவாய்ந்த மனிதனின் எலும்புக்கூடு கண்டுபிடிப்பு

அபுதாபி,டிசெ.23

ஏழாயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மனிதனின் எலும்புக்கூடு ஒன்றை ஐக்கிய அரபு இராச்சியத்தின் அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

சுமார் 20 முதல் 40 வயதுக்குள் இறந்த இம் மனிதனின் எலும்புக்கூடு, ஐக்கிய அரபு இராச்சியத்தின தலைநகரான அபுதாபியில் இருந்து சுமார் 100 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மார்வா தீவிலேயே கண்டுபிடிக்கப்பட்டதாக அகழ்வாராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

பல ஆண்டுகளாக இத்தீவில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இடிந்த கட்டடப்பகுதிகள், உடைந்த பாத்திரத் துண்டுகள் என்பனவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. (க-8)

# சூடான் பேச்சுகள் முறிவடைந்துள்ளன

தார்பூர்,டிசெ.23

சூடான் அரசுக்கும், தார்பூர் பிராந்தியத் தீவிரவாதிகளுககும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்துள்ளன.

இரு தரப்பினர்களுக்கும் இடையிலான மோதல்களை நிறுத்துமாறு ஆபிரிக்க ஒன்றியம் தீவிரவாதிகளையும், சூடானிய அரசையும் தொடர்ந்து வலியுறுத்திவந்தது.

எனினும், இரு தரப்பினரும் இதனைக் கருத்தில் எடுத்துக்கொள்ளாதபோதிலும் தீவிரவாதிகள் சமாதான - அமைதி - பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக விலகிக்கொள்கின்றனர் என நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளனர்.

இவ்விரு தரப்பினருக்கும் இடையிலான மோதல்களை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்து ஆராய ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோபி அனானை சூடானுக்குச் செல்லுமாறு அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக ஆராய்வதற்குக் கோபி அனான் தலைமையிலான குழுவினர் இன்னும் ஓரிரு நாள்களுள் சூடானுக்கு விஜயம் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சூடானின் தார்பூர் பிராந்தியத்தின் மேற்குப்பகுதியில் இடம்பெற்றுவரும் மோதல்கள் காரணமாக இதுவரை 18 லட்சம் மக்கள் தமது வீடுகளை இழந்து அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

70 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இவ்வருடம் மார்ச் மாதத்தின் பின்னர் உயிரிழந்துள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சில தினங்களுக்கு முன்னர் தீவிரவாதிகளுடனான மோதல்களை நிறுத்தியுள்ளதாக சூடான் அரசு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-8)

# இஸ்ரேல் - பலஸ்தீனத் தலைவர்களோடு பிரிட்டன் பிரதமர் பிளேயர் நேற்றுப் பேச்சு!

லண்டன்,டிசெ.23

பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் இஸ்ரேலிய - பலஸ்தீனத் தலைவர்களை நேற்றுச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

பலஸ்தீன முன்னாள் தலைவர் யஸீர் அரபாத்தின் மறைவிற்குப் பின்னர் சர்வதேச மட்டத்தில் மத்தியகிழக்குப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சியில் ரொனி பிளேயர் ஈடுபட்டுள்ளார்.

ஜனவரி மாதத்தில் பலஸ்தீனத்தில் ஜனாதிபதி ஒருவர் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர், பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் மத்திய கிழக்கு சமாதானம் தொடர்பான ஒரு மாநாட்டை லண்டனில் பெப்ரவரி மாதத்தில் நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்.

தனது ஈராக் விஜயத்தை முடித்துக்கொண்டு திடீரென இஸ்ரேலுக்கு விஜயம் செய்திருக்கும் ரொனி பிளேயர் இந்தத் தகவலை வெளியிட்டார். இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனை ஜெருசலேத்தில் சந்தித்துப் பேச்சுக்களை நடத்திவிட்டு, ரமல்லா மேற்குக்கரையில் பலஸ்தீனத் தலைவர் மஹ்மூத் அப்பாஸைச சந்தித்தார்.

லண்டனில் நடைபெறவிருக்கும் உத்தேச மாநாடு சம்பந்தமான மலதிக விவரங்களைப் பலஸ்தீனத் தலைவர்கள் ரொனி பிளேயரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டார்கள் என பலஸ்தீன வெளிவிவகார அமைச்சர் நபீல் சதாத் தெரிவித்தார்.

"பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முகமாகத் திட்டமிடப்பட்டிருக்கும் சமாதானப் பாதை எனும் திட்டத்திற்கு உதவும் வகையிலான சமாதானப் பேச்சுக்களுக்கும், பலஸ்தீன மக்களுக்கு உதவும் வகையிலான முயற்சிகளுக்கும் தான் ஆதரவாக இருக்கப்போகிறார்" - என்றும் நபீல் சதாத் தெரிவித்தார்.

ரொனி பிளேயர் இருநாட்டுத் தலைவர்களுடனும் நேற்று நடத்திய பேச்சுக்களின் விவரங்கள் முழுமையாக வெளியாகவில்லை.

இப்பேச்சுக்கள் மீண்டும் மத்திய கிழக்கில் சமாதான - அமைதியான - சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளைத் தோற்றுவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிட்டன் பிரதமரின் முன்னறிவித்தல் இல்லாத மத்திய கிழக்குச் சுற்றுப்பயணங்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவே இரகசிய மாக வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-8)


உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head Office
No.500, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel.:2505632 - 3 Fax:2500626
Jaffna Office
No.86, PointPedro Road, Jaffna. Tel.:021-2226242 Fax:021-2225600
Trinco Office
No.47, Kandy Road, Trincomalee. Tel.:026-2221519 Fax:026-2221519
Branch
No. 295, Jampettah Street, Colombo-13 Tel.:2430782 Fax:2430782
கொழும்பு - யாழ். | யாழ். - கொழும்பு



நத்தார் நற்சிந்தனை
"தூயவர், தூயவர், தூயவர் எல்லாம்வல்ல கடவுளாகிய ஆண்டவர், இருந்தவரும் இருக்கின்றவரும் வரவிருக்கின்றவரும் இவரே"
திருவெளிப்பாடு 4:8-9
சதாஸ் மோட்டோர்ஸ் & ஹாட்வெயர்ஸ்
56/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:021 222 2522.
(C/39981)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்


## விற்பனைக்கு

DTS - I பல்சர் 5500 - km ஓடிய நல்ல நிலையிலுள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக குண்டு. தொடர்புக்கு: 9, கலைமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (39960)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சென்.பற்றிக்ஸ் வீதியில் 1¼ பரப்புக் காணியுடன் கூடிய மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 684216 (39858)

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடனும் கூடிய வீடு யாழ். நகரில் வாடகைக்குக் கொடுக்கப்படும். அத்துடன், மாணவர்கள், ஊழியர்களுக்கு, உணவுடன் தங்குமிட வசதிகளும் உண்டு. தொடர்புகளுக்கு: பொ.பிரேம்குமார் J.P., இல.17, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம். (சந்திக்கும் நேரம்: மாலை 3.00 மணிமுதல் 6 மணிவரை). (சி-39982)

## கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா புறொயிலர் குஞ்சுகள் 24-12-2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ் - ஆனைக்கோட்டைச் சந்தி, P.ரவி - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி, றஞ்சீத் - 517, ஸ்ரான்லி றோட். T.P.: 222 2867, 3529. (39956)

## தவறிவிட்டது

கட்டப்பிராய்க்கும் யாழ். போதனா வைத்தியசாலைக்குமிடையில் புவனேஸ்வரன் தினேஸ என்பவருடைய தேசிய அடையாள அட்டையும (842991013V), விசேட அடையாள அட்டையும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ரவி, கொமினிக்கேசன் (021 - 222 2680), கட்டப்பிராய்ச் சந்தி, கோப்பாய் தெற்கு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். T.P.: 0773106118. (39961)

காளி கோயிலடி, மானிப்பாய் தெற்கைச் சேர்ந்த தேவராஜா ஜெயதீபன் என்பவரது தேசிய அடையாள அட்டை (772001495V), விசேட அடையாள அட்டை (0905002559), சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியன ஆனைக்கோட்டைக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியிலோ அல்லது சுந்தர்ஸன் நிறுவனத்திலோ ஒப்படைத்துதவவும். (39957)

18-12-2004 சனிக்கிழமை மாலை M.கண்ணன் என்பவர் மாலி சந்தியிலிருந்து முகமாலை செல்வதற்குப் பஸ்ஸில் பயணம்செய்தபோது பெறுமதிமிக்க பவுண் கைச்சங்கிலி ஒன்றைத் தவறவிட்டுவிட்டார். கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வரணி, M.S.K. சந்திரனின் கடையில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (39964)

## சேவை

55,000 அமெரிக்க விசா லொத்தர் (Green Card) விண்ணப்பிக்க முடிவுதிகதி டிசெம்பர் 31. தாமதத்தைத் தவிர்க்க விண்ணப்பதாரர் மனைவி, பிள்ளைகள் சகலரதும் முழுப்பெயர்கள், பிறந்தநாள்கள், விலாசத்தையும் எழுதி, 2"x2" சகலரதும் போட்டோக்களுடனும் ரூபா 300/- மணியோடருடனும் அனுப்பவும். தொடர்பு: PENGUIN BOOK SHOP, B2, F23, Bloemendhal Flats, Kotahena.
T.P.: 077 3081764, 2438367. (C/39861)


## சனசமூக நிலைய நன்கொடைப் பணம்

சாவகச்சேரிப் பிரதேச சபையின்கீழ் இயங்கும் சனசமூக நிலையங்களுக்கு 2004 ஆம் ஆண்டு நன்கொடைப்பணம் தற்சமயம் வழங்கப்பட்டு வருவதாகப் பிரதேச சபைச் செயலாளர் ந.பாலச்சந்திரன் அறிவித்துள்ளார்.

இது சார்பான கடிதம் கிடைத்தவர்கள் கூட்ட அறிக்கைப் புத்தகம், வங்கிப்புத்தகம், நிலைய பெயர், முத்திரை ஆகியவற்றுடன் வருகை தந்து காசோலையைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-170)

## நெடுந்தீவு மத்திய கிழக்கு பகுதிக்கு மின்சாரம்; ரூ. 5 லட்சம் ஒதுக்கீடு

நல்லூர்,டிசெ.23

பின் தங்கிய கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நெடுந்தீவு மத்திய கிழக்குப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கவென 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், மின்சாரத்தை விரைவில் பெற்றுக்கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ப-111-204)

## வைத்திய பரிசோதனை

தென்மராட்சி,டிசெ.23

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் மிருசுவில் பகுதி மக்களுக்கு நடத்தப்பட்ட இலவச வைத்தியப் பரிசோதனை முகாமில் 75 இற்கு மேற்பட்ட மக்களுக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கண், இரத்த அமுக்கம், நீரிழிவு, தொழுநோய், வாய்ப்புற்று, பால்வினைநோய், பொது மருத்துவம் போன்ற பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாகக் கழகத் தலைவர் செ.கா. நவரத்தினம் தெரிவித்தார். (ப-117)

## வீதியோரக் கால்வாய்: இளைஞர்கள் திருத்தினர்

கோப்பாய்,டிசெ.23

கோப்பாய் - மானிப்பாய் வீதியோர நீர் வழிந்தோடும் ஒரு கிலோமீற்றர் நீளமான வாய்க்கால், கோப்பாய் கண்ணகை அம்மன் சனசமூக நிலைய இளைஞர்களினால் அண்மையில் செப்பனிடப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் இவ்வாறு இரு தடவைகள் இவர்கள் இதனை சீர்செய்தமை குறிப்பிடத்தக்கது. (ப-72)


## வலி. கிழக்குத் தென்பகுதி ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி

## ஒப்பந்த அடிப்படையில் கிளை முகாமையாளர்களை நியமித்தல்

எமது சங்கத்தில் மேல் குறிப்பிடும் பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிக்கும் தகைமையுள்ள ஆண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. *பதவி*:- கிளை முகாமையாளர் - ஒப்பந்த அடிப்படையில்
2. *சம்பளம்*:- கூ.வே.ஆ. குழுவின் சுற்றறிக்கை 31/99இற்கு அமைய ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யும் நாள் ஒன்றிக்கு ரூபா 140/- வீதம்.
3. *வயதெல்லை*:- 18-45 வருடங்கள் (183/90 சுற்றறிக்கைக்கமைவாக)
4. *தகைமை*:- கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணம்) பத்திரம் / க.பொ.த. (சாதாரண தரத்தில்) 2 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம் / தூயகணிதம், சிங்களம் / தமிழ்மொழி என்பவற்றினை உள்ளடங்கியதாக 06 பாடங்களிலான சித்தி, சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5. *விண்ணப்ப முடிவுதிகதி*:- 15.01.2005

விண்ணப்பப்படிவத்தினை ரூபா 10/- செலுத்தித் தலைமைக் கந்தோர் வேலைநாள்களில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் "பொதுமுகாமையாளர், வலி.கிழக்குத் தென்பகுதி ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி" என்ற முகவரிக்கு நேரடியாகவோ அன்றேல் பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் சான்றிதழ்களின் போட்டோப் பிரதி இணைக்கப்படல் வேண்டும். இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

நீர்வேலி. (சி-39986) (24-13-15) **பொதுமுகாமையாளர்.**


## நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 - 10 - 1940 | 23 - 11 - 2004 |



பண்ணாகம்

**அமரர் வல்லிபுரம் துரைசிங்கம்**

(இளைப்பாறிய உத்தியோகத்தர், இ.போ.ச.)

*அன்புடன் எமைப் பெற்று வளர்த்து*
*எங்கள் யாவரையும் வளர்த்து நல்வழிப்படுத்தி*
*வெளிநாடு சென்று சிறப்புடன் வாழ வைத்த தெய்வமே!*
*இன்று உம்மைப் பிரிந்து தவிக்கின்றோம்*
*நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்தாலும்*
*நாம் என்றும் உமது நினைவாகவே வாழ்வோம்*
*தாங்கள் விசவத்தனை முருகன் பாதத்தில் அமைதிபெற்று*
*வாழப் பிரார்த்திக்கின்றோம்.*

எங்கள் தந்தையார் அமரர் வல்லிபுரம் துரைசிங்கம் அவர்கள் 23.11.2004 அன்று இயற்கை எய்திய செய்திகேட்டு எமது இல்லம் வந்து எமக்கு ஆறுதல் கூறி உதவிகள் செய்தவர்களுக்கும் தந்தி, தபால், தொலைபேசி மூலம் அனுதாபந் தெரிவித்த யாவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (23.12.2004) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையம் அன்புடன் வேண்டுகின்றோம்.

*பண்ணாகம்,*
*சுழிபுரம்* (சி-39984) (24-13-15) **பிள்ளைகள். மருமக்கள்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1941 | 2004 |
| 11 | 11 |
| 23 | 23 |



அமரர்

**பரநிருபசிங்கம் நவரத்தினம்**

(நவம்-C.T.B. நடத்துநர், முதலாம் வட்டாரம்-புங்குடுதீவு)

எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (23.12.2004) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியையின்போது சகல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் துயரத்தில் நேரடியாகவும் பல்வேறு வழிகளிலும் உதவிபுரிந்தோருக்கும் மற்றும் அனுதாபந் தெரிவித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்.

**மனைவி, மக்கள்**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**தொ.பே 011- 2449374.**

*நிகழ்விடம் :*
*முதலாம் வட்டாரம், புங்குடுதீவு.*
T.P. *077-6096156.*

(C-39959)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி எலிசபெத்து மரியாம்பிள்ளை (இரத்தினம்)

யாழ்ப்பாணம், கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி எலிசபெத்து மரியாம்பிள்ளை அவர்கள் 22.12.2004 புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற திரு.திருமதி யோசப் செல்லையாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி இன்னாசிப்பிள்ளை சின்னப்பு அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற I.S.மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் லில்லிப்பூ ஞானப்பிரகாசத்தின் (கொழும்பு) அன்புச் சகோதரியும் ஜெயமலர் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற பேட்றன் சந்திரன், இராசமலர் (ஆஸ்திரேலியா), சந்திரமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற Dr.அன்ரன் வின்சன் மற்றும் B.M.யோசப், F.L.ஜெகநேசன், B.C.சறோ ஆகியோரின் மாமியாரும் பிறேமினி (ஆஸ்திரேலியா), ஜோய் (நோர்வே), Dr. அலெக்ஸ் (கனடா), மோகன் (லண்டன்), யசோ (ஆஸ்திரேலியா), றோகான் (லண்டன்), தனுஷா (ஆஸ்திரேலியா), ஷமிலா (கனடா), லக்ஸ்மன் (ஆஸ்திரேலியா), சஜீந்திரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆரபி, சாரங்கா, ஜெறி, சுஜேனி, அனோஜ், எய்டன், துஷாரா, அஜித், ஆஸ்லி, ஷாமின்,ஸ்ரெபினி, கெற்றூரா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (23.12.2004) வியாழக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு (பு.நே) புனித யுவானியார் ஆலயத்தில் நடைபெற்று, திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோயில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(39965)(46-13-15-24)

தகவல்:
F.L.ஜெகநேசன்
(நேசன் - மருமகன்).

## செல்லப்பா செல்லத்துரை

(ஓய்வு பெற்ற ஆசிரியர், சிறுப்பிட்டி இ.த.க.பாடசாலை)

சிறுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொணட செல்லப்பா செல்லத்துரை நேற்று (22.12.2004) புதன்கிழமை அதிகாலையில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி செல்லப்பாவின் புதல்வனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் ஸ்ரீதரன், சிவமலர், ஸ்ரீகுமார், சிவகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பலதா, சசீந்திரன், சிவமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும் மயூரன், யதுஷா, கஜரூபன், றஜிதா, சுரேக்கா, சசீந்துஷா, சிவதுசன், சசீலா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2004) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடலுக்கான தகனக்கிரியைகள் இந்தசிட்டி இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

*சிறுப்பிட்டி வடக்கு,*
*சிறுப்பிட்டி.* (39967)(46-13-15-24)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

உதயன்

# புலிகளின் காதில் பூச்சுற்றும் முயற்சி!

மிகுந்த இக்கட்டில் நிற்கிறது இலங்கை அரசு.

தமிழர்களுக்கு எதிரான பேரினவாதத்திலும், போர் வெறிபிடித்த இராணுவ வாதத்திலும், சிங்கள - பௌத்த மேலாண்மை வாதத்திலும் ஊறித்திளைத்த தீவிரவாதச் சக்திகளுடன் கூட்டமைத்திருக்கும் ஜனாதிபதி சந்திரிகாவின் அரசுக்குள் இந்தத் தீவிரவாதச் சக்திகள் அதிகார வலு மிக்கவையாக உயர்ந்து நிற்கின்றன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை சந்திரிகா அம்மையார் தன்வசம் வைத்திருந்தாலுங்கூட நாடாளுமன்ற அரசின் பலம் தம்வசம் இல்லாவிட்டால் தாம் தனித்தியங்க முடியாது என்ற உண்மையை - பட்டறிவை - ஐக்கிய தேசிய முன்னணி அரசின் கடந்த இரண்டு வருடகால ஆட்சியின்போது அனுபவப் பாடமாக அவர் படித்துக் கொண்டுவிட்டார்.

அத்தோடு, அரசமைப்புச் சட்ட ஏற்பாடுகளின்படி வெகு விரைவில் தமது கையைவிட்டுப் போகக்கூடிய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியைத் தக்க வைத்திருப்பதற்கும் -

அரசியல் அதிகாரத்தில் தாம் தொடர்ந்து நீடிக்கக் கூடிய ஏற்பாடுகளைச் செய்து கொள்வதற்கும் -

அரசமைப்பை மாற்றவேண்டிய தேவை - கட்டாயம் - அவசியம் - அவருக்கு இருக்கிறது.

இந்தக் காரணங்களுக்காக நாடாளுமன்றில் தமது அரசை எந்தக் காரணம் கொண்டும் சரிய விட்டுவிட முடியாத இக்கட்டு அவருக்கு.

நாடாளுமன்றத்தில் தமது அரசைக் கவிழ விடாமல் காப்பதற்கு ஜே.வி.பி. போன்ற சிங்கள - பௌத்த - மேலாண்மைவாதச் சக்திகளின் தாளத்துக்கு ஆடவேண்டியவராக அவர் இருக்கிறார்.

அந்தச் சக்திகளை மீறி - அவற்றின் தமிழர் விரோதப் போக்கிற்கு மாறாக - செயற்பட்டு, ஈழத் தமிழர்களுக்கு அவர்களின் நியாயமான உரிமைகளை வழங்கக்கூடிய தீர்வொன்றைக் காணும் முயற்சியில் ஈடுபட இயலாதவராக - வலுவற்றவராக - அவர் இருக்கிறார்.

இருந்தாலும் மறுபுறத்தில் சர்வதேச அழுத்தம் காரணமாகவும் -

சமாதான முயற்சிகள் ஆக்கபூர்வமான திசையில் நகர்ந்தால் மட்டுமே நிதி உதவி என்று சர்வதேச நாடுகள் விதித்திருக்கும் நிபந்தனை காரணமாகவும்-

பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் நாட்டின் தலைவி, அமைதி முயற்சிகளை முன்னெடுக்கவேண்டிய - முன்னெடுப்பவர்போல சர்வதேச சமூகத்துக்குக் காட்டவேண்டிய - அழுத்தத்தில் இருக்கின்றார்.

அதற்காகப் பல்வேறு காய் நகர்த்தல்களை அவர் செய்கின்றார்.

பேச்சை மீள ஆரம்பிப்பதற்கான புதிய நிகழ்ச்சித் திட்டம் என்ற பெயரில் அவரது அரசு புலிகளுக்கு அனுப்பிவைத்திருக்கும் பிந்திய யோசனைகளும் இத்தகைய சாணக்கிய காய் நகர்த்தல்களுள் ஒன்றுதான்; வெளிவேட நடவடிக்கைகளின் அங்கம்தான்.

புதிய - ஆக்கபூர்வமான - யோசனைத் திட்டங்கள் ஏதுமின்றி, உப்புச்சப்பற்ற விவகாரங்களைப் புதிதாகப் பூசிமெழுகி காதில் பூச்சுற்றும் முயற்சியாக புதிய நிகழ்ச்சித் திட்டம் என்ற பெயரில் அரசுத் தரப்பு அனுப்பி வைத்திருக்கின்றது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தின் அடிப்படையில் பேச்சை மீள ஆரம்பிக்க வேண்டும் என்பதே கடந்த பொதுத்தேர்தல் மூலம் ஈழத் தமிழர்கள் கொடுத்த - ஏகமனதான - ஆணை.

அந்த விடயம் அரசின் புதிய நிகழ்ச்சித் திட்டத்தில் தெளிவுபடுத்தப்படவேயில்லை.

இடைக்கால ஏற்பாடுகுறித்துப் பேசலாம் என்று அரசின் புதிய நிகழ்ச்சிநிரல் குறிப்பிடுவதாகத் தெரிகின்றது. இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசுவது என்பதன் அர்த்தம் வேறு; இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தின் அடிப்படையில் பேசுவது என்பது வேறு.

தமிழர் தாயகத்தின் நிர்வாகத்துக்கு இடைக்கால நிர்வாகம் என்ற பெயரில் ஒன்றை வழங்குவது குறித்து சந்திரிகா அம்மையாரிடமும் சில திட்டங்கள் உள்ளன. ஐ.தே.கட்சி உட்படப் பல தரப்புகளிடமும் இவ்விடயம் தொடர்பாக வெவ்வேறான - பல்வேறு - யோசனைகளுள்ளன.

"இடைக்கால ஏற்பாடு குறித்துப் பேசுவோம்" என்று கூறிக்கொண்டு இவ்வாறு பல்வேறு விடயங்களை ஆராய்ந்து குழப்பியடிக்க முடியாது.

மேலும், இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசும் அதேசமயம், இறுதித் தீர்வு குறித்தும் சமாந்தரமாகப் பேசவேண்டும் என்று இதுவரை வலியுறுத்தி வந்தவர் ஜனாதிபதி சந்திரிகா. தமது அந்த வற்புறுத்தல் குறித்து தமது புதிய நிகழ்ச்சித்திட்டம் என்ற பெயரில் தற்போது அவரது அரசு பிரேரித்திருக்கும் யோசனைகளில் எதையும் குறிப்பிடாமல் மிகக்கவனமாக இருக்கிறார் ஜனாதிபதி. இவ்விடயத்தில் தமது நிலைப்பாட்டை அவர் கைவிட்டுவிட்டாரா என்பதும் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தப்படாமல் ஐயுறு நிலையில் கைவிடப்பட்டிருக்கின்றது.

எனவே, இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் பேச்சைத் தொடங்கும்போது மீண்டும் 'வேதாளம் முருங்கைமரம் ஏறுவதுபோல' அந்த் விவகாரத்தை அம்மையாரின் அரசு தூக்கிப்பிடிக்காது என்பதும் நிச்சயமல்ல.

எனவே, தெளிவான வரையறைகளோடு - இன்னது தான் பேசப்படும் என்று திட்டவட்டமான நிரலோடு - அமையாத இந்த நிகழ்ச்சித்திட்டம் புலிகளின் தலைமையின் பரிசீலனையில் 'பாஸ்' ஆவது துர்லபம் என்பது நிச்சயம்.

# தொழிற்றுறை போதனாசிரியர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க முடிவு

யாழ்ப்பாணம், டிசெ.23

ஒப்பந்த அடிப்படையில் தொழில்பயிற்சி போதனாசிரியர்களை நியமிப்பதற்கு மாவட்ட தொழில்துறை அலுவலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

யாழ். மாவட்டச் செயலகத்தில் இயங்கும் மாவட்ட தொழில்துறை அலுவலகத்தின் கீழ் இயங்கும் தொழில் பயிற்சி நிலையங்களில் ஒட்டோ திருத்த வேலைகள், கையடக்கத் தொலைபேசி திருத்துதல், குழாய் பொருத்துநர் மோட்டார் சைக்கிள் திருத்துதல் - உழவு இயந்திரங்கள் திருத்துதல், தொலைக்காட்சி, வானொலிப் பெட்டிகளைத் திருத்துதல் மற்றும் தையல் இயந்திரங்கள் திருத்துதல் ஆகிய பயிற்சி நெறிகள் அடுத்த வருட முற்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப் பயிற்சி நெறிகளை நடத்துவதற்கு வேண்டிய நிரந்தர போதனாசிரியர்கள் இன்மையால் இப்பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் போதனாசிரியர்களை நியமிப்பதற்கு செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கு விண்ணப்பிக்கத் தகுதி உடையோர் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு யாழ். செயலகத்தில் இயங்கும் மாவட்ட தொழில் துறை அலுவலகத்துடன் தொடர்வு கொள்ளுமாறும் தொழில்துறை அலுவலர் பி. ராகவன் கேட்டுள்ளார். (ஐ-5)

# மடு முகாமின் குறை தீர்க்க உதவுமாறு ஜயலத் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.23

இலங்கைக் கத்தோலிக்கர்களின் புண்ணிய பூமியான மடுத்தேவாலய முகாமின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு உதவுமாறு சிங்கப்பூர் பேராயர் அதி.வண. நிகலஸ் சியாவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்த டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன, சிங்கப்பூர் பேராயர் இல்லத்தில் வைத்துப் பேராயரைச் சந்தித்தபோதே இந்த வேண்டுகோளை விடுத்தார்.

யுத்தம் காரணமாக மடுத் தேவாலய முகாம் பிரதேசத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் சீரற்றுள்ள போதும் கடந்த 12 வருடகாலமாக வடக்கு - கிழக்கு அகதிகளுக்கு அகதி முகாமாக அப்பிரதேசத்தைப் பயன்படுத்துவதற்கு மன்னார் பேராயர் அதி வண. இராயப்பு யோசப் அனுமதி வழங்கியிருக்கிறார். (ஐ-202)

# நகரில் நேற்று சைக்கிள்களை மறித்து 'லைசென்ஸ்' சோதனை

## பொலீஸாரின் உதவியுடன் அதிரடி நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ்.நகரப்பகுதியில் நேற்று திடீரென துவிச்சக்கர வண்டிகள் பரிசோதிக்கப்பட்டு உரிமத்தகடுகள் வழங்கப்பட்டன.

ஆரியகுளம் சந்திப்பகுதியில் சென்ற துவிச்சக்கர வண்டிகள் அனைத்தும் வழிமறிக்கப்பட்டு 2004 ஆம் ஆண்டுக்குரிய உரிமத்தகடுகள் பெறப்படாதவற்றிற்கு மாநகரசபைப்பிரிவினரால் அந்த இடத்தில் வைத்தே உரிமத்தகடுகள் வழங்கப்பட்டன.

நேற்றுக்காலை 9.30 மணிமுதல் மதியம்வரை நடைபெற்ற இப்பணியில், பல நூற்றுக்கணக்கான துவிச்சக்கர வண்டிகள் வழிமறிக்கப்பட்டு உரிமத்தகடுகள் வழங் கப்பட்டன. ஒவ்வொரு தகட்டிற்கும் 10 ரூபா 50 சதம் பெறப்பட்டது.

இந்தத் திடீர் பரிசோதனையில் ஈடுபட்டோருக்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலீஸாரும் உதவினர்.

இதனால் ஆரியகுளம் சந்திப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது. அவசர அவசரமாக கல்வி நிலையங்களுக்கு சென்ற மாணவர்கள் கூடவழிமறிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறான சோதனை 7ஆவது தடவையாக இந்த ஆண்டு நடைபெறுகின்றது என மாநகரசபைப் பணியாளர் ஒருவர் தெரிவித்தார்.

முன்னதாகவே உரிய வேளையில் உரிமத்தகட்டைப் பெற்றுக்கொண்டால் இவ்வாறான அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-12)

# 'கலைப்பேரரசு' ஞாபகார்த்த விருது கலைஞர் மெற்றாஸ் மெயிலுக்கு



யாழ்ப்பாணம், டிசெ.23

கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை ஞாபகார்த்தமாக உருவாக்கப்பட்டிருக்கும் விருது இவ்வாண்டு பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத்தின் செயலாளர் செல்லையா மெற்றாஸ் மெயிலுக்கு வழங்கப்படுகின்றது.

விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவா மிகள் அருளாசியுரை வழங்குவார்.

வாழ்த்துரையினை செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் நிகழ்த்துவார்.

தொடர்ந்து "கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரையின் கலைப்பங்களிப்பு" என்னும் பொருளில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் சிறப்புரை நிகழ்த்துவார். பின்னர் விருது வழங்கும் வைபவம் இடம்பெறும். (ஐ-204)

# கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் பணியாளரின் கூலியை அதிகரிக்குக!

## அனுமதி கேட்டு உள்ளூராட்சி ஆணையாளர் கடிதம்

வடமராட்சி, டிசெ.23

யாழ். குடாநாட்டில் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிப்பதற்கான கூலியை அதிகரிக்க அனுமதிக்குமாறு யாழ். பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் வட-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

குடாநாட்டில் கட்டாக்காலி நாய்கள் பெருகியுள்ளதால் அவற்றைப் பிடித்து அழிப்பதற்கு அனுபவம் வாய்ந்த தொழிலாளர்கள் எவரும் இல்லை. சாவகச்சேரி பிரதேச சபையில் மாத்திரம் அனுபவம் பெற்ற தொழிலாளர்கள் உள்ளார்கள். தற்போது வழங்கப்படும் கட்டணம் போதாமையால் அவர்கள் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்க முன்வருகிறார்களில்லை என யாழ். பிராந்தியத்தில் உள்ள உள்ளூராட்சி, பிரதேச, நகரசபைகள் தெரிவிக்கின்றன.

கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிப்பதற்கு ஓர் உத்தியோகத்தருக்கு 50 ரூபா வீதமும், உத்தியோகத்தர் அல்லாத வெளிநபருக்கு 100 ரூபா வீதமும் வழங்கப்பட வேண்டும். இதற்கான அனுமதியை வழங்கினால்தான் யாழ். குடாநாட்டில் கட்டாக்காலி நாய்களை ஒழிக்கமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

நாய் வளர்க்கும் குடியிருப்பாளர்களிடம் வளர்ப்பு நாய்களுக்கான உரிமத்தகடுகளை வழங்க பிரதேச, நகரசபைகள் உரிய நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ளவேண்டும் என யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.இராசையா தெரிவித்துள்ளார். (ஐ-173)

## உதயவாக்கு

உலக நலனில் உன் நலன் அடங்குதல் நல்லது.

## நாளை

மார்கழி 09

வெள்ளிக்கிழமை

(24.12.2004)

திதி: திரயோதசி

பி.ப. 05.06

நட்சத்திரம் : கார்த்திகை

காலை 07.31

சுபநேரம்: 06.26 - 07.56

ராகுகாலம்: 10.56 - 12.26

(பழையநேரப்படி)

# வவுனியாவில் பஸ் பயணியை தந்திரமாக மயக்கிக் கொள்ளை!

யாழ்ப்பாணம், டிசெ.23

கொழும்பில் இருந்து பயணிகள் பஸ்ஸில் யாழ்ப்பாணம் திரும்பிய ஒருவர், சக பயணி ஒருவரால் ஏமாற்றப்பட்டு பணத்தையும், உடைமைகளையும் இழந்தார்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

கடந்த 12ஆம் திகதி சாவகச்சேரியில் இருந்து மகரகம புற்றுநோய் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகச் சென்ற சாவகச்சேரியைச் சேர்ந்த சின்னத்தம்பி கந்தசாமி (வயது 49) என்பவர் சிகிச்சையை முடித்துக் கொண்டு கொழும்பில் இருந்து பயணிகள் பஸ் ஒன்றில் யாழ்ப்பாணம் திரும்பினார். வழியில் வவுனியாவிற்கு இடையில் ஓர் இடத்தில் தேநீர் குடிப்பதற்காக பஸ்தரித்த போது, சகபயணி ஒருவர் இவரை தேநீர் அருந்துவதற்கு அழைத்துள்ளார். இவரும் அவரை நம்பி அவருடன் சென்றுள்ளார். அங்கு தேநீருக்குள் மயக்க மருந்தைக் கலந்து கொடுத்துள்ளார். அவர் மயக்கமடைய ஆரம்பித்த வேளையில் அருகே இருந்த காட்டுப்பகுதிக்கு அவரை மெதுவாக அழைத்துச்சென்ற சக பயணி, அவரைத் தாக்கிவிட்டு, அவரிடம் இருந்த பணத்தையும் உடைமைகளையும் அபகரித்து தப்பிச்சென்றுவிட்டார் என்று கூறப்படுகிறது.

நீண்டநேரமாக மயக்கமடைந்து காணப்பட்ட இவரை மறுநாள் வீதியால் சென்ற ஒருவர், மயக்கத்தைப் போக்கி நடந்த விவரத்தைக்கேட்டு தெரிந்துகொண்டார். பின்னர் அவர் இவரை வவுனியா நகருக்கு அனுப்பிவைத்தார்.

இதேவேளை -

கொழும்பில் இருந்து புறப்பட்ட இவர் வீடுதிரும்பாததையடுத்து, இவரது மனைவி திருமதி சந்திராதேவி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

வவுனியா சென்ற சின்னத்தம்பி கந்தசாமி அவருடைய நண்பரிடம் சென்று விவரங்களைக் கூறி நண்பரின் உதவியுடன் மீண்டும் சாவகச்சேரி வந்து சேர்ந்தார்.

இந்தத் தகவல்களை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் கந்தசாமியின் மனைவி விவரித்துள்ளார். (ஐ-12)

## பாங்ஷால் வீதி பலத்த சேதம்

குருநகர்,டிசெ.23

குருநகர் பாங்ஷால் வீதி சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது. இவ்வீதி கடந்த ஆறு மாதங்களாகத் திருத்தப்படவில்லை.

இதனால், இவ்வீதியினூடாகப் பயணிப் போர் மிகுந்த நெருக்கடியைச் சந்தித்து வரு கிறார்கள். இவ்வீதியில் பல இடங்களி லும் பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன. வீதியின் விளிம் புகளும் உடைந்துள்ளதனால் இரவு நேரத்தில் பயணஞ் செய்வது மிகுந்த உயிராபத்தை எதிர்நோக்கும் பயணமாக உள்ளது எனப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

(ஐ-51)

## ஓட்டோ அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.23

மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபரின் பாவ னைக்கு புதிய ஓட்டோ ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் இந்த வாகனத்தை அன்பளிப்புச் செய்துள்ளார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட் டம் 2004 நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையி லேயே புதிய ஓட்டோ வழங்கப்பட்டுள்ளது.

(202-185)

# ஆளும் பதவிகளுக்குச் சோரம் போகும் நிலை முஸ்லிம் காங்கிரஸிடம் ஒருபோதும் இல்லை

## அடித்துக் கூறுகிறார் தலைவர் ஹக்கீம்

நிந்தவூர்,டிசெ.23

"அரசுடன் சேராமல் எதிர்க்கட்சி வரிசை யில் நாம் இருப்பதால், முஸ்லிம்கள் ஆளும் பதவிகளுக்காகச்" சோரம் போகும் சமூகம் அலலர் என்பதை வெளிப்படுத்தியுள்ளதுடன் - இதனைத் தமிழ்த் தேசியம் உட்பட முக்கிய சக்திகளுக்கு உணர்த்தியுள்ளோம்."

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிர ஸின் தலைவரும், திகாமடுள்ள மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட மத்திய குழுக் கூட்டத்தில் சமகால அரசியல் நிலை தொடர்பாக உரையாற்றுகை யிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நிந்தவூர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ரீ. ஹஸனலியின் அலுவலகத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகை யில் மேலும் கூறியதாவது:-

"கடந்த எட்டு மாத காலமாக நாம் தன் மானத்தோடு எதிர்க்கட்சி வரிசையில் இருந்து வருகின்றோம். எம் மீதான நம்பகத்தன்மையில் பெரிய கீறல்கள் விழாமல் காத்திருப்பதுடன், அரசுக்கு அடிமைப்படாத நிலையில், தொண்ட மானைவிடவும், மேலாக நம்பத்தன்மையில் தமிழ்த்தேசியம் நம்மைப் பார்க்கும் நிலையைத் தோற்றுவித்துள்ளோம்.

முஸ்லிம்களின் கொள்கைப் போராட்டம் பற்றித் தமிழர் மத்தியில் நன்மதிப்பு ஏற்பட வேண்டும். நாம் எதிலும் அவசரப்படாமல் செயற் பட்டு வருவதால் எமது பெறுமானம் கூடிக் கொண்டே வருகின்றது.

இன்று மக்களிடமிருந்து முஸ்லிம் காங்கிர ஸைப் பிரிக்கும் நோக்குடனே அபிவிருத்தி கள் நடைபெற்று வருகின்றன.

ஆனால், முஸ்லிம் காங்கிரஸ் கொள்கை அடிப்படையில் இயங்கும் ஓர் இயக்கமாக இருப் பதால் அதன் பலமே மக்கள் சக்திதான். அந் தப் பலத்தைத் துளியும் பிரிக்கமுடியாது.

நாட்டிலுள்ள இரு பிரதான அரசியல் கட்சி களான ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் முஸ்லிம் காங்கிரஸை எப்படியாவது அணைத்துக்கொண்டு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிவிடலாமா என எண்ணிச் செயற்படு பவர்கள்.

இனப்பிரச்சினைத் தீர்வில் முஸ்லிம்களுக் குப் பெரிதாக எதையும் கொடுக்க வேண்டிய தேவையோ, அவசியமோ இல்லையென்ற நிலைப்பாட்டிலிருக்கும் கட்சிகள்தான் இவை கள் என்பதிலும் நாம் தெளிவுகாணவேண்டும்.

எனவே, இப்படியான சக்திகளுக்கு மத்தி யிலேதான் எமது அரசியலைச் செய்யவேண்டி யுள்ளது. இது அவ்வளவு இலகுவான காரிய மல்ல.

அடிக்கடி முஸ்லிம் காங்கிரஸுக்குள் ஒன்று நடக்கின்றது. அதாவது, ஒவ்வொரு தேர்தலி லும் நாம் அமோக வெற்றியடைந்தாலும், தேர்தல் முடிந்ததும் ஆட்சி அதிகாரம் என்ற விடயங்களில் நாம் தேர்தலில் அடைந்த அமோக வெற்றியை நாடாளுமன்றம் போய்ச் சேர்ந்த முதல்நாளிலிருந்து பலவீனமான ஒரு நிலைக்கு அடையும் அபாக்கியத்தை நாம் சந் தித்து வருகின்றோம்.

இந்த நிலையில், அடுத்த கட்ட அரசியல் நிலைமைகள் தொடர்பாக நாம் மிக விழிப் புடனிருக்கவேண்டியுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம்முதல் ஏப்ரல் மாதம்வரை ஆட்சியிலிருக்கும் அரசு, தாங்கள் இதுவரை காலமும் செய்வதற்கு அவசரப்பட்டுக் கொண்டிருந்த சில விடயங்களை எப்படியாவது முடித்துக்கொள்வதற்குச் சில முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

இதற்குப் பகிரங் கமான சைகைகள், தெரிந்து கொண்டிருக் கின்றன. குறிப்பாக, அரசமைப்பை மாற்று வதற்கு ஜனாதிபதி சர்வாதிகாரப் போக் கில் நடக்கலாமென்ற சைகையும் தெரிகின் றது.

இந்த நிலையில் எமக்கு மத்தியில் எவ்வித தடுமாற்றமும் இருக்கவேண்டிய அவசியம் இல்லை. இன்று முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்துசென்று ஆட்சியில் ஒட்டிக்கொண்டிருப் பவர்கள, அதிகாரப் பதவிகளிலிருப்பவர்களெல் லாம் முஸ்லிம் காங்கிரஸின் தலைமையை விமர்சிப்பதற்கு 'முஸ்லிம் காங்கிரஸின் தலைமை ஐக்கிய கட்சிக்குக் கூஜா தூக்கும் தலைமை' என்ற ஆயுதத்தைப் பாவிக்கின்றார்கள். இது வேடிக்கைக்குரிய ஒரு விடயமாகும்.

நாம் அரசுடன் சேர்வதற்கு இரு நிபந்தனை களை முன்பு விதித்திருந்தோம். தனித்தரப் புக் கோரிக்கை உட்பட நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றும் விடயத் தைக் கைவிடவேண்டுமென்ற எமது கோரிக் கைக்குச் சாதகமான பதிலில்லை.

இப்படியிருக்க சிலர் கூறுவது போல் நாம் அரசுடன் சேர்வதென்பது இந்தக் கோரிக்கை களை நாம் ஒதுக்கிவிட்டதாகவே அர்த்தப்படும்.

இ.தொ.கா. தலைவர் தொண்டமானைப் போல் நாமும் போய்ச் சேர்ந்திருக்கலாம். அப படி சோரம்போக நாம் ஒருபோதும் தயா ரில்லை.

அடிப்படை இனப்பிரச்சினைத்தீர்வில் முஸ் லிம்களுக்கு நியாயமான - கௌரவமான தீர்வு கிடைக்கவேண்டும் என்பதே எமது கோரிக்கை யாகும் - என்றார்.

(ஐ-க)

## திருவாசக உரை

யாழ்ப்பாணம்,டிசெ.23

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தனின் ஏற்பாட்டில் திருவாசக உரை நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற் பகல் 5 மணிக்கு அரியாலை சரஸ்வதி அம் பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

மகேஸ்வரி வித்தியாலய ஆசிரியர் ஐ.குமார தாசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ் வில் 'அழுதால் உன்னைப் பெறலாமே' என் னும் தலைப்பில் அவர் உரையாற்றுவார்.

(202)

## பேராயர் ஜெபநேசனின் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.23

வட்டுக்கோட்டை தென்னிந்தியத் திருச் சபை பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் எழுதிய 'நினைத்துப் பார்க்கின்றேன்" நூல் அண்மையில் கொழும்பில் வெளியிடப்பட்டது.

வண. கலாநிதி டி.எஸ்.தியாகராஜா தலை மையில் வெளியீட்டு வைபவம் இடம்பெற்றது.

வரவேற்புரையை, நூல்வெளியீடு செய்வ தற்கு உதவிபுரிந்த வண. எஸ்.எம்.சுகுணானந் தன் வழங்கினார்.

கொழும்பு பல்கலைக்கழக கல்வியியல் துறை பேராசிரியர் சோ.சந்திரசேகரம், முன் னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் சீலன் கதிர் காமர் ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்தி னர்.

யாழ்ப்பாணக்கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் (கொழும்புக் கிளை) எம்.தவ யோகராஜா, பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேச னுக்கு பொன்னாடை போர்த்துக் கௌரவித் தார்.

(ஐ-185)


உ
சிவமயம்

காரைநகர், ஈழத்துச் சிதம்பரம்

7ஆம் திருவிழா உற்சவ விஞ்ஞாபனம்





திருவெம்பாவை 7ஆம் திருவிழா உற்சவம் நாளை (24-12-2004) வெள்ளி காலை 7மணிக்கு ஆரம்பமாகி, சிவபெருமானுக்கும் ஐயனாருக்கும் விசேட அபிஷேக ஆராத னையும் அதனைத் தொடர்ந்து 10.30 மணியளவில் மாணிக்கவாசக சுவாமி எழுந்தருளி திருவெம்பாவை ஓதப்படும். பின் வசந்த மண்டபத்தில் விநாயகர் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமான், முருகப்பெருமானுக்கும் விசேட தீபாராதனையும் பூசைகளும் நடைபெற்று, எம்பெருமான் குருந்த மரநிழலில் எழுந்தருளி வீதி உலா வரும்போது தமிழகத்தில் இருந்து வருகை தந்துள்ள நாதஸ்வர, தவில் கலைஞர்களோடு, இலங்கை நாதஸ்வர, தவில் கலைஞர்கள் இணைந்து இசைநாத 'மழை பொழிவார்கள்.

அடியார்கள் வந்து இஸ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தவில்
திருப்புங்கூர் T.G.முத்துக்குமாரசாமி
மன்னார்குடி M.R.வாசுதேவன்
இடும்பாவனம் S.கண்ணன்
திருவானைக்கோவில் S.சிறிகாந்
அளவையூர் T.உதயசங்கர்

தவில்
மு.சச்சிதானந்தம் (இராசன்)

நாதஸ்வரம்
மன்னார்குடி M.S.K.சங்கரநாராயணன்
மன்னார்குடி M.S.K.வெங்கடேஸ்
கோவிலூர் A.குமார்
கோவிலூர் E.பாபு
சாவகச்சேரி M.P.நாகேந்திரம்

நாதஸ்வரம்
M.P.பாலகிருஸ்ணன் குழுவினர்
T.கேதீஸ்வரன் குழுவினர்
K.பாலமுருகன் குழுவினர்

குறிப்பு: மேற்படி கலைஞர்கள் 26-12-2004 ஞாயிற்றுக்கிழமை தேருக்கு தில்லை நடராசப் பெருமான் எழுந்தருளும் பொழுது இசை மழை பொழிவார்கள். இரவு மறுநாள் அதிகாலை விசேட மேளக்கச்சேரி நடைபெறும்.

7ஆம் திருவிழா உபயகாரர்கள் சார்பாக
த.தருமராசா (MGR).

(சி-39963)(26-13)



நாலாண்டு பறந்துதையா....

23 மார்கழி



எமைக் காக்கும் தெய்வமே
குடும்பத்தின் குல விளக்கே
உடனிருந்து காத்திடுவீர்
நல்வழிக்குத் துணையிருப்பீர்
நாம் போகும் வழிக்கெல்லாம்
நல்துணையாய் வந்திடுவீர்
நாலாண்டு போனாலும்
உம்நினைவால் வாடுகிறோம்.

அமரர்
ஆசை கந்தையா
எம்முடன் மண்ணில்
18.08.1929----23.12.2000



"பொத்தா"
திருமதி ஜெயராணி வரதராஜா
(ஆசிரியை)



"பிறேமன்"
கந்தையா பிறேமதாசன்

எம்முடன் இருந்தார்கள்
01.07.1965...01.08.2003 09.06.1974---06.01.1993

வாழ்ந்திருந்தோம்
நன்னீஸ்,
பெற்றோல் நிலைய ஒழுங்கை,
காங்கேசன்துறை.

மனைவி, மக்கள், குடும்பத்தினர்

வாழ்கின்றோம்
150, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம் மேற்கு,
யாழ்ப்பாணம். TP-4591617



முதலாம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 04 - 07 - 1980
இறப்பு 06 - 01 - 2004

அமரர்
இராசையா ராஜ்குமார்

ஓராண்டு சென்றாலும் உம் நினைவு மாறாது
தீராத வேதனையில் தினந்தினம் துடிக்கின்றோம்
ஆறாகக் கண்ணீர் பெருக்கெடுத்து வருகிறதே
ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை வேண்டுகிறோம்.

- பெரியம்மா குடும்பத்தினர்.

கல்லூரி வீதி,
புங்குடுதீவு. (39963)(42-26-13)

# உணவு, உடை, உறைவிடம் மட்டும் மனிதனின் அடிப்படை உரிமைகளன்று

## அதற்கு அப்பாலும் சிந்திக்கவேண்டும் என்கிறார் ஆணைக்குழு அதிகாரி

'உணவு, உடை, உறைவிடம் மட்டும் மனிதனின் அடிப்படை உரிமைகள் என எண்ணுகின்ற பலர் எம்மத்தியில் வாழ்ந்துவருகிறார்கள. இதற்கப்பால் வேலைவாய்ப்பு, வருமானம், திருமணம், குடும்பம் இப்படிப்பட்ட பல்வேறு உரிமைகளும் உண்டு என்பதைச் சிந்திக்க நேரமில்லாதவனாக மனிதன் காணப்படுகின்றான். வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கவேண்டும், மற்றவரைப் பற்றிச் சிந்திக்கவேண்டும், வீடு, நாடு பற றிச் சிந்திக்கவேண்டும். சிந்தனை இல்லாதவன் மனிதனாக மாட்டான்; சிந்திப்பதை செயலுருப்படுத்தலாமா? எனவும் சிந்திக்கவேண்டும்.'

இவ்வாறு யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவன் விசாரணை அதிகாரி ஜனாப் பெரோஸ் தெரிவித்தார்.

வலி.மேற்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற மனித உரிமைகளதின நிகழ்வின்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். அவர் மேலும் தனதுரையில்:

சாதாரண மக்களுடன் சேர்ந்து அரச ஊழியர்களும் மனித உரிமைகள் என்றால் என்ன? இந்த ஆணைக்குழுவின் அதிகாரங்கள் என்ன? எனபது பற்றி அறியாதவர்களாக உள்ளனர். ஓரளவு நாட்டின் சட்ட திட்டங்கள், ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் போன்றவற்றை அரச ஊழியர்கள் அறிந்திருக்கவேண்டியது அவசியமாகும்.

பொலீஸ் ஆணைக்குழு, பொதுச் சேவை ஆணைக்குழு போன்ற பல்வேறு ஆணைக்குழுக்கள் இங்கு தமது கடமைகளை மேற்கொண்டுவருகின்றன. அவற்றினால் எமக்கு என்ன லாபம் என்று அசமந்தப் போக்கில் நாம் வாழக்கூடாது.

மனிதனின் உரிமைகள் மீறப்பட்டு, பறிக்கப்பட்ட காரணங்களால் நாம் இன்று உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அகதிகளாக வாழவேண்டியவர்களாக, அகதி அந்தஸ்து என்ற முத்திரையுடன் வாழ்ந்துவருகின்றோம். இந்நிலை மாறவேண்டும் மனிதன் முன்னேற்றம் காணவேண்டுமாயின உரிமைகள் இருக்க வேண்டும்; உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்று கூறினார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வலி.மேற்கு பிரதேச செயலர், மனித உரிமைகள் எப்போது? யாருக்குத் தேவைப்படுகின்றது என்பதை அறிந்துகொள்ளவேண்டும். பிறர் பாதிககப்படும் போது நாம் மனித உரிமைகள் பற்றிச் சிந்திப்பதில்லை. தனக்குப் பாதிப்பு ஏற்படும் போது இதைப்பற்றி அவன் உணர்ந்து கொள்கின்றான் எனக் குறிப்பிட்டார்.

செயலக உதவிப் பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலாசார உத்தியோகத்தர், நிர்வாக அலுவலரும் உரையாற்றினர். (ப-29)

# ஜி.சீ.ஈ.சாதாரணதரக் கல்வியுடன் பட்டம் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு

## திறந்த பல்கலைக்கழகப் பணிகள் குறித்து விளக்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.23

ஜி.ச.ஈ சாதாரண தர கல்வியூடாக சான்றிதழ முதல் கலாநிதி கற்கைநெறி வரை பட்டங்கள் பெறக்கூடிய ஒரே நிறுவனம் திறந்த பல்கலைக்கழகம் ஆகும்.

இவ்வாறு நாவல திறந்த பல்கலைக்கழக பொறியியல்துறை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவப்பிரகாசப்பிள்ளை கூறினார்.

2004-2005 பொறியியல் தொழில்நுட்ப மாணவர்களுக்கான அறிமுக விழா பிராந்திய இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரன் தலைமையில் பிராந்திய நிலையத்தில் இடம்பெற்றது..

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய கலாநிதி எஸ்.சிவப்பிரகாசப்பிள்ளை தொடர்ந்து பேசுகையில்:

நாட்டின் சகல பாகங்களிலும் திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய நிலையங்கள் அமைக்கப்பட்டு கல்வியியலாளர்கள், பொறியியலாளர்கள், திட்டமிடலாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் அங்கீகரிக்கப்பட்ட பெறுமதியான பட்டங்களை பெற்றுச் செல்கின்றனர்.

இன்று திறந்த பல்கலைக்கழகத்தில் மட்டும் சகல பீடங்களிலும் 20ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கல்வி கற்கின்றனர்.

இதேவேளை, 12 பல்கலைக்கழகங்கள் ஊடாக 40 ஆயிரம் பேர் கல்வி கற்கின்றனர்.

இந்தவகையில் திறந்த பல்கலைக்கழகத்தின் சகல வசதிகளையும் பெற்று உங்களது வாழ்வை வளப்படுத்திக் கொள்ள ஜி.சீ.ஈ சாதாரண மற்றும் உயர்தரம் கற்றவர்கள் முன்வந்து பதிவு செய்வதன் ஊடாக உயர் கல்வி வாய்ப்பைப் பெறலாம் - என்றார்.

யாழ்.திறந்த பல்கலைக்கழக பிராந்திய இயக்குநர் எந்திரி ச.ஆ.ஞானேந்திரன் பேசுகையில்:

2004-05 கல்வியாண்டிற்கு கூடுதலான எந்திரவியல் தொழில்நுட்ப மாணவர்கள் மற்றும் ஏனைய துறையைச் சேர்ந்த மாணவர்கள் பதிவு செய்துள்ளனர்.

இவர்களது கல்வி வாய்ப்பு முழுமை பெறுவதற்கும் - இங்குள்ள மாணவர்கள் எவ்வாறான சூழலில் கற்கிறார்கள் என்பதனை தலைமை அலுவலகத்திற்கு எடுத்துக்கூறி எமது திறந்த பல்கலைக்கழகத்திற்கும் வசதிவாய்ப்பளித்து உதவ வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் என்.உதயகுமார் தொழில்நுட்ப மாணவர்களின் கல்வி வளர்ச்சி - அபிவிருத்தி மற்றும் பிரிவுகள் பற்றிய விரிவான விளக்கவுரையை ஆற்றினார்.

இந்நிகழ்வில் யாழ். திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர். (ப-185)



# வங்கிக்கடன் பெறுவோரின் நேர்மை; கொழும்பு தலைமையகத்தில் ஆச்சரியம்

## மக்கள் வங்கிப் பிரமுகர் வெளியிடும் தகவல்

வலி.வடக்கு,டிசெ.23

வங்கியில் இருந்து கடன் பெற்றுவிட்டோம்; இனி வங்கிக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லையென்று யாரும் கருதிவிடக்கூடாது. கடனை மீளச் செலுத்துவதில் ஏதும் இடையூறுகள், பிரச்சினைகள் இருந்தாலும் கூட எம்முடன் தொடர்புகொண்டு அதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

மேற்கண்டவாறு மக்கள் வங்கியின் வட பிராந்திய உதவி முகாமையாளர் க.ஆனந்தராசா குறிப்பிட்டார்.

வசாவிளான் குட்டியபுலம் விவசாய சம்மேளனத்தின் ஆதரவுடன் குட்டியபுலம் பகுதி விவசாயிகள் 42 பேருக்குக் கடன் வழங்கும் நிகழ்வு குட்டியபுலம் விவசாய சம்மேளன செயலாளர் க.செல்வராசா தலைமையில் குட்டியபுலம் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பிராந்திய உதவி முகாமையாளர் க. ஆனந்தராசா தொடர்ந்து உரையாற்றும் போது:

கடந்த காலங்களில் இப்பகுதிக்குக் கடன்கள் வழங்கி ஏற்பட்ட அனுபவத்தின் மூலம் ஆரம்பத்தில் கடன் வழங்குவதில் நான் பின்னடித்தேன். எமது வங்கி ஊழியர்கள் மேற்கொணட செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கை காரணமாக அந்நிலைமை மாற்றப்பட்டுவிட்டது.

தற்போது கடந்த முறை கடன் வழங்கியவர்களிலும் பார்க்க சுமார் மூன்று மடங்கானவர்களுக்கு இம்முறை கடன் வழங்கப்படுவதுடன் அதிக தொகையும் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இது நீங்கள் பெற்ற கடனை மீளச் செலுத்துவதில் காட்டிய நேர்மையும் அக்கறையுமே காரணம் ஆகும்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை மக்களுக்கு வழங்கப்படுகின்ற கடன் நூறு வீதமும் மீளச்செலுத்தப்பட்டு விடுகின்றன. இத்தகைய நேர்மையான செயறபாட்டைக் கண்டு கொழுமபு தலைமையகம் கூட ஆச்சரியப்படுகின்றது.

பெற்ற கடனை எவ்வளவு விரைவாக செலுத்துகின்றீர்களோ அந்தளவுக்கு நாமும் மேலும் பலருக்கும் கடன்களைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும். இதேநேரம் ஏற்கனவே கடன் பெற்ற ஒருவர் நேர்மையாகக் கடனைச் செலுத்தி முடித்து இருந்தால், இரண்டாம் தடவை கடனுக்கு வரும் பொழுது முன்னைய தொகையிலும் பார்க்க கூடிய தொகையைக் கடனாக கொடுக்கக்கூடியதாக இருப்பதுடன் வட்டி வீதத்தையும் கூட குறைக்கும் படி தலைமையகத்துடன் தொடர்புகொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டார்.

மக்கள்வங்கியினால் வழங்கப்படும் கடன்களுக்கான ஜீ.ரி.இசற் இணைப்பாளர் நிக்கொலின் உரையாற்றும் போது:

பெற்ற கடன்களை விரைவாகக் கடனைப் பெற்றவர்கள் செலுத்தி முடித்தால் தென் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் பல கடன் திட்டங்களையும் இங்கு நடைமுறைப் படுத்த நடவடிக்கையெடுக்கும்படி கொழும்பு தலைமையகத்தை அழுத்தம் கொடுத்து கேட்க முடியும். இதேநேரம் இக்கடன் விரைவாக செலுத்தப்பட்டாலும் நாம் இப்பகுதியில் சுமார் இரண்டரை லட்சம் ரூபா செலவில் அபிவிருத்தித்திட்ட செயற்பாட்டை மக்கள் ஒத்துழைப்புடன் முன்னெடுத்துச் செல்லமுடியும் என்று கூறினார்.

மற்றும் காங்கேசன்துறை மக்கள் வங்கிக் கிளையின் மல்லாகம் உப கிளையின் பொறுபபாளர் க.பார்த்தீபன் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள். (ப-86)




# யுத்தத்தின் பாதிப்புகள் போதும்; விரைவாக சமாதானம் வரவேண்டும்

## மன்னார் ஆயர் வலியுறுத்துகிறார்

மன்னார்,டிசெ.23

கடந்த கால யுத்தம் அழிவுக்கு வழிசமைத்தது. இனியும் இப்பாதிப்புகளை நாம் சந்திக்க முடியாது. விரைவாகச் சமாதானம் ஏற்பட வேண்டும்.

இவ்வாறு மன்னார் மாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய இராயப்பு யோசேப்பு தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்ட வாழ்வுதய நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாமக்கள் தின விழா கடந்தவாரம் மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் போரினால் உயிரிழந்த பொது மக்களை நினைவு கூர்ந்து குடும்ப உறுப்பினர்களுக்கு நினைவுப் பரிசிலும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரைநிகழ்ததிய மன்னார் ஆயர் அதிவந்தனைக்குரிய இராயப்பு யோசேப்பு:-

கடந்தகால யுத்தத்தினால் நாம் பல வகையில் பாதிப்புக்குள்ளானோம். இழப்புக்களைச் சந்தித்துள்ளோம். இவ்விழப்புக்களை ஈடுசெய்வதானால் ஒருவரையொருவர் மன்னித்து கரம் கொடுத்து உதவுவதனால் மட்டுமே விரக்தி மனநிலையினையும், வெறுப்பு மன நிலையினையும் இல்லாது ஒழிக்கமுடியும்.

யுததம் அழிவுக்கு வழிசமைத்தது. தொடர்ந்தும் நாம் பாதிப்புக்களை சந்திக்க முடியாது. விரைவாக சமாதானம் ஏற்படவேண்டும். அதற்காக நாம் அனைவரும் ஒருமித்துச் செயற்படுவோம் - என்றார். இந்நிகழ்வில் தொடர்ந்து வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், மன்னார் மாவட்ட அரச அதிபர் வே.விஸ்வலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (ப-204)

# சிறுவயதில் ஊட்டப்படும் சமய அறிவு பிற்காலத்தில் பயனுள்ளதாக இருக்கும்

வலி.தெற்கு,டிசெ.23

'சிறுவயதிலேயே பிள்ளைகளுக்கு சமய பழக்க வழக்கங்களை ஊட்டுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மிகவும் பயனுள்ளதாக அமையும். உடுவில் இந்து இளைஞர் மன்றம் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது பாராட்டத்தக்கது. அவர்களின் பணிகள் சிறக்க தேவையான உதவிகளைச் செய்துதர முயற்சிப்பேன்'.

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினரால் நடத்தப்படும் முன்பள்ளி மாணவர்களின் பரிசளிபபு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் மேற்கண்டவாறு கூறினார்.

உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு மன்றத்தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமை வகித்தார்.

இந்துமன்றச் செயலாளர் ப.சசிவர்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:

எமது நாட்டில் உள்ள வேறு சில மதங்களுக்கு இருக்கின்ற வசதிகள், வாய்ப்புக்கள், பின்புலன்கள், பணபலம், அரசியல்பலம் என்பன இல்லாத ஒரு சமயமாக எமது இந்து மதம் விளங்குகின்றது.

அரசு இந்துமதத்துக்கென்று ஒரு அமைச்சை நியமிப்பது வழமையாகிவிட்டது. இந்த அமைச்சு அரசியலமைப்பு ஊடாக வழங்கப்படும் உதவிகள் இந்து சமயத்துக்கு கிடைப்பதாக இல்லை. இது போன்ற மன்ற அமைப்புகளூடாக எமது சமய பாரம்பரியங்களையும் சிறுவர் கல்வியையும் வளர்ப்பது நமது கடமைப்பாடாக அமைந்துவிட்டது. உடுவில் இந்து இளைஞர் மன்றம் போனற அமைப்புகளுக்கு நாம் ஆதரவு வழங்க வேண்டும் எனக் கூறினார்.

மன்றத்தின் ஆலோசகர் வி.பரிபூரணானந்த சர்மா ஆசியுரை வழங்கினார்.

உடுவில் கிழக்கு, உடுவில் மேற்கு பாலர் பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற நவராத்திரி தின திருமுறை ஓதல், பணணிசை, திருக்குறள் மனனம் போன்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளும் வழங்கப்பட்டன.

மழலைகளின் கலைநிகழ்ச்சிகளும் விழாவில இடம்பெற்றன. (ப-152)

# கனவிலும் கூட கற்பித்தல்பற்றி சிந்திப்பவரே ஆசிரியர் ஆவார்

கனவில் கூட கற்பித்தல் பற்றிச் சிந்திப்பவர்களே ஆசிரியர்கள். அவர்களுக்கு ஓய்வு என்பது கிடையாது என்று கூறினார் பேராசிரியர் எஸ்.திருநாவுக்கரசு.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரியை திருமதி பத்மாவதி இரத்தினவேலின் சேவை நலன் பாராட்டுவிழா மேற்படி கலாசாலை மண்டபத்தில் ஆசிரிய மாணவர் தலைவர் கே.சுதாகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து பேசிய பேராசிரியர் திருநாவுக்கரசு கடமையை ஒரு பாரம்பரியம் எனக்கொண்டு மாணவர்களின் உயர்வுக்காக சேவையாற்றியவர் திருமதி இரத்தினவேல்.

உயர்ந்த நிலையில் இருந்த போதும் எளிமையாக அன்பும் பண்பும் நிறைந்தவராக மாணவர்களின் சந்தேகங்களைக் களையும் திறமையும் ஆற்றலும் கொண்டவராகப் பணியாற்றிய அவர் மாணவர்களுக்குத் தன்னால் முடிந்த அளவு நிறைவான சேவையை வழங்க வேண்டும் என்ற அக்கறையுடன் செயற்பட்டார் என்று கூறினார்.

சுதாகரன் தனது தலைமையுரையில், ஒரு நல்லாசிரியராகத் தனது மாணவர்கள், எதிர்காலத்தில் தாம் கற்பிக்கப் போகும் மாணவர்களை நாட்டிற்கு உகந்த பிரஜைகளாக உருவாக்க வேண்டும் என்ற சிந்தனையுடன் பணியாற்றியவர் என்றார்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, உடற்கல்வி ஆசிரியர் க.கணபதிப்பிள்ளை ஆகியோரும் பேசினர். கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ப-111)

தென்மராட்சிப் பிரதேசத்தில்

# அபிவிருத்திச் சங்கங்களுக்கு தையல் இயந்திரங்கள்

தென்மராட்சி,டிசெ.23

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள அபிவிருத்திச் சங்கங்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்குவதற்குப் பிரதேச செயலகத்தினர் நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

இதற்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் 90 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கம், நாவற்காடு சூரியகாந்தி மகளிர் அபிவிருத்திச் சங்கம், இயற்றாலை மகளிர் அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றுக்கே தையல் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு சங்கத்திற்கும் தலா இரண்டு தையல் இயந்திரங்கள் வழங்குவதற்கு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-117)

## நாடாளுமன்ற உறுப்பினர்களால் கைப்பணி முயற்சிகளுக்கு நிதி

தென்மராட்சி,டிசெ.23

வரணி மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் கைப்பணி முயற்சிகளை ஊக்குவிப்பதற்கெனவும் மீசாலை சித்திரவேலாயுதர் சனசமூக நிலையப் புனரமைப்புக்கெனவும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ந.ரவிராஜ் ஆகியோரால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின்கீழ் இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (10-203-117)

## கைவேலைக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,டிசெ.23

வடமராட்சி பிரிட்டன் 'பிஸ்னஸ் ஸ்கூல்' மாணவர்களால் நடத்தப்படும் கைவேலைக கண்காட்சி இன்றும் நாளை வெள்ளிக் கிழமையும் காலை 9 மணிமுதல் பாடசாலை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.(10-202)

## பலகார வகைகளுக்குப் பற்றாக்குறை

வடமராட்சி,டிசெ 23

மா தட்டுப்பாட்டினால் வடமராட்சிப் பிரதேசத்தில் பேக்கரிகள் மூடப்பட்டுள்ளதுடன் தேநீர்க்கடைகள், ஹோட்டல்களில் பலகாரவகைகளுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இப்பிரதேச மக்கள் மாவினைப் பெறுவதற்காகப் பல்வேறு இடங்களிலும் அலைந்து திரிகின்றனர்.(10-173)

## பரிசளிப்பு விழா பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,டிசெ.23

வல்வெட்டித்துறை விநாயகர் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் 110 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஜனவரி மாதம் 8ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.(10-203)


அதிக சக்தியைத் தந்து வயிற்றுப் போக்கை நிறுத்தும்
Brownson Arrowroot Powder
பிரவுண்சன் அரறூட் மாவு
உண்மையானது, நம்பிக்கையானது என்று பரீட்சிக்கப்பட்டது. பாரம்பரியமாக வைத்தியர்கள் அறிவுறுத்தும் அரறூட் கஞ்சி குழந்தைகள், வயதானவர்கள் அனைவருக்கும் போசாக்குமிக்க ஓர் உணவு
யாழ் நகரில் கிடைக்குமிடம்
ஸ்ரீ காந்த் எசன்ஸ் அன் குரோசரீஸ்
161,K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
Tel : 021-2219
TALENT
BROWNSON INDUSTRIES
139,பாங்ஷால் வீதி, கொழும்பு - 11
Tel : 2327197, Fax : 2458507



பண்டிகைக்கேற்ற பட்டாசுகள்! சம்பியன்
இப்பொழுது விற்பனையாகின்றன!
☆ சம்பியன் வெடிகள் ☆ சம்பியன் பூந்திரிகள்
☆ சம்பியன் சக்கர வாணம் ☆ சம்பியன் ஈர்க்குவாணம்
☆ சம்பியன் கோர்வை வெடி ☆ சம்பியன் மத்தாப்பு
மற்றும் பல
உங்கள் பண்டிகைக் கொண்டாட்டங்கள் மகிழ்ச்சியில் திளைக்க உங்களுக்காகவே தயாரிக்கப்பட்டவை.
மொத்தமாகக் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021 222 2567
குறிப்பு: மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு வான் மூலம் இலவச விநியோகம் செய்யப்படும். (சி-39813)(26-14-15-24)



உ
ஓம் ஸ்ரீ சாயிராம்
CEYLON MEDICAL COLLEGE COUNCIL
PHARMACIST'S (EXTERNAL) EXAMINATION 2005/2006
புதிய வகுப்புகள், மீட்டல் வகுப்புகள்
ஆரம்பம்:- 01.01.2005 சனிக்கிழமை மாலை 2 மணி
சாயிராம் பார்மசி கல்வி, பட்டப்படிப்புகள் கல்லூரி
57/13. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.
குறைந்தபட்ச கல்வித் தகைமைகள்:-
G.C.E O/L With Credit Pass in Science And Simple Passes in English And Maths
G.C.E A/L Compulsory 3 Subjects with A Credit pass in chemistry
★ கற்கை நெறி அனுமதிக்கும், மேலதிக விவரங்களுக்கும் எதிர்வரும் 27.12.2004 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும். (39846)(12-14-15-24)



கையிருப்பைக் குறைக்கும் நோக்குடன்
மலிவு விற்பனை
5/= தொடக்கம் 50/= வரையில் புத்தகங்கள்
அப்பியாசப் புத்தகங்கள்

| | | |
|---|---|---|
| 1 | கட்டு | 4.75 |
| 2 | கட்டு | 9.25 |
| 3 | கட்டு | 13.75 |
| 4 | கட்டு | 18.25 |
| 5 | கட்டு | 22.50 |

விலையில் றிச்சாட், அந்திவானம் பதிப்பகங்களின் அப்பியாசப் புத்தகங்களும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(சி-39700) (24-14-15)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### இராசையா ராஜ்குமார்

மலர்வு 04-07-1980 உதிர்வு 03-01-2004

கற்பனைகள் பல சுமந்து - நம்
குலத்தை வாழ்விக்க எண்ணி
கடல் கடந்து சென்றவேளை
கலைந்த கற்பனைகளுடன்
கடவுள் பாதம் சென்றடைந்தீரே!
ஆண்டொன்றானாலும் - உன் முகம்
இதயத்தி லிருக்கும் நீங்காதையா!

உமது நினைவில்:
தந்தை, தாய், சகோதரர்கள்,
சகோதரிகள், மைத்துனர்கள்,
மருமக்கள், உறவினர்கள்.

கல்லூரி வீதி, பருத்தித்துறை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 15 - 08 - 1926



ஆண்டவன் அடியில் 23 - 12 - 2003

அமரர்

### அன்ரனி ஜோசப் கணபதி தம்பிராசா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அன்பின் திருவுருவே!
பாசத்தின் ஒளிவிளக்கே
நீங்கள் மறைந்து ஓர் ஆண்டு சென்றாலும்
எம் பாசத்தின் நினைவுகள் எம்மைவிட்டு அகலாது.
அன்புத் தெய்வத்தின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"பேரின்பவாசம்"
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை. (39862) (24-14-15)


பண்டிகைக் கால பரிசு மழை!




● முதலாம் பரிசு - 50 கிராம் கோல்ட் பார்
மற்றும் 20 கிராம், 10 கிராம், 4 கிராம் பரிசுகள் 70 அதிர்ஷ்டசாலிகளுக்கு
வெளிநாடுகளில் இருக்கும் உங்கள் அன்புக் குரியவர்களிடம் இருந்து வெஸ்டர்ன் யூனியன் பணப் பரிமாற்றத்தின் மூலம் பணத்தை இலங்கையின் அங்கீகாரம் பெற்ற MMBL உபமுகவர்கள் ஊடாக பெற்று பரிசுகளை வெல்லுங்கள்!
விபரங்களுக்கு MMBL முகவரை தொடர்பு கொள்ளுங்கள் 011 2372 333
ரூபாய் 250,000 ற்கு மேல் காசு பெறும் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான பரிசுகள்.
WESTERN UNION பணப் பரிமாற்றம்
• நிபந்தனைகள் பிரயோகிக்கப்படும்
• இச் சலுகை டிசம்பர் 2004, ஜனவரி 2005 மாதங்களில் பணப் பரிமாற்றம் செய்பவர்களுக்கு மட்டும்!
AUTHORISED AGENT
MMBL Money Transfer (Pvt) Ltd.
300, Galle Road, Colombo 3.
(வெளிநாட்டு நாணயம் மாற்று முகவர்)
● அநேகமான இடங்கள் 365 நாட்களும் திறந்திருக்கும்
FLEX Graphic Lisence No. C/130/2004

# ஏறாவூரில் உலர் உணவுப் பொருள் மோசடி தேடுதலில் பொலீஸார் ஒரு தொகுதியை மீட்டனர்

## கொதிப்படைந்த மக்கள் செயலகம்முன் ஆர்ப்பாட்டம்

ஏறாவூர், டிசெ.23

உலக உணவுத் திட்டத்தின்கீழ் ஏறாவூர் ஏழை மக்களுக்கு வழங்கப்பட்ட உலர் உணவுப் பொருள்களில் மோசடி இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

- இவ்வாறு மோசடி மூலம் அபகரிக்கப்பட்டு, பதுக்கிவைக்கப்பட்டிருந்த பொருள்களில் ஒரு தொகுதியை ஏறாவூர் பொலீஸார் கடந்த செவ்வாயன்று கைப்பற்றினர். இதுதொடர்பாக இருவர் கைதுசெய்யப்பட்டனர். சம்பவத்தை அறிந்த பொதுமக்கள் பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஏறாவூர் பொலீஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றையடுத்து அவர்கள் நேற்று முன்தினம் அதிகாலை இப்பிரதேசத்தைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர். வீடொன்றினுள் புகுந்து திடீர்ச் சோதனை மேற்கொண்ட பொலீஸார், அங்கு பதுக்கப்பட்டிருந்த உலர் உணவுப் பொருள்களைக் கைப்பற்றினர்.

30 மூடை அரிசி, 28 மூடை கோதுமை மா, 7 மூடை பருப்பு. 3 மூடை சீனி உட்பட 68 மூடை உலர் உணவுப் பொருள்கள் அங்கிருந்து கைப்பற்றப்பட்டன என்று பொலீஸார் தெரிவித்தனர். மேலும் சில இடங்களில் இவ்வாறு உலர் உணவுப் பொருள்கள் பதுக்கிவைக்கப்பட்டுள்ளன எனவும் அவற்றையும் கைப்பற்றத் தாம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் ஏறாவூர் பொலீஸ்நிலையப் பொறுப்பதிகாரி தர்மசேன ரட்ணாயக்க தெரிவித்தார்.

வீட்டிலிருந்து உலர் உணவுப் பொருள்களை மீட்ட பொலீஸார், இதனுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் இரண்டுபேரையும் கைதுசெய்துள்ளனர். இரண்டு உழவு இயந்திரங்களையும் அவர்கள் கைப்பற்றியுள்ளனர்.

ஏழை மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதற்காக அனுப்பிவைக்கப்பட்ட இந்த உலர் உணவுப் பொருள்கள் இவ்வாறு இடையில் கையாடப்பட்ட சம்பவம் ஏறாவூரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏறாவூர் நகரப் பிரதேச செயலகம் மற்றும் ஏறாவூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்பவற்றுக்கு முன்னாள் நேற்றுமுன்தினம் பொதுமக்கள் குழுமிநின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சம்பவத்துடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறு கோரி, சுமார் ஐந்நூறுக்கும் மேற்பட்ட மக்கள் அங்கு குழுமி கோஷம் எழுப்பினர். கண்டனச் சுலோகங்களையும் ஏந்திநின்றனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் -

இதுதொடர்பான விசாரணைகளைத் தாம் தற்போது மேற்கொண்டு வருவதாகவும் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி ரி.தினேஸ் பொதுமக்களுக்கு உறுதியளித்தார். அதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர்.

இதுபற்றிய முறைப்பாடுகளை எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்குமாறு பொதுமக்களைத் தான் கோரியுள்ளதாகவும் இதுபற்றிய விசாரணைக் கூட்டத்தைப் பிரதேசசெயலகத்தில் நடத்தத் தாம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகவும் உதவிப் பிரதேச செயலாளர் கூறினார்.

உலக உணவுத் திட்டத்தின்கீழ் சிரமதான வேலைகளில் ஈடுபடும் பொதுமக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதற்காக உலக உணவுத் திட்டத்தினால் ஏறாவூர்ப் பிரதேசத்திற்கு வழங்கப்பட்ட 10 லட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களிலேயே மோசடி இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏறாவூர் பகுதியிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த உணவுப் பொருள்களே சட்டவிரோதமான முறையில் வியாபாரிகளுக்கு விற்கப்பட்டுள்ளன என ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாகப் பொலீஸார் தொரிவித்தனர். இது பற்றிய மேலதிக புலன் விசாரணையை ஏறாவூர் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4)

# மேல்மாகாணசபை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, டிசெ.23

மேல்மாகாணசபை உறுப்பினர் நாமல் குணவர்த்தனவின் படுகொலை குறித்து அரசு முழுமையான விசாரணைகளை நடத்தாமல் இருப்பதை ஆட்சேபித்து மேல்மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்றுமுன் தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

பத்தரமுல்ல, டென்ஸில் கொப்பேக்கடுவ வீதியிலுள்ள மேல்மாகாணசபைக் கட்டடத்தின் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இங்கு கருத்துத் தெரிவித்த மேல்மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கித்சிறி கஹட்ட பிட்டிய, மாகாணசபை உறுப்பினர் நாமல் குணவர்த்தன படுகொலை செய்யப்பட்டு பல மாதங்கள் கடந்த நிலையிலும், அது தொடர்பான துளியளவு விசாரணை கூட நடைபெறாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது எனக் கூறினார்.

குற்றவாளிகளைக் கைதுசெய்யாமல் அவர்களைச் சுதந்திரமாக நடமாடவிட்டிருக்கிறது அரசு. சம்பந்தப்பட்டோர் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு, அவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தும்வரை இந்தப் போராட்டம் தொடருமென்று அவர் மேலும் கூறினார். (க-4)

# எஸ்.பிக்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்பை மீளாய்வு செய்ய 29ஆம் திகதி மனு

கொழும்பு.டிசெ.23

முன்னாள் அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான எஸ்.பி. திஸநாயக்கவிற்கு எதிராக வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பை மீள் பரிசீலனை செய்யுமாறு கோரும் மீளாய்வு மனு எதிர்வரும் 29ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

எஸ்.பி. திஸநாயக்கவை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் குழுவின் உறுப்பினர்களான ஜி.எல்.பீரிஸ், கே.என். சொக்ஸி, ஷிவ்லி அஸீஸ் மற்றும் பல முக்கிய சட்டத்தரணிகள் இதற்கான இறுதி ஆவணங்களைத் தயாரிக்கும் பணியை நிறைவுசெய்திருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், ஒரு வாரகால வெளிநாட்டுப் பயணத்தினை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் கட்சியின் முக்கியஸ்தர்களைச் சந்தித்து, எஸ்.பியின் விடுதலை தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைக் கேட்டறிந்துள்ளார்.

எஸ்.பியை போகம்பறை சிறைச்சாலைக்கு மாற்றப்போவதாக வெளிவந்திருக்கும் தகவல்கள் குறித்து ஆராயுமாறும் எதிர்க்கட்சித் தலைவர் பணிப்புரை விடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-க-4)



பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மகப்பேற்று நிலையத்தின் திறப்புவிழா அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் இ.தெய்வேந்திரன் நாடாவெட்டி கட்டடத்தை திறந்துவைப்பதையும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மா, வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் ஏ.செல்வநாயகம், மாதகல் பங்குத் தந்தை அருட்திரு அ.கிறிஸ்தோபர் அடிகளார் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)*

# வாசகர் திருமுகம்

## சுற்றுநிருப முரண்பாடுகளை நீக்க நடவடிக்கை தேவை

இலங்கை ஆசிரியர் சேவை நியதிச்சட்டம் உருவாக்கப்பட்டு 1994-10-06 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் ஆசிரியர்களின் சேவைக்காலம் கருத்தில் கொள்ளப்பட்டு உரிய வகுப்புத் தரங்களுக்குப் பதவி உயர்த்தப்பட்டு 1995-01-01ஆம் திகதியிலிருந்து அவர்களுக்கு உரிய சம்பளங்களும் வழங்கப்பட்டன.

சேவையில் உள்ள ஆசிரியர்களின் பதவி உயர்விற்கும் சம்பள ஏற்றத்திற்குமாக உருவாக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை நியதிச்சட்டம் பிரமாணங்களினால் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் கல்வி, உயர்கல்வி அமைச்சின் 2000/14 இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைவாக ஆசிரியர்களின் சேவைக்காலம் நிரந்தர நியமனம்பெற்ற தினத்திலிருந்து புள்ளி அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்டு அவர்களுக்குரிய பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு, அதற்கான அதிகரித்த சம்பளங்கள் கொடுக்கப்பட்டமை பல ஆசிரியர்களை மனநிறைவு அடையச்செய்துள்ளது.

எனினும், சேவையில் உள்ள ஆசிரியர் ஒருவர் 1994-10-06ஆம் திகதிக்கு முன்பே 20 புள்ளிகளுக்கு மேலாகப் பெற்றதோடு 50 வயதினையும் நிறைவுசெய்திருந்தாலும் இவர்களது வகுப்பு ஒன்றிற்கான பதவி உயர்வு 1994-10-06 ஆம் திகதியிலிருந்தே செயற்படுத்தப்பட்டுள்ளது. இதனால், நீண்டகாலம் பணியாற்றி 29-37 வரையான புள்ளிகளைப் பெற்றுள்ள ஆசிரியர்கள் தமது 60ஆவது வயதில் ஓய்வுபெறும்போது வகுப்பு ஒன்றிற்கான உச்ச நிலைச் சம்பளத்தைப் பெறமுடியாதுள்ளனர். 2-3 சம்பள ஏற்றங்களை மட்டுமே பெற்று ஓய்வுபெற்றுள்ளனர். இவர்களால் தமக்குரிய சேவைக்கால உச்சநிலை நன்மைகளையும் பெறமுடியவில்லை.

ஆனால், கல்வி உயர்கல்வி அமைச்சின் இல. 2000/14 சுற்றுநிருபம், சேவையில் 1994-10-06ஆம் திகதிக்கும் 2000-12-31 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் 20 புள்ளிகளைப் பெற்று 50 வயதினை நிறைவுசெய்பவர்களுக்குத் தமது 29-30 ஆவது புள்ளி [illegible]களில் வகுப்பு ஒன்றிற்கான உச்ச சம்பளத்தையும் ஓய்வூதிய நன்மைகளையும் உச்சநிலையில் பெற வாய்ப்பளிக்கின்றது.

ஆசிரியர்களின் நலன்களுக்காக உருவாக்கப்பட்ட ஆசிரியர் சேவைச்சட்டப் பிரமாணங்களுக்கு அமைய உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட ஆசிரியர்களின் 29-37 வரையான புள்ளிகளைப் பெற்றவர்கள் தமது சம்பளம், ஓய்வூதியம் என்பவைகளில் குறைபாடுகள் ஏற்பட வாய்ப்பளித்திருப்பதனை எவரும் ஏற்றுக்கொள்ளமுடியாது. கல்வி, உயர்கல்வி, அமைச்சின் சுற்றுநிருபம் இல.2000/14 அதிக புள்ளிகள் பெற்றுள்ளவர்களின் சேவையில் சில வருடங்களை - சில புள்ளிகளைப் பின்தள்ளி நீக்கியதோடு அவர்களுக்குரியதை வழங்க மறுத்ததைக் காட்டுகின்றது.

எனவே, உள்ளீர்ப்புப் பெற்ற வகுப்பு ஒன்றிற்குரிய ஆசிரியர்கள் 1994-10-06இற்கு முன் எவ்வாண்டில் 20 புள்ளிகள் - 50 வயதினை நிறைவுசெய்தார்களோ அவ்வாண்டிலிருந்து வகுப்பு ஒன்றிற்குப் பதவி உயர்த்தப்பட்டு அவர்களுக்குரிய சம்பளம் நிலுவைகளுடன் வழங்கப்படுவதுடன், உச்சநிலை ஓய்வூதியத்தையும் அதன் நன்மைகளையும் பெறுவதற்குரிய ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படவேண்டும். இது தமக்குரிய பணிநல நன்மைகளை நீதியாகப் பெற வழி செய்கின்றது.

கல்வி உயர் கல்வி அமைச்சு, செயலாளர், சம்பள முரண்பாட்டு ஆணைக்குழு, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியன மேற்குறித்த விடயம் தொடர்பாகத் தமது கவனத்தை எடுத்து முரண்பாடுகளை விரைவில் நீக்கி வைக்குமாறு இவ்வேண்டுகோளைப் பணிவன்புடன் முன்வைக்கின்றேன்.

நுணாவில் மேற்கு. **ப.சந்திரசேகரம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

## மக்கள் வங்கியின் தற்காலிக ஊழியர்

யாழ். மாவட்டத்தில் கடந்த ஆறு, ஏழு வருடத்திற்கு மேலாக மக்கள் வங்கிக்கிளைகளில் தற்காலிக ஊழியராகப் பணியாற்றியவர்களை இடைநிறுத்தியது, பாதிக்கப்பட்ட ஊழியர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள மக்கள் வங்கிக்கிளைகளில் 20 இற்கும் மேற்பட்ட தற்காலிக ஊழியாகள் கடந்த 6 வருடங்களுக்கு மேலாக நாளாந்த வேதனத்துடன் கடமையாற்றி வந்தோம்.

நாம் தற்காலிக ஊழியராகக் கடமையாற்றி வந்தவேளையில் புதிய ஊழியர்கள் பலர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். இதேவேளை, பல தடவை மக்கள் வங்கி தலைமையகத்துடன் தொடர்புகொண்டு எம்மை நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தோம்.

எம்மை நிரந்தர நியமனம் செய்யப் பலமுறை மக்கள் வங்கியின் தலைமையகம் முயற்சி செய்தபோதும் சில அதிகாரிகளின் அசமந்தப்போக்கினால் எமக்கு இந்நிலை ஏற்பட்டது எனலாம்.

இதேவேளை, நாம் பலவருடங்கள் மக்கள் வங்கியின் நேரடி தற்காலிக ஊழியராகக் கடமையாற்றிய பின்பு எம்மை இன்னுமொரு பொது அமைப்பின் ஊடாகத் தற்காலிக ஊழியர்களாக நியமிப்பது எந்தளவு நியாயமானது என கேள்வி எழுகின்றது.

இதேவேளை, ஒரு நிறுவனத்தில் 6 மாத காலப்பகுதியில் தற்காலிக ஊழியராகக் கடமையாற்றினால் அவரை நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது பொதுவிதி.

இது மக்கள் வங்கிக்கு விதிவிலக்கா என்பது கேள்விக்குறியான விடயம் ஆகும்.

எனவே, பல இன்னல்கள் மத்தியில் கடமையாற்றிய ஊழியர்களை நிரந்தர நியமனம் செய்வது பற்றி மக்கள் வங்கித் தலைமைப்பீடம் இதயசுத்தியுடன் செயற்படவேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

**பாதிக்கப்பட்ட ஊழியர்.**

## யதார்த்தத்தை எடுத்துக்காட்டியது

03-10-2004 அன்றைய 'உதயன்' சூரியகாந்தியில் மார்க்அன்ரனி எழுதிய சிறுவர் உரிமைகள் சம்பந்தமான கட்டுரை யதார்த்தத்தை எடுத்துரைத்தது.

வெள்ளைத் தோலுடன் வீதியுலாவரும் ஒரு சிலர் மட்டும்தான் இம்மண்ணின் மைந்தரல்ல, அதையும் தாண்டிய இன்னொரு உலகத்தையும் படம் பிடித்துக்காட்டியது.

பாதிக்கப்பட்ட மக்கள் பரிகாரம் எதுவுமின்றி இருக்கிறார்கள். பல பெரிய வெளிநாட்டு நிறுவனங்கள், உதவிகள் செய்கின்றோம், கிராமங்களை அபிவிருத்தி செய்கிறோம் என்று கூறிக்கொண்டு உண்மையில் பாதிக்கப்பட்டவர்களை இனங்கண்டு உதவிகள் வழங்கப்படுவதில்லை.

சிறுவர்கள் தம் உரிமையை அனுபவிக்காது ஓட்டைக்கொட்டிலில் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி உழலும் சிறுவர்கள் எம் கிராமங்களில் ஏராளம்.

அபிவிருத்தி என்கிற பெயரில் தம் சட்டைப் பைகளை நிறைக்கும் கனவான்கள், மனிதாபிமானத்துடன் செயற்படுவதன் மூலமே, சிறுவர் அபிவிருத்தி மேம்படும்.

வெளிநாட்டு நிதி உதவிகளைக் கொண்டு இங்கு இயங்கும் சேவை நிறுவனங்கள் உரிய பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்குச் சேவைகள் சென்றடைய வழி சமைப்பார்களா?

ஆனைக்கோட்டை. **எம்.வசந்தன்.**

# வெள்ளத்தில் தப்ப மரம் ஏறியவர் நான்கு நாள்களின் பின்னர் மீட்பு

பட்டிருப்பு,டிசெ.23

வெள்ளநீரில் மூழ்குவதில் இருந்து தப்புவதற்காக நான்கு நாள்களாக மரத்தின் மீது ஏறித் தங்கிய ஒருவரை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் மீட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டம் மயிலவெட்டுவான் ஈரளங்குளத்தில் இந்தச் சம்பவம் இடம்பெறறது.

தொடர்ந்து மழைபெய்து கொண்டிருந்ததால் வெள்ளத்தின் மட்டம் அதிகரித்து வந்துள்ளது. இதனை அடுத்து தனது உயிரைக் காப்பாற்றும் பொருட்டு ஒருவர் அங்கிருந்த பெரிய மரம் ஒன்றில் ஏறி நான்கு நாள்களாக உணவு எதுவுமின்றி இருந்துள்ளார்.

நான்கு நாள்களின் பின்னர் அப்பகுதியில் வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில ஈடுபட்டிருந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் இவரைக் கண்டு மீட்டுப் பாதுகாப்பான இடத்தில் சேர்த்துள்ளனர். (க)

# நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலை: சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, டிசெ.23

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை ஜனவரி ஐந்தாம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் குசலா சரோஜினி வீரவர்த்தன உத்தரவிட்டார்.

மேற்படி கொலைச்சம்பவம் தொடர்பான விசாரணை நேற்றுமுன்தினம் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்றது. பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த வழக்கின் ஆறு சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்ப் படுத்த முடியாதநிலை இருப்பதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

ஆனால், இந்தக் கொலை வழக்கின் முக்கய மான சந்தேகநபரான நெளபர் என்பவர் பொலஸாரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நீதிமன்றம் அழைத்துவரப்பட்டு ஆஜர்செய்யப்பட்டார். பின்னர் நீதிவானின் பணிப்புரைக்கமைய நீதிவான் அலுவலகத்தில் வைத்து அவரின் வாக்குமூலமும் பதியப்பட்டது.

சந்தேகநபர்களை ஜனவரி 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். நேற்றைய விசாரணையின் போது மேற்படி சந்தேகநபரின் சார்பில் எந்த சட்டத்தரணிகளும் ஆஜராகவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 17 - 03 - 1935

ஆண்டவன் அடியில் 23 - 12 - 2001



### திருமதி தம்பித்துரை மரியம்மா

ஆண்டுகள் மூன்றானாலும்
ஆறவில்லை நின்துயரம்
இனிய முகம் மறைந்து
இருண்டதம்மா எம்வாழ்வு
பாருலகில் யாருண்டு எமக்கென்று
பரலோகம் ஏகினீர் தேடுகிறோம் உம்மை!
எமைவிட்டு எங்கு சென்றீர்?
தினமும் உங்கள் ஆத்மா
சாந்தியடைய ஆண்டவனை மன்றாடுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், உற்றார், உறவினர்கள்.

த.அ.தம்பித்துரை,
185, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (39924)(26-14-15)

## தென்மராட்சி வலய அதிபர்களுக்கான பயிற்சி வகுப்புகள்

தென்மராட்சிப் பிரதேச செயலக அனுசரணையுடன் வலதுகுறைந்தோருக்கான சமுதாய அடிப்படை புனருத்தாரண தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் தென்மராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 28ஆம் திகதி காலை 9மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சி வகுப்பில் தென்மராட்சி வலயப் பாடசாலைகளின் அதிபர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ப-117-202)

## நிர்வாகிகள் தெரிவு

குருநகர் தொடர்மாடியில் அமைந்துள்ள பொனனம்பலம் வீடமைப்பு மக்கள் அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

றெக்கிளமேசன் கிழக்கு கிராம உத்தியோகத்தர் எஸ்.யூலன் தலைமையில் நடைபெற்ற இப பொதுக்கூட்டத்தில் தலைவராக த.குளோடியஸும் செயலாளராக அ.யுவாவும் தெரிவுசெய்யப்பட்டனர். அத்துடன், நிர்வாக உறுப்பினர்களாக ஒனபது பேரும் தெரிவுசெய்யப்பட்டார்கள்.(ஐ-51)

## பல்கலைக்கழகங்களுக்கு 14,850 மாணவர்கள் இம்முறை தெரிவு

காரைதீவு, டிசெ.23

அரச பல்கலைக்கழகங்களுக்கு இம்முறை 14ஆயிரத்து 850 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டைவிட இம்முறை மேலதிகமாக 590 மாணவர்கள் தெரிவாகியுள்ளனர். இந்த அதிகரிப்பானது பொறியியல்துறை, தகவல் தொழில்நுட்பத்துறை என்பவற்றுக்கே வழங்கப்பட்டுள்ளது.

இம்முறை பொறியியல்துறைக்கு கடந்த ஆண்டைவிட மேலதிகமாக 75 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். மருத்துவத் துறையில் மாற்றமில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-202)

## இரு பல்கலைகளில் மாணவர் விடுதிகள் அமைக்கத் திட்டம்


இலங்கையிலுள்ள இரு பல்கலைக்கழகங்களுக்கு மாணவர் விடுதிகள அமைப்பதற்குப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு திட்டமிட்டுளளது. பேராதனைப் பல்கலைக்கழகம், ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் ஆகியவற்றிலேயே இவ்விடுதிகள் அமைக்கப்படவுள்ளன. இதற்கென விசேட குழுவொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், கட்டுமான வேலைகள் ஜனவரியில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கான நிதி, இடம் போன்ற வசதிகள் அரசினால் வழங்கப்பட்டுள்ளன. (ப-202)

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 05 - 12 - 1954

உதிர்வு 23 - 12 - 2001



### அமரர் நிற்சிங்கம் சிவராஜன்

ஆண்டுகள் மூன்று அகன்றே சென்றாலும்
அகலாது எம் மனதை விட்டு உம் நினைவுகள்!
நீங்கள் விட்டுச் சென்ற நற் கருத்துக்கள்
என்றும் எம்மை நல்வழிப்படுத்தும்!

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்*

- அன்பு உள்ளங்களான
மைத்துனன், தங்கை, மருமகன்.

இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, (39939)(46-14-15-26)

## நெஞ்சை விட்டகலா

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

ஈழமண்ணில 15 - 04 - 1926

ஈசனடியில் 05 - 12 - 2003



### அமரர் சின்னத்தம்பி அன்பு

*எங்கள் குடும்பத் தலைவராய் இருந்து
எம்மை நல்வழியில் நடத்தி - இன்று
வானுறையும் தெய்வமாகி ஓராண்டு
ஓடி மறைந்து விட்டது!
உங்கள் நினைவோடு விழித்திருக்கும்*

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
விஜயச்சந்திரன் (மகன்).

*16/1, சிவன் பண்ணை வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.*

(39935)(42-14-15-26)

## இறக்குமதியான கிழங்கு, பெரிய வெங்காயம் சந்தையில் விற்பனைக்கு

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் என்பன நேற்று முதல் சந்தைக்கு விடப்பட்டுள்ளன. இதனால் அவற்றின் விலை பெருமளவில் குறையுமென்று வர்த்தக, வாணிபத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே நம்பிக்கை வெளியிட்டார்.

சந்தையில் இந்தப் பொருள்கள் தாராளமாகக் கிடைப்பதால் உருளைக்கிழங்கு ஒரு கிலோ ஐம்பது ரூபாவாகவும், பெரிய வெங்காயம் ஒரு கிலோ நாற்பது ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுமென்று அமைச்சர் குறிப்பிட்டார்.

ஆயிரம் தொன் உருளைக்கிழங்கும் ஆயிரம் தொன் பெரிய வெங்காயமும் இந்தியாவலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். எதிர்வரும் நாள்களில் இன்னும் இறக்குமதி செய்யவுள்ளோம். சந்தையில் முட்டை விலை அதிகரித்திருக்கிறது. இந்த நிலை தொடருமானால் வெளிநாடுகளிலிருந்து முட்டையையும் இறக்குமதிசெய்து முட்டையொன்றை நான்கு ரூபா வீதம் விற்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டிவரும் - என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (க-4)


வ
சிவமயம்





சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை பண்பாட்டுப் பேரவை
நடத்தும்

வருடாந்த திருவாசக விழா - 2004

காலம்: நாளை 24-12-2004 வெள்ளிக்கிழமை
காலை 9.00 மணி

இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்

அருளுரை: நல்லை ஆதீன குருமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

சிறப்புச் சொற்பொழிவு: கந்த. சத்தியதாசன்
(ஆசிரிய ஆலோசகர், இந்துசமயம்)

மாணவர் நிகழ்வு: போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவர்களின் பண்ணிசை நிகழ்வும் தொடர்ந்து பரிசளிப்பும் இடம்பெறும்.

*இறுதி நிகழ்வாக வாராந்த நிகழ்வின் வரிசையில்*
முருக நாம பஜனை

வழங்குபவர்கள்: சுவாமி சித்ருபானந்தா தலைமையில்
முருகனடியார்கள்

குறிப்பு: ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் விஷேட அபிஷேகத்தைத் தொடர்ந்து நாயன்மார்களின் திருவுருவப் படங்களும் திருவாசக ஏடுகளும் ஆச்சிரமத்திற்கு ஊர்வலமாக எடுத்துவரப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரமம்,
செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

- பேரவை.

(சி-39960)(26-14-15)




## 1 வது பிறந்தநாள் வாழ்த்து

*சுராவத்தை சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி உதயசூரியன் தம்பதிகளின் செல்வப் புதல்வி*

### செல்வி பரணிகா

தனது முதலாவது பிறந்த தினத்தை 23.12.2004 இன்று
தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை
அப்பா, அம்மா, தாத்தா, அப்பம்மா, அம்மம்மா, மாமா
மல்லாகத்தைச் சேர்ந்த பெரிய தாத்தா, அம்மம்மா, பெரியப்பா,
பெரியம்மா, அவுஸ்திரேலியாவில் வசிக்கும் பெரியப்பா,
பெரியம்மா, அக்கா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்
செ.உதயசூரியன் (அப்பா)

அனுரர் வீடியோ
காங்கேசன்துறைச் சாலை,
சுன்னாகம்.

(சி-39973)

### விலை அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பில்

# ம.எண்ணெய்யை அளவுக்கதிகமாக வாங்கிச் சேமிப்பதால் தட்டுப்பாடு

அரியாலை,டிசெ.23

மண்எண்ணெய்யின் விலையை அரசு அதிகரிக்கப் போவதாக செய்திகள் வெளியாகியதை அடுத்து, பொதுமக்கள் தேவைக்கு அதிகமாக அதனை கொள்வனவு செய்து சேமித்து வருகின்றனர். இதனால் மண்எண்ணெய்க்கு செயற்கைத் தட்டுப்பாடு உருவாகி வருவதாகக் கூறப்படுகிறது.

எரிபொருள் விற்பனை நிலையங்களில் மக்கள் கூடிநின்று மண்எண்ணெய்யை அளவுக்கதிகமாகப் பெற்று வரும் அதேவேளை, மறுபுறத்தில் வியாபாரிகள் பரல்களில் மண்எண்ணெய்யைச் சேமித்துக் கொண்டு சென்று களஞ்சியப்படுவதிலும் மும்மரமாக ஈடுபட்டு வருவதைக் காணமுடிகிறது.

இவ்வாறு அளவுக்கு அதிகமாக மண்எண்ணெய்யை சேமித்துவைப்பது அதற்கான செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி கள்ளச் சந்தையில் அவற்றிற்கான விலையை அதிகரித்து விற்கும் சூழ்நிலையை ஏற்படுத்தும் என்று எரிபொருள் விநியோக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

மண்எண்ணெய்யின் விலை உடனடியாக அதிகரிக்கப்பட வாய்ப்பு இல்லை என்றும் -

குடாநாட்டுப் பாவனைக்கு போதியளவு மண்எண்ணெய் கையிருப்பில் இருப்பதாகவும் -

பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ17)

## அபிவிருத்திக்காக 3 கிராமங்கள் தெரிவு

வலி.தெற்கு,டிசெ.23

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைககு உட்பட்ட 3 பின்தங்கிய கிராமங்கள் கல்வி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இப்பிரதேச சபைக்குட்பட்ட பிரான்பற்று, உயரப்புலம் (இளவாலை), மாதகல் (சகாயபுரம்) ஆகிய கிராமங்களே தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தெரிவுசெய்யப்பட்டுள்ள இக்கிராமங்களின் கல்வி, அபிவிருத்திப்பணிகள் கிராமிய பொருளாதாரக் கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளன.

(ஐ-152-202)

## சமாதான காலத்தில் மீன்பிடித்துறை வளர்ச்சி

யாழ்ப்பாணம்,டிசெ23

விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் மீன்பிடித்துறையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக யாழ்.செயலக புள்ளிவிவர அறிக்கை தெரிவிக்கின்றது.

யுத்தத்தினால் பெரும் பாதிப்புக்குள்ளான துறையான மீன்பிடித்துறை இவ் ஒப்பந்தத்தின் பின்னரே மீண்டும் வளர்ச்சி அடைகின்றது.

யாழ்.குடாநாட்டில் 15ஆயிரத்து 822 மீன்பிடிக் குடும்பங்களைச் சேர்ந்த 68ஆயிரத்து 469 பேர் தற்போது உள்ளனர்.

1983இல் மொத்த மீன்பிடி உற்பத்தியானது 48 ஆயிரத்து 677 மெற்றிக்தொன் ஆகும். பின்னர் இடம்பெற்ற இனக் கலவரத்தினைத் தொடர்ந்து மீன்பிடி உற்பத்தி மிக மோசமான பின்னடைவை சந்தித்தது.

1991இல் ஆயிரத்து 191 மெற்றிக்தொன் மீன்பிடி உற்பத்தியாகவும் -

2001இல் 2ஆயிரத்து 676 மெற்றிக்தொன் உற்பத்தியாகவும் -

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் அதிகரித்த வேகத்தில் 22ஆயிரத்து 109 மெற்றிக்தொன் உற்பத்தியாகவும் மீன்பிடித்துறை வளர்ச்சியடைந்துள்ளது என மீன்பிடி திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி யாழ்.செயலக புள்ளிவிவரம் தெரிவிக்கின்றது.

தற்போது 14ஆயிரம் மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை -

கடந்த வருடம் 5ஆயிரத்து 511மெற்றிக்தொன், உடன் கடலுணவுகள் வெளி மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-185)



அண்மையில் இடம்பெற்ற கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் 84 ஆவது ஆண்டுவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வத்திற்குச் சங்க உறுப்பினர் தங்கராஜா மாலை அணிவிப்பதையும், அருகில் கல்வியங்காடு கிராம உத்தியோகத்தர் எஸ்.முத்துக்குமாரசுவாமி, சங்கத்தலைவர் எஸ்.சிவசுந்தரமூர்த்தி ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (ஐ-180)

# கஷ்டப் பிரதேச பாடசாலை விவகாரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.23

தீவக வலயத்தில் உள்ள ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ் கல்லூரியை கஷ்டப் பிரதேச பாடசாலையாகக் கருதி அதற்குரிய கொடுப்பனவை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள், கல்வி அமைச்சின் செயலாளர், வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ஆகியோருக்கு எதிராக இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரிக்கு அண்மையிலுள்ள சென். மேரிஸ் வித்தியாலயம், அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம், மண்கும்பான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, நாரந்தனை கணேசா வித்தியாலயம், தம்பாட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவை கஷ்டப் பிரதேச பாடசாலைகளாகக் கருதி அதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

எனவே, எமது பாடசாலையையும் கஷ்டப் பிரதேச பாடசாலையாகக் கருதி அக்கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோருகிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-5)

## நீர்வேலியில் வெள்ளவாய்க்கால் சிரமதானம் மூலம் திருத்தப்படுகிறது

அரியாலை,டிசெ.23

நீர்வேலி தெற்கு வெள்ளவாய்க்கால் வீதியை அப்பகுதி மக்கள் சிரமதானம் மூலம் புனரமைப்புச் செய்து வருகின்றனர்.

விவசாய சம்மேளனத்தின் உதவியுடன் இந்த வீதி வெள்ளம் வடிந்தோட வசதியாகப் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இந்த சிரமதானப்பணியில் ஈடுபட்டுவரும் மக்களுக்கு உலர் உணவுப் பொருளகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த வீதி சீர்செய்யப்படாததினால் வெள்ளம் வழிந்தோட முடியாது தேங்கி நிற்பதால் மக்கள் போக்குவரத்துச் செய்வதற்கு பெரும் சிரமப்பட்டு வந்தனர். (ஐ-17)

## வலி.மே. கிராம அலுவலர்களுக்கு ஜனவரியில் உள்ளக இடமாற்றம்

வலி.மேற்கு,டிசெ.23

வலி. மேற்குப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சகல கிராம அலுவலர்களும் அடுத்த ஆண்டு உள்ளக இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இதற்கான நடவடிக்கைகளை வலி.மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் மேற்கொண டுள்ளார்.

மேற்படி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலர்கள் பத்து வருடங்களுக்கு மேலாக சொந்த இடங்களில் சேவையாற்றி வருவது தெரிந்ததே.

இதனையடுத்து, பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸ் சகல கிராம அலுவலர்களிடமும் விருப்பத்துக்குரிய மூன்று பிரிவுகளை முன்னுரிமைப்படுத்தி கடிதம் ஒன்றைத் தருமாறு தனித்தனியாகக் கோரியுள்ளதாகத் தெரிய வருகின்றது. (எ-175)

## சுன்னாகம் வங்கிக்கிளை புதிய கட்டடத்துக்கு மாற்றம்

வலி.தெற்கு, டிசெ.23

சுன்னாகத்தில் நவீன மற்றும் இடவசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் ஒன்றில் இலங்கை வங்கியின் சுன்னாகம் கிளை நேற்றுமுன்தினம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய இலங்கை வங்கி கட்டடத்தின் முன்பாகப் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டடத்திற்கே வங்கி இடமாற்றம் செய்யப்பட்டது.

புதிய வங்கிக் கட்டடத்தின் பெயர்ப்பலகையை இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் திரைநீக்கம் செய்துவைத்து காரியாலயத்தை நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

சுன்னாகம் பிரதேசத்துக்கு முதன் முதலாக அறிமுகம் செய்யப்பட்ட இலங்கை வங்கி கடந்த 35 வருடங்களாக மக்களுக்குச் சேவையாற்றி வருகிறது. நவீன மாற்றங்களுக்கேற்ப இன்னும் மூன்று மாத காலத்துக்குள் இதன் சேவைகள் யாவும் கணனி மயப்படுத்தப்பட்டு விடும். தொலைபேசி பரிவர்த்தனைகளை ஏற்படுத்துவதில் சில காலதாமதம் ஏற்பட நேர்கின்றது. ஓய்வூதிய சேவை, அடகுச்சேவை என பவற்றில் மக்களுக்கு உன்னத பணியாற்றி வரும் எமது வங்கி எதிர்காலத்தில் மேலும் சிறப்பாகப் பணிபுரியும் - என க. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

சுன்னாகம் கிளை முகாமையாளர் எஸ். கிருஷ்னானந்தன்,வங்கி ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் இத்திறப்பு விழாவில் கலந்துகொண்டனர். (ஐ-152)




### திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம்,டிசெ.23

தொல்புரம் கொட்டியம்பதி ஸ்ரீஆதிமுத்து மாரி அம்மன் தேவஸ்தானத்தின் திருவாசக முற்றோதல் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிதொடக்கம் சைவப்புலவர் அ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-202)

### மெமோறியல் பாடசாலைக்கு விரைவில் புதிய அதிபர்

யாழ்ப்பாணம்.டிசெ.23

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலைக்கு விரைவில் புதிய அதிபர் நியமனம் செய்யப்படவுள்ளார்.

புதிய அதிபரைத் தேர்வுசெய்வதற்கான நேர்முகப்பரீட்சை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

புதிய அதிபர் பதவிக்கான நியமனம் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் விரைவில வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(202-185)

## திறந்த பல்கலைக்கழகத்தின் இணைப்பாளராகத் துணைவேந்தர்

யாழ்ப்பாணம்,டிசெ.23

யாழ். திறந்த பல்கலைக்கழகத்தின் இணைப்பாளராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் நியமனம் பெற்றுள்ளார்.

நாவல திறந்த பல்கலைக்கழகத் தலைமையகத் துணைவேந்தர் பேராசிரியர் உமா. குமாரசாமி மேற்படி நியமனத்தை வழங்கியுள்ளார்.

நீண்டகாலமாகப் பொறுப்பேற்கப்படாது இருந்த மேற்படி இணைப்பாளர் பதவியை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் கடந்த மாதம் முதல் பொறுப்பேற்றுள்ளார்.

மேற்படி நியமனம் பற்றி யாழ். பிராந்திய இயக்குநர் எந்திரி ச.ஆ.ஞானேந்திரனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-185)

## தோட்ட மண்வெட்டிக்கு வலி.மேற்கில் தட்டுப்பாடு

வலி.மேற்கு,டிசெ.23

வலி.மேற்குப் பிரதேசத்தில் தோட்ட மண்வெட்டிக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

கடந்த பல மாதங்களாகத் தோட்ட மண்வெட்டிகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. தொல்புரம் கமநல சேவை நிலையத்தில் கடந்த ஒரு வருடமாகத் தோட்ட மண்வெட்டிகள் விநியோகிக்கப்படவில்லை என்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாகத் தோட்ட மண்வெட்டிகளை கமநல சேவை நிலையத்தின் மூலம் விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ஐ-175)

# விலாசமிழந்து தவித்த சந்திரிகாவை ஜனாதிபதியாக்கியவர் எனது கணவர்!

## சீறுகின்றார் எஸ்.பி.திஸநாயக்கவின் மனைவி

கொழும்பு,டிசெ.23

விலாசமிழந்து தனித்து விடப்பட்டிருந்த சந்திரிகா குமாரதுங்கவுக்கு விலாசம் கொடுத்து அவரை ஜனாதிபதியாக்குவதில் முக்கிய பங்காளியாகச் செயற்பட்டவர் எனது கணவர். ஆனால், சிறிதும் நன்றி உணர்வும் இன்றி அவரையே சிறையில் அடைத்துவிட்டார் ஜனாதிபதி. அவருக்கு ஆண்ட வன் தண்டனை அளிப்பார் இது உறுதி.

இவ்வாறு கண்ணீமல்கக் கூறினார் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் எஸ்.பி.திஸநாயக்கவின் மனைவியான தமரா திஸநாயக்க.

நேற்றுமுன்தினம் மாலை கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் எஸ்.பி.திஸநாயக்கவின் விடுதலைகோரி நடத்தப்பட்ட கூட்டத்தில் நன்றி தெரிவிக்கும்போதே அவர் இப்படிக் கூறினார்.

எனது கணவர் நேர்மையானவர். எதையும் ஒளிவுமறைவின்றிப் பேசுபவர், சந்திரிகா பண்டாரநாயக்க எல்லோராலும் கைவிடப்பட்டு ஓரங்கட்டப்பட்டிருந்த நிலையில் அவருக்குப் பக்கபலமாக இருந்தவர் எனது கணவர்.

சந்திரிகா குமாரதுங்கவை மேல்மாகாண முதலமைச்சராக்கி, பின் பிரதமராக்கி தொடர்ந்து ஜனாதிபதி ஆக்கியவர் எனது கணவர்.

ஜனாதிபதி தனது நெஞ்சைத் தொட்டுப் பார்த்தால் இந்த உண்மையை ஒப்புக்கொள்வார். ஆனால், அவரிடம் மனச்சாட்சி என்பதே இல்லை.

எனது கணவர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசை விட்டு விலகியதற்குக் காரணம் ஜனாதிபதியின் தன்னிச்சையான சர்வாதிகாரப் போக்குத்தான். அதற்காகத் தக்கதருணம் பார்த்து ஜனாதிபதி பழிவாங்கிவிட்டார்.

என்றாலும் எனது கணவரின் விடுதலைக்காக நான் எதிர்பார்த்ததைவிட பெருமளவான ஆதரவு கிடைத்துள்ளது. அதற்காக உங்களிடம் நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். மக்களின் பிரார்த்தனை வீண்போகாது. வெற்றி நிச்சயம்.

- என்று கூறினார் திருமதி தமரா திஸநாயக்க. (ஐ-க)

## வலிகாமம் தெற்கில் அழிவுகள் பற்றிய விவரம் சேகரிப்பு

வலிகாமம் தெற்கு, டிசெ.23

வீடுகளுக்கும், பயிர்களுக்கும் ஏற்பட்ட அழிவுகள் பற்றிய விவரங்கள் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகப் பகுதியில் திரட்டப்பட்டு வருகின்றன.

அண்மையில் பெய்த மழைகாரணமாக இப்பகுதியில் ஏற்பட்டுள்ள பயிர் அழிவுகள், வீடு அழிவுகள் போன்ற விவரங்கள் கிராம சேவையாளர்கள் ஊடாகத் திரட்டப்பட்டு வருகின்றன.

இதுவரை 41 வீடுகள் மழையினால் அழிந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. முழுமையான விவரங்கள் மேலும் திரட்டப்பட்டுவருகின்றன. (ப-152)

## மேஜர் முரளி நினைவுதின நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.23

மாவீரர் மேஜர் முரளியின் நினைவு நாள் இன்று வியாழக்கிழமை காலை 10மணிக்கு உரும்பிராயில் அமைந்துள்ள முரளியின் ஞாபகார்த்த நினைவுத் தூபியடியில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு அஞ்சலியுரை நிகழ்த்தவுள்ளனர். (ப-13-204)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவரின் கால் முறிந்தது

யாழ்ப்பாணம்,டிசெ.23

நவக்கிரிச் சந்திப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுக்காலை 7மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நவக்கிரியைச் சேர்ந்த காளிராஜா சிவஞானமூர்த்தி (வயது-43) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் கால்முறிந்த நிலையில் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ப-12)

## மிருகங்களுக்கு இம்சை: 4 சாரதிகள் கைது!

தென்மராட்சி,டிசெ.23

மிருகங்களை இம்சைப்படுத்தும் வகையில் ஏற்றிவந்த நான்கு பார ஊர்திகளைக் கொடிகாமம் பொலீஸார் கைப்பற்றினர்.

வன்னிப் பகுதியிலிருந்து வந்த இந்த நான்கு பார ஊர்திகளின் சாரதிகளையும் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்செய்தபோது நான்கு பேரையும் தலா 5ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் வழக்குகளை இன்றுவரை ஒத்திவைத்தார். (ப-117)


THE ROYAL COLLEGE OF JAFFNA
1000/= கட்டணத்துடன் மூன்று மாதங்களில் சரளமாகக் கதைக்கமுடியும். BY: விக்னேஸ்வரன் ஆச்சாரி.
426 (302) K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
காலை வகுப்புகள் ஆரம்பம். (39966)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 1935 - 07 - 23



மறைவு 2004 - 11 - 23

அமரர்

### அருணாசலம் மகேஸ்வரி

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து அமரராகிவிட்டவர் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

இன்று (23.12.2004) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறுகின்ற சபிண்டிகரணம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை ஆகியவற்றில் கலந்துகொள்வதோடு, மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(39971)(39-14-15-26)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி துரையப்பா வள்ளிப்பிள்ளை

ஒட்டுவெளி, மிருசுவிலைச் சேர்ந்த திருமதி துரையப்பா வள்ளிப்பிள்ளை அவர்கள் நேற்று (22.12.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரதான வீதி, மீசாலையில் அமைந்துள்ள (பழைய புகையிரத நிலையம் அருகில்) அவரது இல்லத்தில் இன்று (23.12.2004) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லாரை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிரதான வீதி,*
*மீசாலை.*
(39975)(39-14-15-26)

தகவல்: து.மயில்வாகனம் *(மகன்).*

### சதாசிவம் சண்முகம்

காரைநகர், களபூமி கரப்பிட்டியந்தனையைப் பிறப்பிடமாகவும் விலானையை வதிவிடமாகவும் கொண்ட சதாசிவம் சண்முகம் அவர்கள் நேற்று (22.12.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சதாசிவம் - வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகனும் கந்தையா - பொன்னம்மா ஆகியோரின் மருமகனும் சுந்தரம்மாவின் அன்புக் கணவரும் ரங்கநாதன், மகேந்திரன், காலஞ்சென்ற இராசேந்திரன் மற்றும் சந்திராதேவி, இராஜேஸ்வரி, மகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தம்பிப்பிள்ளை தங்கவேலு (லண்டன்), தவமணிதேவி, உமாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் பேரம்பலம் சின்னம்மா, செல்லம்மா, பாலா ஆகியோரின் அன்புச் சகோதரனும் பொன்னம்பலம் (இளைப்பாறிய லிகிதர்) அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2004) வியாழக்கிழமை காலை 10.00 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் களபூமி தில்லை மாயனத்திற்குத் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விலானை,*
*காரைநகர்.*
(39970)(46-14-15-26)

தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### திருமதி கனகாம்பிகை செல்வராஜா



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் ஊறணியை வசிப்பிடமாகவும் பத்திமா கோயிலடி,. பண்டத்தரிப்பைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை செல்வராஜா 21.12.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமார் - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற முடியப்பு செல்வராஜாவின் (தையிட்டி வடக்கு முன்னாள் விவாக, இறப்பு பிறப்பு பதிவாளரும் ஊறணி புனித அந்தோனியார் கிராம முன்னேற்றச் சங்கச் செயலாளரும்) அன்பு மனைவியும் பாமினி (ஜேர்மனி), ஜெகநாதன் (பிரான்ஸ்), நளினி, மைதிலி, எமில்யூலியஸ் (பிரான்ஸ்), ஜெயபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் முத்துலிங்கம் (ஜேர்மன்), சசி (பிரான்ஸ்) லோகராஜன், ராஜன், சாந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் தர்சினி, விஜிதா, ஜீவிதா, ஸ்ரனி, றொபி, சாருஜன், மொறிஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அருளப்பு, அன்ரன், இன்பராணி ஆகியோரின் மைத்துனியும் ரஞ்சிதம், மலர் பாலதாஸ் ஆகியோரின் சகோதரியும் அஜந்தா (ஜேர்மனி), சுஜந்தா, அனோஜா, வினோஜா, அஜந்தன், அசம்ரா, அருண், நிசாந்தன் ஆகியோரின் பெரியதாயாரும் ரூபினா, அமலதாஸ், சிகானா ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (23.12.2004) வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு பண்டத்தரிப்பு புனித பத்திமா அன்னை ஆலயத்தில் நடைபெறவுள்ள இரங்கல் திருப்பலியின் பின்னர் பண்டத்தரிப்பு சேமக்காலையில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*பத்திமா கோவிலடி,*
*பண்டத்தரிப்பு* (39972)(46-14-15-26)

தகவல்: அ.லோகராஜன் (மருமகன்)

## தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம்

### பதவி வெற்றிடம்

01) பாரவூர்தி சாரதி

1. சம்பள அளவுத் திட்டம்: 5000 - 6450 / 70/10 - 75/10) (சு.வே.ஆ.சு.நிருபம் 31/99 இன்படி
(குறியீட்டு இல. 312/14 - 165/88இன்படி)
2. வயது: 21 தொடக்கம் 45 வரை
3. விண்ணப்ப முடிவு திகதி: 07-01-2005
4. பிணைப்பணம்: ரொக்கம் 10000/-
ஆதனம் 25000/-
5. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

06. தகைமைகள்: அ. ஐந்தாம் வகுப்புக் கல்வித் தராதரமும் பாரவூர்தி செலுத்துவதற்கான வாகன அனுமதிப் பத்திரமும் அத்துடன், இரண்டு வருட அனுபவமும் இருத்தல் வேண்டும்.

02. பாரவூர்தி சுத்திகரிப்பாளர்:

1. சம்பள அளவுத் திட்டம் - 4500 - 5750 / 60/10 - 65/10 (சு.வே.ஆ.சு.நிருபம் 31/99 இன்படி
(குறியீட்டு இல. 314/16 - 165/88இன்படி)
2. வயது: 18 தொடக்கம் 30 வரை
3. விண்ணப்ப முடிவு திகதி: 07-01-2005
4. பிணைப்பணம்: ரொக்கம் 5000
5. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
6. தகைமைகள்:

அ. கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 15ஆவது சம்பளத் திட்டத்தில் ஒருவருட அனுபவம்.

*அல்லது*

ஆ. ஐந்தாம் வகுப்பு கல்வித் தராதரமும், நல்ல தேக ஆரோக்கியமும் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் *பொது முகாமையாளர், தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் (வ.து.)*பருத்தித்துறை *வீதி, கொடிகாமம்* என்ற முகவரிக்குக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சங்கத்தில் ரூபா 10/- செலுத்தி பெற்றுக்கொண்ட விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்கவேண்டும்.

தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,
பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.
22-12-2004

- பொது முகாமையாளர்,
தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம். கொடிகாமம்.
(சி-39988)(26-14-15)


பாதிக்கப்பட்ட பெண்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான நாடக ஆற்றுகை
எமது ஆத்மாக்களின் உள்ளக் கிடக்கைகளையும் உண்மை நிலைப்பாடுகளையும் சித்திரிக்கும்
தே.தேவானந்தின்



த.றொபேட்டின் இசையில் உயிர்ப்பூட்டப்பட்ட நா. சிவசிதம்பரத்தின்
கவிவரிகளுடன் ஆற்றுகையாளர்களின் ஆளுமைகளுடன் அரங்கிற்கு வருகின்றது.
காலம் : 26.12.2004 (ஞாயிறு) மாலை 03.30
இடம் : கைலாசபதி கலையரங்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
Active Theater Movement
அன்பளிப்பு : ரூ. 100/= , ரூ. 50/=, ரூ. 20/=
TRRO LTD
(சி-39991)(26-14-15)

Software Computer Center
தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

லொயலாஸ்
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# வவுனியா சிதம்பரபுரம் அகதிகள் நிவாரணம் கோரி ஆர்ப்பாட்டம்

வவுனியா,டிசெ.23

வவுனியா சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் வாழ்ந்துவரும் மக்களுக்கு மூன்று மாதங்களாக நிவாரணம் வழங்கப்படாததால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த மக்களின் நிலை தொடர்பாக ஆராயச்சென்ற அரச அதிகாரிகளை நீண்ட நேரமாகத் தடுத்து வைத்திருந்தனர்.

கடந்த 3 மாத காலமாகத் தமக்குரிய உலர் உணவு நிவாரணம் வழங்கப்படாமையினால், தாம் பெரும் இன்னலுக்குட்படுவதாகத் தெரிவித்தனர். உடனடியாக நிவாரணம் வழங்கப்பட வேண்டும். அவ்வாறில்லையெனில், தமது சொந்த இடங்களில் தம்மை மீளக்குடியமர்த்த வேண்டும் எனத் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக ஆராய்வதற்குச் சென்ற வவுனியா அரச செயலகத்தின் திட்டமிடும் கிளையின் பணிப்பாளர் திருமதி கேதீஸ்வரன் மற்றும் அந்தக் கிளையின் கணக்காளர் ஆகியோரை நீண்ட நேரமாகத் தடுத்து வைத்திருந்தனர்.

போராட்டத்தின்போது வீதிகளில் ரயர்களைப் போட்டு எரித்து வீதித்தடைகளையும் ஏற்படுத்தினர்.

அதிகாரிகள் வந்த வாகனத்தைச் செல்ல விடாது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் பொலீஸார் எவ்வளவு முயற்சி செய்தும், மக்களின் போராட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டது.

நீண்ட நேரத்திற்குப் பின்னர், அதிகாரிகளை வாகனத்தில் செல்ல அனுமதித்தனர்.

(ஐ-204)

## பொது மண்டபத்துக்கு ஒளி வசதி

பூநகரி,டிசெ.23.

பூநகரி பல்லவராயன்கட்டு பொதுநோக்கு மண்டபத்துக்கு சூரிய மின்கலம் மூலம் ஒளியமைப்புச் செய்யப்படவுள்ளது.

இதனால் இப்பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளை இங்கு மேற்கொள்வதன் மூலம், கல்வியில் பின்தங்கியுள்ள இக்கிராம மக்களை மேம்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நடவடிக்கைக்கு சகல பெற்றோர்களும் ஒத்துழைக்க வேண்டுமென இப்பகுதி நலன் விரும்பிகள் எதிர்பார்க்கின்றனர்.

(ஐ-323-204)

## மீள்குடியமர்வு நிதி இதுவரை வழங்கப்படவில்லை

ஒட்டுசுட்டான்,டிசெ.23

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்வு நிதிக்கு விண்ணப்பித்தோருக்கு இதுவரை அந்த நிதி வழங்கப்படாததால் விண்ணப்பித்தோர் கவலை அடைந்துள்ளனர்.

அவர்கள் மீண்டும் தமது வீடுகளைப் புனரமைக்கவும் தமது தொழில்களைத் தொடங்கவும் இப்பணத்தினை எதிர்பார்த்துக் காத்திருநத போதிலும் இவர்களுக்கான பணம் கிடைக்கப் பெறாமையினால் அம்மக்கள் ஏமாற்றத்தை அடைந்துள்ளனர்.

(8-341)

## கட்டாக்காலி கால்நடைகளால் கண்டாவளையில் பயிர் அழிவு

பரந்தன்,டிசெ.23

கண்டாவளைப் பிரதேசத்திலுள்ள புன்னை நீராவிக் கிராமத்தில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுவதால் விவசாயிகள் பெரும் நஷ்டங்களை அடைகின்றனர்.

கட்டாக்காலி கால்நடைகள் பயிர் நிலங்களை அழிப்பதுடன், தற்போது நடுகை செய்யப்பட்டுள்ள தென்னங்கன்றுகளையும் சேதப்படுத்தி விவசாயிகளுக்கு நஷ்டத்தையும் ஏற்படுத்துகின்றன.

கமக்கார அமைப்பினர் உரிய நடவடிக்கை எடுத்து கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுததுமாறு இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஐ-352-204)



வட்டக்கச்சி பிரதேச மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு இராமநாதபுரம் ம.வியில் கடந்த மாதம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் அணிவகுத்து நின்று மாவீரர் பெற்றோர்களுக்கு மலர் மாலை அணிவித்து கலைநிகழ்வுகளுடன் அவர்களை மண்டபத்துக்கு அழைத்துச் செல்வதைப் படத்தில் காணலாம்.

(படம்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)

## குமிழமுனைப் பிரதேசத்தில் 98 குடும்பங்கள் இடம்பெயர்வு

வேரவில்,டிசெ.23

கடந்த வாரத்தில் பெய்த கனமழை காரணமாக குமிழமுனைப் பிரதேசத்தில் வசிக்கும் 98 குடும்பங்கள் இடம்பெயர்ந்து, பாடசாலைகளிலும்,பொது மண்டபங்களிலும் தங்கி உள்ளன.

இவ்வாறு தங்கியுள்ள குடும்பங்களுக்கு கரிகாலை நாகபடுவான் அபிவிருத்தி நிறுவனத்தினால் சமைத்த உணவுகள் கடந்த சில நாள்களாக வழங்கப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்து வசிக்கும் மக்களை, பூநகரிப் பிரதேச செயலர், அப்பகுதி கிராம அலுவலர்கள், அரசியல்துறைப் பொறுப்பாளர்கள், பங்குத்தந்தையர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.அத்துடன், திலீபன் மருத்துவமனையின் நடமாடும் பிரிவினர் நேரில்சென்று மருத்துவ சேவைகளை வழங்கினர்.

(ஐ-404-204)

## கற்சிலைமடு பெரியகுளம் புனரமைப்பு: புறக்கணிப்பால் விவசாயிகள் கவலை

ஒட்டுசுட்டான்,டிசெ.23

கற்சிலைமடு பெரியகுளம் 'நியாப்' திட்டத்தின் கீழ் திருத்த வேலைக்குத் தெரிவுசெய்யப்பட்ட போதும் தவறான செய்தியினால், இந்தக் குளத்தின் புனரமைப்பு வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இக்குளம் கடந்த 20 வருடங்களாகப் புனரமைக்கப்படாது உள்ளது. 200இற்கும் மேற்பட்ட விவசாய நிலங்களுக்கு நீர்பாயும் இக்குளத்தின் புனரமைப்பு வேலைகள் நிராகரிக்கபட்டமை குறித்து விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் குறித்து அரச அதிபர், உதவி அரச அதிபர் ஆகியோருக்கு மகஜர்கள் அனுப்பி வைத்துள்ளனர்.

இக்குளம், 12 அடி நீர் கொள்ளக் கூடியது. தற்போது தூர்ந்துள்ள நிலையில் 9 அடி நீர் மட்டமே கொள்ளக்கூடியதாகவுள்ளது.

மழையினால் இக்குளக்கட்டில் பாரிய உடைப்பு ஒன்று ஏற்பட்ட போதிலும் விவசாயிகள் அதனை மண்மூடைகள் போட்டு தற்காலிகமாகத் தடுத்துள்ளனர்.

இக்குளத்தினைப் புனரமைப்புச் செய்யாவிடில், குளத்து நீரை நம்பி இருக்கும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனால், 'நியாப்'திட்டத்தின் கீழ் இக்குளத்தினைப் புனரமைத்து விவசாயத்துக்கு உதவ வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஐ-341-204)

## தச்சடம்பன் குளக்கட்டு உடைப்பு; விவசாயப் பயிர் அழியும் அபாயம்

ஒட்டுசுட்டான்,டிசெ.23

ஒலுமடு கமநலச் சேவை நிலையத்திற்கு உட்பட்ட தச்சடம்பன்குளத்தில் பாரிய உடைப்பு இருப்பதால் நீரினைத் தேக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், அதன் கீழ் செய்கை பணணப்பட்ட விவசாயச் செய்கையினைப் பாதுகாக்க முடியாதுள்ளது என ஒலுமடு கமநலச் சேவை அதிகாரி தெரிவித்தார்.

இக்குளத்தின் துருசுப் பகுதியில் பாரிய உடைப்புக் காணப்பட்டு விவசாயிகளால் இருவைகள் மண்மூடைகளால் தடுக்கப்பட்டது. மீண்டும் மீண்டும் அரிப்பினை ஏற்படுத்தி வருவதால் 12 அடி நீர்கொள்ளளவான குளத்தில் தற்போது 9 அடி நீர்மட்டுமே தேக்கப்பட்டுள்ளது. இப்பாரிய உடைப்பினைத் தடுக்கப்படாதவிடத்து தொடர்நதும் மழை பெய்யக் கூடுமானால குளத்தினைக கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாத நிலை ஏற்படும். இதன் கீழ் செய்கை பண்ணப்பட்ட 238 ஏக்கர் விவசாயச் செய்கையும் பாதிப்படைய நேரிடும் எனத தெரிவித்தார்.

1997 ஆம் ஆண்டு சிறீலங்கா இராணுவம் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது கமநலச் சேவை நிலையத்தினை பாரிய தளமாக வைத்து குளக்கட்டுகளின் மண்களை அகழ்ந்து பதுங்கு குழிகளை அமைத்திருத்தமையாலேயே குளக்கட்டுப் பாதித்துள்ளது. இக்குளம நீண்டகாலமாகப் புனரமைக்கப் படவிலலை எனவும் தெரிவித்தார். (204-341)

## நாய்க்குட்டியினால் கடியுண்ட கர்ப்பிணித்தாய் உயிரிழந்தார்

விசுவமடு,டிசெ.23

வளர்ப்பு நாய்க்குட்டியினால் கடியுண்ட கர்பபிணித் தாய் ஒருவர் உரிய கவனம் எடுத்து சிகிச்சை பெறாத காரணத்தினால் உயிரிழந்தார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு விசுவமடு 'றெட்பானா' பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

உடல் உபாதைக்குள்ளாகிய மேற்படி பெண், புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

அங்கு அவர் பிரசவித்த குழந்தையைக் காப்பாற்ற முடிந்தது. ஆனால், தாயார் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நாய்க்குட்டி, அப்பிரதேசத்திலுள்ள ஏனையவர்களையும் கடித்துள்ளது. நாய்க்கடிக்கு இலக்காகியவர்கள் தற்போது தடுப்பு மருந்துகள் ஏற்றியுள்ளனர். (ஐ-402-204)

## மருத்துவ தாதியர் இன்றி கர்ப்பிணித் தாய்மார் சிரமம்

ஒட்டுசுட்டான்,டிசெ.23

ஒட்டுசுட்டான் விளாத்திக்குளம் பகுதியில் மருத்துவத் தாதியின் செயற்பாடுகள் இன்மையால் கர்ப்பிணித் தாய்மார் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பிரசவ வேதனையால் துடித்த கர்ப்பிணித் தாய் ஒருவரை பெருமழையின் மத்தியில் பாதைகள் சீரின்மையால் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லமுடியாமற்போனது. இந்நிலையில், அயலவர்கள் மற்றும் தியாகதீபம் திலீபன் மருத்துவமனை வைத்தியர் ஆகியோரின் உதவியுடன் அப்பகுதியிலேயே குழந்தையைப் பிரசவித்தார். பின்தங்கிய இப்பிரதேசத்தில், மருத்துவத் தாதியரின் சேவை இல்லாததால், கர்ப்பிணித் தாய்மார் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆபத்துக்களைச் சந்திக்கின்றனர். இதனால், வைத்தியத தாதியர் ஒருவரை நியமித்து உதவ வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஐ-341-204)

## வன்னி மாணவிகள் இருவர் மக்கள் வங்கியால் கௌரவிப்பு

ஸ்கந்தபுரம்,டிசெ.23

மக்கள் வங்கியின் 'குசலதா பிரணாம' திட்டத்தின் கீழ் 2003 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற வன்னியைச் சேர்ந்த இரு மாணவி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வு அண்மையில் டி.ஆர்.விஜேயவர்த்தனா மாவத்தையில் உள்ள மக்கள் வங்கியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் புனித திரேசா பெண்கள் கல்லூரி மாணவி ம.வைஷ்ணவி, முல்லைத்தீவு, மாவட்டத்தைச் சேர்ந்த கே.சாமந்தி ஆகியோரே இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இப்பரீட்சையில் தேசிய, மாவட்ட ரீதியாகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 9 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்களே கௌரவிக்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் தலைவர் பீ.அமரசிங்க மற்றும் பொதுமுகாமையாளர் அசோக த சில்வா, றுகுணு பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ரஞ்சித சேனாரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-381-204)

## கொக்காவில் வீதியூடான பஸ்சேவை நிறுத்தப்பட்டது

மல்லாவி,டிசெ.23

மல்லாவியில் இருந்து கொக்காவில் வீதியூடாக இடம்பெறும் கிளிநொச்சி பஸ்சேவை நிறுத்தப்பட்டுள்ளதால் தேறாங்கண்டல், ஐயன் கண்குளம், பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அவசர நோயாளர்களைக் கொண்டு செல்வதற்கும், தமது விளைபொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கும் கூட நீண்ட தூரம் சைக்கிள்களிலேயே செல்லவேண்டிய நிலையிலுள்ளனர்.

கண்டி வீதியூடான போக்குவரத்துத் தடைபட்டிருந்த வேளையில் வன்னி மேற்கையும் கிழக்கையும் இணைக்கும் பிரதான போக்குவரத்துப் பாதையாக இருந்த, இந்த வீதியூடான போக்குவரத்து, A9 பாதை திறக்கப்பட்டபின் நிறுத்தப்பட்டிருந்தது. பின் மக்களின் வேண்டுகோளிற்கிணங்க 3 மாதங்களுக்கு முன் இப்பாதையூடாக ஒரு பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இந்த பஸ்சேவையும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது குறித்து இப்பகுதி மக்கள் விசனமடைந்துள்ளனர். (ஐ-322)




கிளிநொச்சி பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தின் 15ஆவது ஆண்டு நிறைவு விழாவும் புதிய கட்டடத் திறப்பு விழாவும் கடந்த மாதம் நடைபெற்றன. இந்நிகழ்வில் அதிதிகளாகக் கலந்துகொண்டவர்களைப் படத்தில் காணலாம்.

(படம்: விசுவமடு செய்தியாளர்)

# கல்வி நிர்வாகப் பணியிலுள்ளோர் விடைத்தாள் மதிப்பீடு செய்யமுடியாது

அச்சுவேலி,டிசெ.23

ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணியில் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட கல்வி நிர்வாகப் பணியை மேற்கொள்பவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக பரீட்சைத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜி.சீ.ஈ. பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணியில் ஈடுபடுபவர்கள் சம்பந்தப்பட்ட வகுப்பில் கல்வி கற்பவர் மற்றும் கற்பித்தல் தொடர்பான பணிகளை மேற்கொள்பவர்கள் செய்யவேண்டும் என்பது விதிமுறை.

இந்த விதிமுறைகளுக்கு மாறுபட்டமுறையில் கடந்தகாலங்களில் உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப்பணிப்பாளர்கள், அதிபர்கள் மற்றும் கல்வி நிர்வாகப் பணிகளில் ஈடுபடுவோர் விடைத்தாள் திருத்தும் பணிகளில் ஈடுபட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் முறையீடு செய்ததை அடுத்து, விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் கண்டிப்பான நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணிகள் வருடத்தொடக்கத்தில் பாடசாலைத்தினம் உள்ளிட்ட காலப் பகுதியில் நடைபெறுவதால் அதிபர்கள், பதில் அதிபர்கள், விடைத்தாள் மதிப்பிடும் பணியில் கலந்துகொள்வதால் பாடசாலைகளின் வருடாந்த திட்டமிடல் பணிகளில் தடங்கல் ஏற்படுவதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

இம்முறை ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணிகள் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 10 தினங்கள் கொண்டதாக இரண்டு கட்டங்களில் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ப-11)

# மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்து செல்பவரும் தலைக்கவசம் அணியவேண்டும்

அச்சுவேலி,டிசெ.23

"மோட்டார் சைக்கிள் ஓட்டிச் செல்பவரும் அவருக்குப் பின்னால் மோட்டார் சைக்கிளில் அமர்ந்து செல்பவரும் கட்டாயம் தலைக் கவசம் (ஹெல்மட்) அணிந்து செல்லவேண்டும். தலைக்கவசம் இல்லாமல் மோட்டார் சைக்கிளில் செல்வது தண்டனைக்குரிய குற்றமாகும்" என அச்சுவேலி பொலீஸ் நிலையப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு, பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

'மோட்டார் சைக்கிளின் பின்னுக்கு இருந்து செல்பவர் தலைக்கவசம் அணியாமல் இருந்தால் தலைக்கவசம் இல்லாமல் சென்றவர் என்ற முறையில் பின்னுக்கு இருந்து செல்பவருக்கு தண்டம் விதிக்கப்படுவதோடு, தலைக்கவம் இல்லாமல் பின்னுக்கு ஆள் ஏற்றிச்சென்றவர் என்ற முறையில் மோட்டார் சைக்கிள் ஓட்டிச் செல்லும் சாரதிக்கும் தண்டம் விதிக்கப்படும்.'

இக்குற்றத்தை ஏற்றுக்கொண்டு ஸ்தலத்தில் தண்டப்பணம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

(ப-11)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 640 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
| திகதி | 21-12-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. 4178953-4195022 |

வெற்றி இலக்கங்கள்

13 19 39 49

லக்கினம் கன்னி

ஜக்பொட் பரிசு ரூபா.17,23,850/- வெல்லப்பட்டுள்ளது

இந்த வெள்ளிக்கிழமை ஜக்பொட் ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,55,458 | 10/- | 35,54,580/- |
| 2.இலக்கங்கள் | 32,694 | 20/- | 6,53,880/- |
| 1.இல + லக்கினம் | 32,412 | 30/- | 9,72,360/- |
| 2.இல + லக்கினம் | 2,909 | 100/- | 2,90,900/- |
| 3.இலக்கங்கள் | 872 | 500/- | 4,36,000/- |
| 3.இல + லக்கினம் | 71 | 5,000/- | 3,55,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | 01 | 17,23,850/- | 17,23,850/- |
| மொத்தம் | 4,24,426 | - | 95,87,070/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 95,87,070/-

தொடர் இல. 5154819 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2004 டிசம்பர் 24ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

4188226-2-24
4189905-1-33
4186154-2-35
4183004-2-79
4187767-7-20


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவராசா தங்கம்மா



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவராசா தங்கம்மா அவர்கள் நேற்று (22.12.2004) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் சிவராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவகுரு - பார்வதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - செல்லாச்சி தம்பதிகளின் மருமகளும் சகுந்தலாதேவி (கனடா), சந்திராதேவி (கனடா), இந்திராதேவி (கனடா), தவநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற துரைராசா (பரமு) மற்றும் வேலாயுதபிள்ளை (கனடா), செல்வரத்தினம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*G.P.S. றோட்,*
*கல்வியங்காடு.*

தகவல்:
செ.குமாரசாமி
(மருமகன்).

(39980)(43-18-45)

### நிக்சன் மிராண்டா

யாழ்ப்பாணம், குருநகரைச் சேர்ந்த நிக்சன் மிராண்டா அவர்கள் 21.12.2004 செவ்வாய்க் கிழமை மரணமானார்.



அன்னார் செல்வின் மிராண்டா - எமலினா (கொன்சி) தம்பதிகளின் ஏகபுதல்வனும் ஒலின்ரா (பிரான்ஸ்), அனற் (ஆசிரியர், சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை), டியன்சி (பிரான்ஸ்), சாள்ஜினி (கனடா), கிரிஸ்ரீனா ஆகியோரின் அருமைச் சகோதரனும் டக்ளஸ் (பிரான்ஸ்), றெஜி (பிரானஸ்), சுரேஸ் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.12.2004) வியாழக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*15/7, 5ஆம் குறுக்குத்தெரு,*
*தண்ணீர்த் தாங்கி வீதி,*
*குருநகர், யாழ்ப்பாணம்.* (39977)(43-18-45)

தகவல்:
செல்வின் மிராண்டா
(தந்தை).


**மலிவு விலையில் முட்டைகள்**

முட்டை விலை குறைக்கப்பட்டுள்ளது

விலை 7.50/=

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: வீனஸ்பாம்

(ஏ.ஜி.ஏ. ஒப்பிஸ் அருகில்)

பலாலி வீதி, திருநெல்வேலி.

(39978)

**RENT/LEASE**

NALLUR TWIN HOUSE
APPLY:
1331/7, DAM STREET
COLOMBO -12
T.P.: 011 2332041

(C/39556)


## கிறிஸ்மஸ் திருப்பலிகள்

குருநகர்,23

கிறிஸ்மஸ் தினமான நாளைமறுதினம் சனிக்கிழமை கிறிஸ்தவ தேவலாயங்களில் வழமை போல இம்முறையும் நள்ளிரவு ஆராதனைகள் நடைபெறவுள்ளன.

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில நள்ளிரவுத் திருப்பலி நாளை இரவு 11.45 மணிக்கு ஆரம்பமாக உள்ளது. நாளைமறுதினம் காலை 5.30 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திலும் காலை 7.30 மணிக்கு குருநகர் புதுமை மாதா தேவாலயத்திலும் கிறிஸ்மஸ் திருப்பலிகள் நடைபெறும் என குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை வண.பிதா ஆர்.எச்.சகாயநாயகம் அடிகளார் அறிவித்துள்ளார்.

(ஜ-51)

## எம்.ஜி.ஆர். நினைவு தினம்


தென்மராட்சி,23

மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் 17 ஆவது நினைவுதின நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி எம்.ஜி.ஆர். முன்னேற்றக் கழகம் நினைவு நிகழ்வினை நடத்தவுள்ளது.

(8-117)

## ஓராண்டு நினைவலைகள்



விநாயகன் மடியில்
1942-11-01

விநாயகன் அடியில்
2004-01-04

### காமாட்சிசுந்தரம் குகானந்தன்

(பிரபல தவில் வித்துவான்)

திதி: 23.12.2004 (வியாழக்கிழமை)

வண்ணை - மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்தீர்
மார்கழித் திங்கள் மண்ணினுள் மறைந்தீர்
குகானந்தா! உம் தவிலோசை ஓயாது
காலமுள்ள காலம்வரை எம் இதயத்தைவிட்டு.

ஓம் சாந்தி!

முருகமூர்த்தி வாழ்மக்கள்
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(39989)(29-11-45)


## ஜி.எஸ்.லிங்கநாதன் அன்கோ

மலரும் நத்தார் புதுவருடப் பண்டிகையை முன்னிட்டு எமது ஸ்தாபனத்தால் தருவிக்கப்பட்ட புதிய தெரிவுகளை எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

மங்கையர்களுக்கான

A. சாறிகள்



| | | |
|---|---|---|
| 1.நிருபாமா | 16.சில்க்தண்டர் | 31.ஊர்மிளா |
| 2.பீலிங்ஸ் | 17.லக்மி | 32.டொலிடொலி |
| 3.இன்ரநெற் | 18.சில்கி மில்கி | 33.சக்தி மதுர |
| 4.சுருதி | 19.சுண்பறி பரி | 34.பிளக் றெக் |
| 5.மிற்றலி சில்க் | 20.பண் பெயர் | 35.பப்பிளிக் டிமாண்ட் |
| 6.பார்க் அவினியு | 21.ஒடியன்ஸ் டோல் | 36.நம்ரதா |
| 7.நக்ஸ்சற சில்க் | 22.சில்வர் லிப்ஸ் | 37.பஞ்சரட்ணா |
| 8.நாயகா | 23.எக்ஸ் கியூஸ் மி | 38.கெட் லைன் |
| 9.நைனா | 24.இன்டியன் ஆட் | 39.கும்சாத் |
| 10.மோணி | 25.யூனிவேர்சல் | 40.பத்மாவதி |
| 11. ஒடிசி | 26.சீக்றட் கிப்ற் | 41.டர்சன் கோலங்கள் |
| 12.அஸ்பிறி | 27.றம்மியா சிலாண் | 42.வீமு |
| 13.ரிப் என் ரொப் | 28.சுரபி | 43.அலிசா |
| 14.கம்பீளோர் | 29.சில்வர் மயிக் | 44.முஸ்கான் |
| 15.சிலக்டோல் | 30.சுவீற்ரி | 45.பாட்டிலேடி |

B.சுரிற்றார் மற்றிரியல்



| | |
|---|---|
| 1.யஸ்மின் | 6.கரீனா |
| 2.மீறா | 7.பிங்லேடி |
| 3.கோல்டன்ரச் | 8.சுவிற்லுக் |
| 4.லீலா | 9.பியூட்டி |
| 5வனிதா | 10.பசன் ரச் |



C. எலின்ற் கிற்
D. சோட் கிற்
F. சிம்ரன் கிற்
G. சாறி கிற்



மற்றும் ஆண்களுக்கான சேட் வகைகள்

சிறுவர், சிறுமியர்களுக்கான ஆடை வகைகளைத் தெரிவுசெய்துகொள்ள

ஜி.எஸ்.லிங்கநாதன் அன்கோ

இல.13,14 பெரிய கடை,

யாழ்ப்பாணம்.

(39983)(29-11-45)

# வன்னியில் குழந்தைகளுக்கு போஷாக்கு குறைபாடு ஐ.நா.உலக உணவு அமைப்பு அபாய அறிவிப்பு

கிளிநொச்சி,டிசெ.23

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னியில் குழந்தைகள் போசாக்குக் குறைபாட்டால் பாரிய அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன என்று ஐ.நா. ஸ்தாபனமான உலக உணவு அமைப்பு அச்சம் தெரிவித்துள்ளது.

தாம் அண்மையில் வன்னியில் மேற்கொண்ட ஆய்வில் இந்த அதிர்ச்சி தரும் தகவல் வெளியாகியுள்ளதாக இந்த அமைப்பின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

"இலங்கை முழுவதும் குழந்தைகள் போசாக்குக் குறைபாடு காணப்படுகின்றபோதும், வன்னியில் வாழும் குழந்தைகள் எதிர்நோக்கும் போசாக்குக் குறைபாட்டு வீதம் தேசிய அளவிலும் பார்க்க எட்டு வீதம் அதிகமாகும்.

"தூய குடிதண்ணீர் இல்லாமை, ஒழுங்கான போசாக்கு உணவு இல்லாமை மற்றும் சூழல், மனத்தாக்கம் போன்ற காரணிகளால் வன்னியில் வாழும் குழந்தைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இங்கு ஐந்து குழந்தைகளில் ஒரு குழந்தை வளர்ச்சி குன்றியதாக - குறை மாதத்தில் பிறந்ததாக - காணப்படுகிறது.

"ஒரு வயதுக்கும் இரண்டு வயதுக்கும் இடைப்பட்ட நான்கு குழந்தைகளில் ஒரு குழந்தை வயதுக்கேற்ற எடையில்லாமல் நிறை குறைந்த பிள்ளையாகக் காணப்படுகின்றது. பெண் குழந்தைகளிலும் ஆண் குழந்தைகளே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

"ஆய்வு மேற்கொள்ளப்பட்ட ஐந்து வயதுக்குக் குறைந்த 12,896 குழந்தைகளில் 18.2 வீதமானவை வளர்ச்சி குன்றியவையாகவும் 21.6 வீதமானவை குறைமாதத்தில் பிறந்தவையாகவும் 36.9 வீதமானவை நிறை குறைந்தவையாகவும் உள்ளன"- என்று புள்ளி விவரங்களை மேற்கோள் காட்டி உலக உணவு அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது. (8)

## பேராதனைப் பல்கலைக்கழக பொதுக் கலைமாணி பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,டிசெ23

பேராதனைப் பல்கலைக்கழக பொதுக்கலைமாணி-பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

2003 டிசெம்பரில் பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கான பெறுபேறுகளே சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பரீட்சையில் சித்தியடையாதவர்கள் மீள் பரீட்சைக்கு தோற்றுவதாயின் 5 ரூபா முத்திரை ஒட்டப்பட்ட தபாலுறையை பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி பரீட்சைகள் பிரிவு பதிவாளருக்கு அனுப்பிப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிப்போர் தமது விண்ணப்பங்களை 31.12.2004 முதல் அனுப்பிவைக்கவேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் இருந்து தோற்றியவர்களில் 65 வீதமானவர்கள் பொதுக் கலைமாணி பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-185)

### இந்தியப் படையால் கொல்லப்பட்டவருக்கு

# 16ஆண்டுகளின் பின்னர் 'நாட்டுப்பற்றாளர்' கௌரவம்

வடமராட்சி.டிசெ.23

இந்திய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளியும் தீவிர ஆதரவாளருமான பொலிகண்டி ஆலடியைச் சேர்ந்த சிவலிங்கம் விஷ்ணுமூர்த்தி 16 ஆண்டுகளின் பின்னர் கடற்புலிகளால் நாட்டுப்பற்றாளர் எனக் கௌரவிக்கப்பட்டார்.

கடந்த 1988 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்ட விஷ்ணு மூர்த்தியின் நினைவஞ்சலிக் கூட்டம் கடந்த திங்களன்று பொலிகண்டி ஆலடி மக்கள் படிப்பகத்துக்கு அருகில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொதுச் சுடரை யாழ். மாவட்டக் கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் அருணன், கடற்தொழிலாளர் சங்கங்களின் மேலாளர் மோகன், நாட்டுப்பற்றாளரின் மகன் துவாரகன் ஆகியோர் ஏற்றினர். மலர்மாலையை விஷ்ணுமூர்த்தியின் தாயார் திருமதி சிவலிங்கம், வடமராட்சி கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் அன்பழகன், வடமராட்சி அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் அன்பு ஆகியோர் அணிவித்தனர்.

நினைவுரைகளை வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கச் சமாசபொது முகாமையாளர் க.சூரியகுமாரன், கடற்றொழிலாளர் சங்கங்களின் மேலாளர் மோகன், கடற்புலிகளின் மாவீரர் பணியகப் பொறுப்பாளர் சுதர்சன் ஆகியோர் நிகழ்த்தினார்கள்

முடிவில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசையின் உரை தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

இறுதியில் நாட்டுப்பற்றாளரின் உருவப்படம் அன்னாரின் இல்லத்துக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. (ஐ-173)

# இடம்பெயர்ந்தோர் சங்கத்தினர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை யாழ் மாவட்ட இடம்பெயர்ந்தோர்களின் சங்கங்களின் சமாசத்தினர் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் மனு ஒன்றையும் கையளித்துள்ளனர்.

நேற்றுப் பகல் 11 மணிமுதல் பிற்பகல் ஒரு மணி வரை கிளிநொச்சியிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் யாழ்.மாவட்டத்தில் இடம் பெயர்ந்துள்ள மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கு அரசு இதுவரைஎந்த வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாதது குறித்தும், அரசின் மீது முற்றாக நம்பிக்கை இழந்த நிலையில் கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்து வருகின்ற அரசு மீளக்குடியமர்வதற்கு அனுமதிப்பதாக பல செய்திகளை வெளியிட்டும் அதனை நடைமுறைப்படுத்தவில்லை. இதனால், நாம் அரசின் மீது முற்றாக நம்பிக்கை இழந்து இனிவரும் காலங்களில் தொடர்ந்து மக்கள் போராட்டங்களை நடத்தப் போவதாகவும் இதற்கு நாம் தயாராகவே உள்ளோம் எனவும் இடம்பெயர்ந்தோர்களின் சங்கங்களின் சமாசத்தினர் தெரிவித்தனர்.

இச்சந்திப்பின் முடிவில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் மனு ஒன்றினையும் அவர்கள் கையளித்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் யாழ்.மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர். (8)

# உரும்பிராய் அஞ்சலகம் உடைக்கப்பட்டுத் திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ.23

உரும்பிராய் அஞ்சலகம் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

அஞ்சலகத்தின் முன்கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்த ஒரு லட்சத்து 2 ஆயிரத்து 335 ரூபா பெறுமதியான முத்திரைகளும் 935 ரூபா 34 சதம் பணமும் திருட்டுப்போயுள்ளன்.

இதற்கிடையில் - திருட்டுப்போன முத்திரைகளைத் திருடர்கள் விற்பனை செய்ய முற்படும் வேளையில் அது பற்றிய தகவலைத தந்துதவுமாறும் -

இதை விடுத்து முத்திரைகளை கொள்வனவு செய்வோர் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் பொலீஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டு தண்டனை வழங்க நடவடிக்கையெடுக்கப்படும் என்றும் -

மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் ச.சிவராஜசிங்கம் அறிவித்துள்ளார். (எ-13)

# பிறிமா ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பு

சீனக்குடா,டிசெ.23

சீனக்குடா பிறிமா நிறுவன ஊழியர்கள் நேற்று ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

ஊழியர்களின் சம்பள உயர்வு, சம்பள முரண்பாடு மற்றும் நிர்வாகத்தில் இடம்பெறும் ஊழல்கள் போன்றவை தீர்க்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்த அடையாள வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது என்று தொழிற்சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இந்த வேலை நிறுத்தத்தையொட்டிப் பிறிமா தொழிற்சாலையைச் சுற்றிப் பலத்த பொலீஸார், இராணுவப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த அடையாள வேலைநிறுத்தத்திற்குச் சாதகமான பதில் ஏதும் கிடைக்காத பட்சத்தில் தங்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடரும் எனவும் தொழிற்சங்கப் பிரதிநிதி தெரிவித்தார். (க-8)

# கவிஞர் இராஜ மனோகரனின் மூன்று நூல்கள் அறிமுக விழா

## திங்களன்று யாழ்.பல்கலையில் நடக்கும்

கவிஞர் கந்தையா இராஜமனோகரனின் மூன்று நூல்களின் அறிமுகவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாற்று, தமிழிசைப் பாடல்கள், வானொலிக் கவிதைகள் ஆகிய நூல்களே இவ்வாறு அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளன.

யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பல்கலைக்கழகப் பட்டப்பின் படிப்புகள் பீடப் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

நூல் வெளியீட்டுரையினை கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் வழங்குவார்.

நாற்று நூலின் மதிப்பீட்டுரையினை இ.குமரனும் தமிழிசைப் பாடல்கள் நூலின் மதிப்பீட்டுரையினை எஸ்.மகேந்திரனும் வானொலிக் கவிதைகள் நூலின் மதப்பீட்டுரையினை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்"ம் நிகழ்த்துவார்.

இறுதியில் நூலாசிரியர் இராஜமனோகரன் ஏற்புரையினையும் நன்றியுரையினையும் நிகழ்த்துவார். (எ-6)

# இருவேறு மோ.சைக்கிள் விபத்துக்களில் ஆறு இளைஞர்கள் நேற்றுப் படுகாயம்

யாழ்ப்பாணம்,டிசெ.23

வடமராட்சி பல்லப்பையில் நேற்று அதிகாலை மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் நால்வர் படுகாயமடைந்தனர்.

நேற்று அதிகாலை வல்லிபுரக்கோயில் நோக்கி இளைஞர்கள் பயணித்த மூன்று மோட்டார் சைக்கிள்கள் பல்லப்பைப் பகுதியில் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதில் இந்த விபத்து நேர்ந்ததாகக் கூறப்பட்டது.

இச்சம்பவத்தில் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்களான சுப்பிரமணியம் குகன் (வயது22), ம.மங்களேஸ்வரன் (வயது 21), ரா.பார்த்திபன் (வயது 20), எஸ் விமல்ராஜ் (வயது20) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

படுகாயமடைந்தவர்கள் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் குகன் மேலதிக சிகிச்சையின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இதேவேளை, நாச்சிமார் கோயிலடியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவர்களான கொக்குவில் கேணியடிப் பகுதியைச் சேர்ந்த பொன்னுத்துரை தயாநந்தன் (வயது 24) இராசேந்திரம் சசிதரன் (வயது 24) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்த இவர்களும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதி விபத்து ஏற்பட்டதாகக் கூறப்பட்டது. (எ-15)


ராஜா யாழ்ப்பாணம்
சரத்குமார், நிகிதா, வடிவேல் நடித்த
ஐயா
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30 (பு.நே.)
நாளை முதல்
அர்ஜுன், ரீமாசென் நடிப்பில்
இயக்கம்: சுந்தர் C
கிரி

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
குளிரூட்டப்பட்டது.
காட்சி நேரம்: 10.30, 2.30, மட்டும் (பு.நே.)
விக்ரம், கிரன் நடித்த
ஜெமினி
தினசரி இரவு: 6.30 9.00 (பு.நே.) (ரீலீஸ)
ஆங்கிலப்படம் THE MUMMY RETURNS
(சி-39821)

நிறஞ்சனாஸ் சங்கானை
தனுஷ் பியா நடித்த
ட்ரீம்ஸ்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
(ரீலீஸ்) THE MUMMY RETURNS

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக அர்ஜுன் (இருவேடம்) சாயாசிங் லைலா வடிவேல் நடித்த
தினசரி 11.00. 3.00. 7.00. 10.00(பு.நே.)
ஜெய் சூர்யா
முற்பதிவுகளுக்கு நாகம்ஸ் சினிமா,
யாழ்.பெயின்ற் காடின், 326,K.K.S.றோட், யாழ்ப்பாணம். (C/39654)


# ஓராண்டு நினைவலைகள்



ஜனனம்: 27 - 06 - 1956
மரணம்: 04 - 01- 2004

அமரர்
**வேலாயுதம் மகேந்திரன்**

அன்புத் தெய்வமே!
கண்ணோரம் நீர் கசிந்து
முடியவில்லை
அதற்குள் ஓர் ஆண்டு ஆனதப்பா
ஆறுதலுக்கு ஆயிரம் உறவுகள்
உண்டு
ஆனால் அப்பா என்றழைக்க
யாருமில்லையே!

த.முகவரி: கோகுல வீதி, கோண்டாவில்
நி.முகவரி: கலைவாணி வீதி, தையிட்டி.
தகவல்: மனைவி, பிள்ளைகள்.
(39985)(29-11-45)

# சகல தனியார் கல்வி நிறுவன இயக்குநர்களுக்கும்

"கிழக்கில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தத்திற்கு வடக்கு உறவுகளின் உதவிப்பயணம்"

கிழக்கிலே ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவி பொருள்களை வழங்குவதற்காக ஒவ்வொரு தனியார் கல்வி நிறுவன இயக்குநர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உதவிப்பொருள்கள்

*1.உலர் உணவு 2.பால்மா வகைகள் 3.சிறுவர்களுக்கான புதிய உடைகள* என்பவற்றை நாளை (வெள்ளி) மாலை 6 மணிக்கு முன்னர் கன்னாதிட்டியில் உள்ள சயன்ஸ் கோல் கல்விநிறுவனத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

விசேட குறிப்பு

1. ஒன்றியத்தின் முன்னனுமதி இல்லாமல் புதிய கல்வி நிறுவனங்களை (பொது, பிரத்தியேகம்) ஆரம்பிக்க முடியாது.
2. இயக்குநர்கள் உங்கள் முத்திரை அளவிலான கலர் புகைப்படம் ஒன்றை எமது இணைப்பாளரிடம் 27.12.2004 முன் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
3. பிரத்தியேக வகுப்பு என்பது தனி ஓர் ஆசிரியர் 10 இற்கு உட்பட்ட மாணவர்களுக்கு நடத்தும் கற்கைநெறி என்பதனை கவனத்தில் கொள்க.

**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**
யாழ். - நல்லூர் பிரதேசம். (சி-39996)(29-11-45) செயலாளர்.

- வெள்ளப் பாதிப்புக்கு ரூபா 2மில்லியன்
- பழைய பூங்கா மீண்டும் மக்கள் பாவனைக்கு
- புற்றுநோயாளர் ஆஸ்பத்திரிக்கு புதிய ஸ்கானர்

# யாழ். - முகமாலை வீதி அடுத்தாண்டு புனரமைப்பு

## செய்தியாளர் சந்திப்பில் அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ். - முகமாலைவரையிலான ஏ-9 வீதி அடுத்த ஆண்டு புனரமைக்கப்படும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன்.

நேற்றுப் பிற்பகல் யாழ். செயலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரச அதிபர் அங்கு தெரிவித்ததாவது:-

ஏற்கனவே வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இன்றும் (நேற்று) மேலும் ஒரு மில்லியன் ரூபா கிடைத்தது.

கிடைத்த 2 மில்லியன் ரூபா நிதியை வைத்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம், குடிதண்ணீர் மற்றும் எதிர்காலத்தில் இவ்வாறான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் அதற்கான முன்னோடி நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளோம்.

மீளக்குடியமர்ந்த மக்கள் என்னும்போது எமது மாவட்டத்தில் 28ஆயிரம் குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. இன்னும் 8ஆயிரம் குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்குவதற்கு கையொப்பத்தை வாங்கிக்கொண்டு நிதிவராத நிலையில் வைத்திருந்து அதில் 2ஆயிரம் குடும்பங்களுக்கு 50 மில்லியன் ரூபா நான் எடுத்துவந்து வழங்கியுள்ளேன். மீதமாக உள்ளோருக்கும் மீள்குடியமர்வு நிதியை வழங்கவேண்டுமென நான் வலியுறுத்திக் கூறிய காரணத்தினால் இன்னும் 200 மில்லியன் ரூபாவை இந்த வருட முடிவிற்குள் தருவதாகப் புனர்வாழ்வு அமைச்சினால் உறுதியளிக்கப்பட்டது. இந்த நிதி கிடைத்ததும் கையெழுத்துப் பெறப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கக் கூடியதாக இருக்கும்.

இந்த விடயத்தில் ஒரு தேக்க நிலை இருந்ததை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

யாழ். குடாநாட்டில் பிரதானமாகப் பாவனையில் உள்ள வீதிகள் அகலமாக இல்லை. வீதிகள் அமைப்பதற்குப் பாவிக்கப்படும் கல் வீதிக்கு ஏற்ற கல் அல்ல. வீரியம் குறைந்த கல் மழைக்கும் வாகனத்தின் பாரத்திற்கும் அது ஈடுகொடுக்க முடியாமல் உள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு வீதி புனரமைப்புக்கு சுண்ணாம்புக் கல்லைப் பாவிக்காமல் தெற்கிலிருந்து கருங்கல் கொண்டுவரப்பட்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் காப் திட்டத்தின்கீழ் யாழ். கண்டி வீதி முகமாலையிலிருந்து புனரமைக்கப்படவுள்ளது. அத்தோடு காப் திட்டத்தின்கீழ் யாழ். குடாநாட்டில் மின்சார விநியோகம் விரிவுபடுத்தப்படவுள்ளது.

நீப் திட்டத்தின் கீழ் ஏறக்குறைய 300 மில்லியன் ரூபா யாழ். மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. சில ஆஸ்பத்திரிகள் குறிப்பாக தெல்லிப்பழை ஆஸ்பத்திரி, உதவி அரச அதிபர் பணிமனை, பிரதேச செயலகக் கட்டடங்கள் என்பன புனரமைக்கப்பட்டு வருகின்றன.

கடைசியாக தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனை புனரமைப்புச் செய்யப்படுகின்றது. இதற்கு மின்சாரத்தால் புற்றுநோயைக் கண்டறியும் இயந்திரம் 100 மில்லியன் ரூபாவிற்குக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அதனை அடுத்தமாதம் கொண்டு வந்து பொருத்தவுள்ளனர்.

இதனைப் பொருத்தியவுடன் மகரகம புற்றுநோய் மருத்துவமனைக்கு எமது மக்கள் செல்லவேண்டிய அவசியமில்லை. தெல்லிப்பழை மருத்துவமனை முழுமையாகப் புனரமைப்புச் செய்யப்பட்டவுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள நெருக்கடி ஓரளவு குறைவடையும்.

தொல்பொருள் என்பது எமது கலாசாரத்துடன் தொடர்புடைய விடயம் இது. யுத்தம் காரணமாகப் பெருமளவில் அழிந்துவிட்டது. எமது பிரதேசத்தில் தொல்பொருள் அருங்காட்சிச்சாலை கவனிப்பாரற்று இருந்தது. அதனை நாம் சென்று பார்த்து தொல்பொருள் அமைச்சுக்கு அறிவித்தபோது. அந்த அமைச்சு எமக்கு 25 லட்சம் ரூபா தந்தமையினால் அது தற்போது புனரமைப்புச் செய்யப்பட்டுவருகின்றது.

பழைய பூங்காவை மக்களின் பாவனைக்குத் திறந்துவிட உத்திதேசித்துள்ளோம். இந்தப் பூங்கா அரசுக்குச் சொந்தமானது அல்ல. அரச அதிபருக்கு சொந்தமானது. 26 ஏக்கர் விஸ்தீரணமுடையது. முதலாவது அரச அதிபரினால் உறுதி எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. விரைவில் காடுகள் அழிக்கப்பட்டுப் புனரமைப்புச் செய்து இந்தப் பூங்கா மக்களின் பொழுதுபோக்கிற்கு திறந்துவிடப்படவுள்ளது - என்றார்.

இக்கலந்துரையாடலில், மேலதிக மாவட்டப் பதிவாளர், சமுர்த்தி நலன்புரித் திட்ட உத்தியோகத்தர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், திட்டப் பணிப்பாளர், புனர்வாழ்வுத் திட்டப்பணிப்பாளர், மேலதிக உதவி அரச அதிபர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (8-6-12)

LOGIC - A/L 2005
மாதிரிப் பரீட்சை
★ பகுதி I, பகுதி II உள்ளடங்கலாக 6 பரீட்சைகள்.
★ வெளிமாணவரும் பரீட்சைக்குத் தோற்றலாம்.
★ விண்ணப்ப முடிவு திகதி 1.1.2005.
★ அனுமதி அட்டைகள் 5.1.2005.
BY: P.கமல்
BRIGHTMAN - நாவலர் வீதி. (39941)

INFORMATION TECHNOLOGY PARK, JAFFNA
Under the purview of the Ministry of Agricultural Marketing Development, Co operative Development, Hindu Affairs and Assisting Education & Vocational Training,
MPCS Building, 127, K.K.S.Road, Jaffna, SriLanka.
Office : 021 222 3641
Fax No : 021 222 3643

New Courses of Study – 2005

Applications are invited for the following courses of study:

1) Certificate in Computer Application (CICA)
(04 compulsory componants and 01 optional componant)
(a) For working people during weekends, duration of 6 months. (Theory 125 hours & Sufficiant Practicals)
(b) For Non working people during weekdays, duration of 3 months. (Theory 125 hours & Sufficiant Practicals)
Course fees : Rs.4000/-

2) Certificate in General Information Technology (CGIT)
Covering G.C.E.(A/L) GIT Syllabus - 2 hours per day, 2 days a week. (80 hours, with sufficent practicals)
Course fees : Rs.1750/-

Note: (1) Application forms and prospectus can be obtained from the IT Park Office from 27th December 2004, on payment of Rs. 30/-.
(2) Registration fees Rs. 250/-
(3) Closing date of applications 10th January 2005
(4) Date of commencement of the courses 17th January 2005
(5) The Course fee can be paid in two installments..

-Executive Officer, Administration.

LOGIC - II
Paper Class - 2005
துரித மீட்டல்
Sat., Sun., - 2.p.m.-4p.m.
BY: P.கமல்
BRIGHTMAN (39986)

MCS
324, பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்
பதிவுகள் 26/12/2004 இற்கு முன் நேரில்

## சுதுமலையில் கத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர் உடனடியாக யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டார். எனினும், அவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்படும் வழியில் உயிரிழந்துவிட்டார் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

மோட்டார் சைக்கிளில் வந்து கத்திக்குத்தை மேற்கொண்டார்கள் எனக் கூறப்படும் இருவரும் உடனடியாக அங்கு நின்றவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

சம்பவத்தை அடுத்து அங்கு சென்ற மானிப்பாய் பொலீஸார் விசாரணை நடத்தியதுடன், சம்பவத்துடன் தொடர்புடையவர்களை பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் யாழ். ஆஸ்பத்திரிப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (எ-6-69)

## தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் சகிதம் முகமாலை தடைமுகாம் உள்ளிட்ட பல முக்கிய பகுதிகளையும் பார்வையிட்டுச் சென்றுள்ளதாக பத்திரிகைச் செய்தி மூலம் அறியவந்துள்ளது. இது பற்றி நாம் மிகவும் கவலையடைந்துள்ளோம். அமெரிக்கத் தரப்பு இங்குள்ள களநிலையை நேரடியாக அறிந்து கொள்வதை நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், எமது அடிப்படை மனித உரிமைகளையே நிராகரித்து நிற்கும் சிறிலங்கா இராணுவத்துடன் மட்டும் சேர்ந்து பார்வையிடுதலே எமக்கு பலவித அச்சங்களையும் நம்பிக்கையீனங்களையும் ஏற்படுத்துகின்றன.

அமெரிக்கா நடுநிலையாக, நியாயமாக நடந்துகொள்ளும் என்றே நாம் திடமாக நம்புகின்றோம். அப்படியான சூழ்நிலையில் அது சிக்கலின் ஒருபக்கம் சாய்கிறதாவென அச்சமுறும் வகையில் இந்த விஜயங்கள் அமைகின்றன் என்பதை மிக மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எனவே இவ்வாறான பக்கச்சார்பாக தோற்றும் நடவடிக்கைகளை தவிர்க்கும் படியும் எமது நியாயமான விடுதலைப் போராட்டத்தை அவ்வாறு அங்கீகரித்து, ஜே.வி.பி போன்ற இனவாத தோல்வியுற்ற கம்யூனிச தத்துவ வாதிகளை புறந்தள்ளி, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை முன் மொழிவுகளின் அடிப்படையில் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்கு மாறு சிறிலங்கா அரசையும் தென்னிலங்கை அரசியற் சக்திகளையும் தூண்டுமாறு தங்களை வேண்டுகின்றோம்.

இவ்வாறு பேச்சை ஆரம்பிப்பது பெரும் பிரச்சினையல்ல என்றே நாம் கருதுகின்றோம். நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளின்படி கூட மூலப் பிரேரணையாக ஒரு விடயத்தை எடுத்தால் மாற்றங்கள், திருத்தங்களை விவாதத்தின் போது சமர்ப்பிக்கலாம். இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகளையும் அப்படியான மூலப் பிரேரணையாகக் கருதி பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறோம் - என்றுள்ளது. (8)

## நினைவுதினம் அனுஷ்டிப்பு

இந்திய இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவடைந்த மேஜர் முரளி, கப்டன் காந்தி உட்பட 10 வேங்கைகளின் 17ஆவது நினைவு தினம் இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அவர்கள் வீரச்சாவடைந்த இடமான கோப்பாய் - மானிப்பாய் வீதியில் உரும்பிராய்ப் பகுதியில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு அப்பகுதி அலங்கரிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், சுடரேற்றல், அகவணக்கம், தேசியக்கொடியேற்றல், மலரஞ்சலி, நினைவுரைகள் ஆகியன இடம்பெறவுள்ளன. (எ-72)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிருப்பார். இலங்கை திரும்ப முன்னர் ஜனாதிபதி குமாரதுங்க தாய்லாந்துக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்வாரென்றும் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி நாடு திரும்பும்வரை பதில் பாதுகாப்பமைச்சராக ரட்ணசிறி விக்கிரநாயக்கவும் பதில் கல்வி, உயர்கல்வி அமைச்சராக மங்கள சமவீரவும் கடமையாற்றவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-க-8)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு, அரசடி பயணியர் வீதிச் சந்தியில் மக்கள் வங்கிக் கட்டடத்திற்கு முன்னால் இப்படுகொலை இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மீதே இத்துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒருவர் தப்பியோடிவிட்டார் மற்றவர் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகியுள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் மகேஸ் சமரதிவாகர விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (எ-க-8-6)

## அரசு முன்வைத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசுக்கும் ஜனாதிபதிக்கும் வேறு திட்டங்கள் உள்ளன. அதேபோன்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியதேசிய முன்னணி தரப்பிலும் வேறு வடிவத்திட்டங்கள் உள்ளன.

இந்நிலையில் 'இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையில் பேச்சு என்பதை' திட்டவட்டமாக குறிப்பிடாமல் இடைக்கால ஏற்பாடு குறித்து பேச்சு என்ற அடிப்படையில் பேசத் தொடங்குவது குழப்பத்தை ஏற்படுத்தும் என்று புலிகள் கருதுகின்றனர் எனத் தெரிகிறது.

இடைக்கால ஏற்பாடு தொடர்பான அரசின் திட்டத்தை இதற்குள் நுழைத்து குழப்பத்தை ஏற்படுதும் வகையில் அரசின் புதிய நிகழ்ச்சி நிரல் அமைந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதுவரைகாலமும் இடைக்கால ஏற்பாடு குறித்து பேசும் அதேநேரம் இறுதித் தீர்வு குறித்தும் பேச வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தி வந்தார்.

ஆனால், அரசு தற்போது சமர்ப்பித்த யோசனைத்திட்டத்தில் அப்படி வலியுறுத்துவதை ஜனாதிபதி கைவிட்டுவிட்டார் என்பதை ஜனாதிபதி தெளிவுபடுத்த வில்லையென அறியவருகின்றது. எனவே, இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையில் பேச்சை ஆரம்பிக்கும்போது மீண்டும் அந்த விவகாரத்தை ஜனாதிபதி கொண்டு வந்து செருகுவதற்கும் வாய்ப்புகள் உள்ளன, என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது போன்ற பல்வேறு குறைகளையும், தெளிவின்மையையும் கொண்டுள்ள இந்த யோசனையை புலிகள் சிரத்தையுடன் கவனிப்பதற்கு இடமே இல்லை என புலிகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்ப்பாகப் புலிகளின் முடிவை விளக்கும் அம்சங்கள் அடங்கிய பதில் அடுத்த ஓரிரு தினங்களில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் மூலம், நோர்வே அனுசரணையாளர்களூடாக இலங்கை அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (எ-க-3)

## நேற்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து 11.15 மணியளவில் வீதியின் இருபக்கமும் நின்ற மக்கள் யாவரும் கைதடிச் சந்தியின் மையப் பகுதியில் ஒன்று கூடினார்கள். அங்கு தென்மராட்சி பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் எஸ். அருந்தவ பாலன் தலைமையில் கண்டனக் கூட்டம் நடத்தப்பட்டது.

இக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் உரை நிகழ்தினார்கள் .அரசு உடனடியாக புலிகளோடு சமாதானப் பேச்சு நடத்த இணங்க வேண்டும் என்றும் போருக்கான ஆயத்தங்களை நிறுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

போராட்டம் ஆரம்பமாகும் முன்னர் அங்கு பெரும் எண்ணிக்கையான பொலீஸார் காவல் கடமையில் ஈடுபட்டார்கள். அத்தோடு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினரும் அங்கு பிரசன்னமாயிருந்தனர். போராட்டம் நடைபெற்ற வேளை கைதடிச் சந்தியிலுள்ள சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டன. அங்கு கடமை புரியும் சகலரும் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர். (ஜ-75-31-117)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.